மேலும், இலங்கை வங்கியானது நீண்ட கால போர்ச் சூழலில் மக்களுடன் இணைந்து பணியாற்றிய வங்கிகளில் முக்கிய வங்கியாகும். அத்துடன் போர் காலத்திலே காசுப்பரிமாறல் இல்லாத நிலையில் காசோலைகளின் மூலம் தனது செயற்பாட்டினை மக்களுக்கு வழங்கியது மட்டுமல்லாது, மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் அயராது செயற்பட்டது. மேலும், இலங்கை வங்கியின் யாழ் அதிமேற்தரக் கிளையானது ஊரடங்கு காலப்பகுதியிலும், கொரோனா தொற்றுக் காலப்பகுதிகளிலும் தனது செயற்பாட்டினை திறம்பட ஆற்றி, மக்களுக் கான சேவையினை வழங்கியது. இது போன்று இனிவரும் காலங்களிலும் மக்களுக்குரிய சேவைகளை தொடர்ச்சியாக சிறப்புடன் வழங்க வேண்டுமென வாழ்த்து கின்றேன்.

நன்றி

**திரு. இ. ஜெயசேகரன்**
தலைவர் - யாழ் வணிகர் கழகம்


| President | Vice President | Secretary | Asst. Secretary | Treasurer |
|---|---|---|---|---|
| R.Jeyasegaran | S.Sivakumaran | S.Sivalohesan | N.Jehamohan | S.Sutharsan |
| இ. ஜெயசேகரன் | ச.சிவகுமரன் | ச.சிவலோகேசன் | ந.ஜெகமோகன் | சு.சுதர்சன் |
| 077 651 0696 | 077 722 2558 | 077 308 6894 | 077 483 6923 | 077 774 7095 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கை வங்கியின் ஐந்தாவது கிளையும் வடமாகாணத்தின் தாய் கிளையுமான யாழ் அதிமேற்றரக் கிளை இன்று 75 ஆண்டுகள் நிறைவு செய்து ஆல விருட்சமாய் வீறுநடை போட்டு வாடிக்கை யாளர்களுக்கு அதிசிறந்த சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இக்கிளையில் வங்கியியல் வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தை தொடங்கியது மாத்திரமன்றி 6 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றி இன்று வாழ்த்துச் செய்தி கூறும் அளவிற்கு அனுபவம் தந்து வளர்த்தது இக்கிளை என்பதில் பெருமை அடைகின் றேன்.

அனுபவமிக்க மூத்த வங்கி அதிகாரிகளிடம் பெற்ற அனுபவத்தினால் இன்று இந்நிலையை பெற்றுள்ளோம் என்பதை மறந்து விட முடியாது. இக் கிளையானது சிறப்பான வாடிக்கையாளர் சேவையை மாத்திரமன்றி அனுபவமிக்க ஊழியர்களையும் உருவாக்கிக் கொண்டி ருக்கின்றது.

அது மாத்திரமன்றி வட மாகாணத் தின் சகல பாகத்தில் இருக்கும் மக்களை தன் வாடிக்கையாளராக கொண்டுள்ளமை இக் கிளையின் சிறப்பம்சமாகும். தொடர்ந் தும் சிறப்பான சேவையை வழங்கி வட மாகாணத்தின் முன்னுதாரணமான கிளை யாகத் திகழ வாழ்த்துவதோடு இச்சந்தர்ப் பத்தினைத் தந்த யாழ் அதிமேற்தர கிளையின் பிரதான முகாமையாளருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சு. நித்தியா**
பிராந்திய முகாமையாளர் (யாழ்.கிழக்கு),
இலங்கை வங்கி,
வடமாகாணம்.

- *எப்போதும் கடினமான பாதைகளை தேர்ந்தெடுங்கள்.*
- *அந்தப் பாதைகளில் தான் போட்டிகள் அதிகம் இருக்காது அதன் இறுதியில் கிடைக்கும் வெற்றி உங்களை உச்சத்தில் நிறுத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Area Manager

I have great pleasure in sending my warm felicitation on 75th Anniversary of Jaffna Super Grade branch. The oldest branch, which was opened on 02.02.1945, now has total assets of 85 Bn.

For Bank of Ceylon, Jaffna branch is the pioneer branch in Northern Province. Since banking industry is one of the key sector which introduce the latest technological solutions to its clients, Jaffna Branch served as the first branch in North, which provides innovated banking solutions such as ATM, CDM, CRM, Off site ATMs and the Smart Zone.

Since the establishment, the branch has undergone a long journey under the leadership of many distinguished banking professionals. Their invaluable services has uplifted the branch position as a Super Grade I. I take this opportunity to congratulate those Managers and the staff for their commitments, loyalty and integrity.

I trust under the present leadership of the Chief Manager Mr. K. Sivagnanasundaram, the branch will grow further by adopting digitalized innovative banking solutions to its valuable customers, contribute positively to upgrade the living standards of the people in the area.

I take this opportunity to congratulate everyone who contributed for the success of this event.

**Mrs Sujatha Nethananthan**
Area Manger (Jaffna West),
Bank of Ceylon,
Northern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பவள விழாவை பெருமிதத்துடன் வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண நகரில் பெரு விருட்சமாய் வீற்றிருந்து நிழல் தருகின்ற யாழ்ப்பாண அதிமேற்தரக்கிளை 75வது ஆண்டு நிறைவை கொண்டாடும் இந்த தீர்க்கமான தருணத்தில் அதற்கான ஆசிச் செய்திகளை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

1939ல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கியானது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு பரந்தளவில் தனது சேவைகளை விரிவாக்க வேண்டிய தருணத்தில் நாட்டின் பல பாகங்களிலும் கிளைகளை நிறுவ வேண்டியிருந்தது. இந்த தருணத்தில் வங்கியின் 5வது கிளையாக 1945ம் ஆண்டில் யாழ்ப்பாணக் கிளையானது ஆரம்பிக்கப் பட்டது.

வடபகுதி மக்களின் பொருளாதார பலத்துக்கு அச்சாணியாக விளங்கும் சேமிப்பிற்கு தாயகமாக எமது யாழ்ப்பாணக் கிளை விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. அதே போல் எமது கிளையில் சிறியளவில் கடன்களைப் பெற்று படிப் படியாக தமது தொழில் முயற்சிகளை வலுப்படுத்தி பெரும் தொழிலதிபர்களாக மாறியவர்கள் பலர் உள்ளனர்.

வடமாகாண இலங்கை வங்கி கிளைகளுக்கு எல்லாம் தாய்க்கிளையாக விளங்கும் யாழ்ப்பாணக் கிளை யுத்த காலத்தில் எமது மக்களுக்கு வழங்கிய அளப்பரிய சேவையை எளிதில் மறக்க முடியாது. இக்கிளையில் கடந்த காலங்களில் சிறப்பான சேவைகளை ஆற்றிய முகாமை யாளர்களையும் ஊழியர்களையும் இச் சந்தர்ப்பத்தில் பெருமையோடு நினைவு கொள்வ தோடு இன்றைய போட்டித்தன்மை யான சூழலில் அனைத்து சவால்களையும் எதிர் கொண்டு முன்நோக்கிச் செல்லும் எமது முகாமைத்துவத்தையும் ஊழியர் களையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

**ஞா. பரதன்**
பிராந்திய முகாமையாளர் (வன்னி),
இலங்கை வங்கி,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரேஷ்ட முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையில் 1939ல் உருவாக்கப்பட்ட இலங்கை வங்கியானது அன்றிலிருந்து இன்று வரை இலங்கை வாழ் மக்களின் மாபெரும் நம்பிக்கை நிதியமாக புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. வடக்கு மாகாணத்தின் வங்கித் தாய் வீடாகிய இலங்கை வங்கியின் யாழ் அதிமேற்தரக் கிளையின் 75வது ஆண்டு நிறைவு பவள விழாவிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாண மண்ணில் முதன் முதலில் 1945ல் இலங்கை வங்கியின் 5வது கிளையாக ஆரம்பிக்கப்பட்ட இவ் வங்கியானது இன்று அதி மேற்தரக்கிளையாக தனது சேவையைப் பரப்பி பெருவிருட்சமாக வளர்ந்து 2020ல் பவள விழாக் காணுகின்றது. இந்த வளர்ச்சிக்கு காரணகர்த்தாவாக இருந்தவர்கள் பெறுமதி மிக்க பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளரும் ஆரம்பம் முதல் இன்று வரையும் பணிபுரியும் அர்ப்பணிப்பு மிக்க பணியாளர்களும் ஆகும்.

யாழ் அதி மேற்தரக் கிளையில் எனது சேவை 1999ல் வங்கி உத்தியோகத்தர் உதவியாளராக தொடங்கி 2013ம் ஆண்டு வரை 14 வருட சேவையாக தொடர்ந்தது. எனது வங்கிச் சேவைக் காலத்தில் யாழ் அதிமேற்தரக்கிளையில் பணிபுரிந்த காலம் மிகவும் பசுமையானது. நான் அங்கு பல் வேறுபட்ட வங்கிப் பிரிவுகளில் அருமை ஐயா முதல் பிறேம்குமார் ஐயா வரை வேறுபட்ட 11 தலைமைத்துவத்தின் கீழ் பணிபுரிந்தேன். எனது தலைமைத்துவப்பண்பு வளர்ச்சியில் யாழ் அதிமேற்தரக்கிளையின் சேவை அனுபவம் பெரும் பங்கை வகிக்கிறது.

யாழ் மண் பல இடர்களை சந்தித்த காலப்பகுதிகளில் குறிப்பாக இடப்பெயர்வுகளின் போதும், இடைத்தங்கல் நிலையங்களில் இலங்கை வங்கி செயலாற்றி மக்களின் வங்கித் தேவையை நிறைவு செய்தது. முன்னைய காலத்தில் தொழில் நுட்பம் அதிகம் வளர்ந்திராத சூழலில் முற்றிலும் மனித வலு மூலமே வங்கிக் கருமங்கள் இடம்பெற்றன. இடர்காலத்தில் தமது உயிரை பணயம் வைத்து அர்ப்பணிப் போடு பணி செய்த பணியாளர்கள் போற்றுதற்குரியவர்கள். இவ்வாறு பணியிலும் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பினாலும் இலங்கை வங்கியானது இன்று வங்கித் துறையில் முதன்மையாக விளங்குகின்றது.

இவ்வகையில் ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள பணியாளர்களின் பணியை மகிழ்ந்து போற்றுகின்றேன். அத்தோடு இலங்கை வங்கி யாழ் அதிமேற்தரக் கிளையின் 75வது ஆண்டு வங்கிப் பயணத் தில் கைகோர்த்து பயணிக்கும் வாடிக்கையாளர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றேன். தொடர்ந்தும் வங்கியானது நின்று நிலைத்த ஓங்கி உயர்ந்து அர்ப்பணிப் போடும் நன்மதிப்போடும் பணி செய்திட இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி உ. யோகராஜசிங்கம்**
சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடல் பிரிவு),
இலங்கை வங்கி,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Staff in front of the Old Building



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Blessing Message from the Senior Manager

It is my great pleasure to bring blessing message to Souvenir for the 75th Anniversary of Jaffna Supra Grade Branch, Bank Of Ceylon, Jaffna. Jaffna Supra Grade was opened as first Branch of Bank Of Ceylon in the Northern Province in the year 1945, Jaffna Supra grade Branch is shining as one and only Supra grade Branch in the Northern Province.

The Jaffna Branch is growing very fast with support of the staff and their customers. Jaffna Branch is playing prominent role in providing big contribution to the Bank of Ceylon and People of Jaffna peninsula through their efficient and better service 1945. It is pleasure to wish you all the best on this occasion of 75th anniversary of Bank Of Ceylon Jaffna Supra Grade Branch

I wish to thank Mr. K. Sivagnanasundaram, Chief Manager, Jaffna Supra Grade Branch, all the present and former Managers and staff and Valuable customers for providing the valuable contribution to run the branch effectively for the last 75 Years. I offer my felicitation and wish the Jaffna Branch have a bright future.

**K. lyngararas**
Senior Manager,
Bank Of Ceylon, Super Grade Branch,
Vavuniya.

"A stone is broken by last stroke of hammer. that does not means the 1st stroke of hammer is useless. Success is the result of continuous efforts"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Senior Manager

I extend my heartiest congratulations to your branch for completing 75 glorious years of success in banking business. With your commitment and sincerity you have time to time proved your worth and have gained the much deserved recognition and fame. You have achieved tremendous growth and have built eminent good will in the community. It's not just a corporate anniversary. It's an anniversary of a family that only grew strong defying the odds. It has been a wonderful journey altogether.

On this blissful and charming day of your Corporate anniversary. May you continue the journey of success with pride! I wish you happiness and many more years of success!

**Mrs S. Senthuran**
Senior Manager,
Bank of Ceylon,
Jaffna 2nd Super Grade Branch.

Smile is the best medicine for any problems..
So always keep smiling..
You are the artist of your life
don't dive the paint brush to anyone else



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Senior Manager - Audit

It is with great pleasure that I share this message to be published in the souvenir to mark the occasion of the 75th Anniversary of Bank of Ceylon, Jaffna Supra Grade -1 to be held on year 2020.

Jaffna Supra Grade Branch has made remarkable contribution to the public and private sectors since 1945. Also I am pleased to note that the quality of customer service and customer relationship by the branch are excellent. Further in digitalization of banking sector they are the pioneers in Northern Province.

Bank of Ceylon, Jaffna Supra Grade Branch can be proud of its record of achievement during the past seventy five years. Presently there are more than hundred thousands of customer base branch and we are confident the branch will continue to provide quality service for public and private sector.

I take this opportunity to congratulate the Chief Manager, Staff members and Customers of the Supra Grade Branch for their achievement and wish them success in their endeavours.

**P. Thineshkumar**
Senior Manager (Audit),
Bank of Ceylon,
Northern province.

> A good Speech should be like a women's skirt;
> long enough to cover the subject and short
> enough to create interest.
> **- Winston Churchill-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Tribute to Jaffna Supra Grade Branch on its 75th Anniversary

It gives me great pleasure to send this message to mark the 75th Anniversary of Jaffna Supra Grade Branch.

Being the first ever opened branch of Bank of Ceylon in the Northern Province, it had pioneered the banking services to North and playing a commendable role in uplifting economic prosperity of people from all walks of Life.

75 years brought many changes and challenges; Jaffna Supra Grade Branch has evolved through it by embracing with new technologies and continues to excel in Customer Service.

I am really proud to say that Jaffna Supra Grade Branch is my first branch in my banking career. It had provided me great opportunity to work with well experienced Staff and Managers.

At this 75th year, I look back the history and remember all the staff who worked hard to bring the branch to this epitome of banking. I wish the present staff to continue the legacy of Excellency in Customer service which is imparted in us for generations with enthusiasm and commitment.

Good luck

**Mrs Y. Thanesh**
Senior Manager ( Regional Loan Center),
Bank of Ceylon,
Northern Province.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTHERN PROVINCE - 2020

| | JAFFNA EAST | JAFFNA WEST | WANNI | TOTAL |
|---|---|---|---|---|
| SUPER GRADE I | | | | 01 |
| SUPER GRADE II | | | | 02 |
| A GRADE | 04 | 03 | 01 | 08 |
| B GRADE | | 01 | 02 | 03 |
| C I GRADE | 01 | 05 | 01 | 07 |
| C II GRADE | 12 | 14 | 16 | 42 |
| DISTRICT SECRETARIAT BR | 01 | 01 | 03 | 05 |
| LIMITED SERVICE CENTRE | | 01 | | 01 |
| REGIONAL LOAN CENTRE | | | | 01 |
| ATM | 13 | 21 | 17 | 51 |
| CDM | 04 | 04 | 04 | 12 |
| CRM | 08 | 05 | 10 | 23 |

10813(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Chief Manager

It is my privilege to be the Chief Manager of Bank of Ceylon Jaffna Supra grade branch at the occasion of its Platinum Jubilee celebrations, as immensely served branch to Jaffna people for the last 75 years and the 5th branch of 81 years old, giant financial institution of Sri Lanka, the Bank of Ceylon, established on 01st August 1939.

This branch invaluably contribu ted to the Jaffna community, especially to the merchants, by continually reinvesting, while preserving and promoting their traditional economic and livelihood. It's my great content ment, being the 34th Manager of this branch, and commemorating the anniversary.

Due to civil unrest prevailed in past decades, people lived in North-East regions of the country, faced waves of displacements, loosed the lives of their beloved ones and lost their possessions. On 30th October 1995, whole people lived in 'Valikamam', had to displace towards south peninsula and rest of the country. Due to that juncture Chief Manager of this branch and the staff who were working under him had placed their own interest apart and willingly worked together to shift all the important documents in order to provide uninterrupted service even in the displaced situation.

After the resettlement, in 1996 banks had to face new challenges. Since there were no roads connected with the southern, bankers brought liquid cash, banking equipments, and stationaries by means of air and sea in order to fulfill the financial need of peninsula people. Remarkably though, three state banks and a few private banks only were in operation in Jaffna in the era.

During the year 2002, Branch was migrated into computerized system from manual operations. An Automatic Teller machine also introduced in that year for the use of our valued customers. Then in April 2005, the system was integrated into ICBS (Integrated Comprehensive Banking System) and the branch came under the concept of "One Bank Many Branch". Since then, our customers are facilitated to operate their accounts in any branch across the country.

After civil war brought to an end, the branch enhanced its facilities by introducing safety locker. It is not superfluous in mentioning that this branch



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

had contributed considerably on the new products (such as digital products) and services launched by the bank time to time.

Jaffna is the parent branch of Jaffna-Kachcheri branch, Jaffna-Main Street Branch, Nallur Branch and Jaffna-Bus Stand Branch. These were the extension offices of Jaffna Branch in the past and ATMs also installed at each location. However, those were exclusively maintained by the Jaffna branch. At present this branch maintaining 02 ATMs outside the branch, one in Jaffna Teaching Hospital and the other at Jaffna Railway station. Further, the branch has built a 'Smart Zone' to provide around the clock customer service. The branch kept opened for customer service from 8.00a.m to 3.00 pm every day in a year except special holidays.

The present building of the branch was built in the year 1960. Since it's life passes 60 years, which has to be renovated and to be modified to the current nature in a manner making warm and friendly impression.

As a Fifth branch of Bank of Ceylon, this was comprised with an international unit, which was famous for its services. It is the expectation of all, which should be resumed since that would essential as two international transport means- Kankesanthurai Harbour and Palaly Airport- in this Peninsula are under proposal.

Certainly, Bank of Ceylon continues its contribution towards the development, prosperous and secured future of the nation significantly, while preserving its cultural and economical nature.

Whereas remembering the 50th anniversary celebrated in the year 1995 releasing a Golden Jubilee souvenir, I'm glad in thanking and appreciating the service rendered by the former Managers, on behalf of my team.

It's great pleasure to me, to appreciate and thank the unit heads, officers and staff who are working in this branch. Also I thanking to everyone who contributed to make of this souvenir, especially the Asst. General Manager of Northern Province, who tenderly guide us, and put his utmost effort in the release of this souvenir. While thanking, I pray for the blessing of God on our valued customers, well-wishers, retired bankers and on all others.

**K. Sivagnanasundaram**
Chief Manager,
Bank of Ceylon,
Jaffna Supra Grade Branch.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the former Deputy General Manager

It gives me immense pleasure in sending this message on the occasion of the Bank of Ceylon Jaffna Branch completing seventy five years of dedicated and distinguished service to its customers and general public in this region. The branch was established in February 1945 among the first batch of branches opened to serve the banking needs of the public. Since then the branch grew rapidly from strength to strength offering various products and services to meet the growing needs of its customers. It is commendable that the branch was able to achieve this success despite facing severe hardships owing to the thirty year civil war, mainly due to the commitment and dedication of its staff.

I recall pleasant memories of my association with the branch, first by working as a relieve officer in 1960 and later in 1981 when I had the privilege of training the staff and setting up the international division.

With the liberalization of trade and payment in 1977 and the relaxation of import restrictions, it was mandatory that all payments for imports are by Letters of Credit (LC). LC facilities were available only at the bank's interna tional division in Colombo. Therefore, the bank's import customers had to travel to Colombo several times to open LCs, to make payment and collect shipping documents etc undergoing severe hardships. In order to assist the customers to overcome this hardship, the bank made a policy decision on the advice of the Chairman Mr. Wije wardena to open international divisions in the main outstation branches. The first such division was established in Kandy. Following the success of the international banking operation in Kandy, it was decided to open the international division in the Jaffna Branch.

I was given the task of training the staff and setting up the international division in Jaffna Branch to provide import facilities to its customers. The staff selected to work in this division were trained in the intricacies of the international banking operations, specially international rules



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

relating to LC operations called the Uniform Customs and Practice for Documentary Credits, and the related risks to which the bank is exposed.

The International Division was ceremoniously opened in 1981 by Mr. Wijewardena. Chairman, Bank of Ceylon. At the reception held in the evening the business community thanked the Chairman profusely for providing International Banking facili ties at their door step. Bank of Ceylon was the only bank to provide such banking facilities in Jaffna at that time.

The division functioned under the leadership of Mr. Villavarajah.

Banks are facing complex challenges due to severe competition, rapidly evolving customer expectati ons, stringent regulatory frame work, digitalization etc. Jaffna Branch is no exception, I have no doubt that the Branch will overcome these challenges successfully.

I wish the Branch all success.

**A. Kathiravelupillai**
Retired Deputy General Manager,
(International and Treasury),
Bank of Ceylon.

Alphabet 'O' stands for OPPORTUNITY which is absent in YESTERDAY available in TODAY and thrice in TOMORROW, Never lose HOPE..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Former Assistant General Manager

On the occasion of the 75th Anniversary of Bank of Ceylon Jaffna Supra Grade Branch, it is my immense pleasure to convey the warmest congratulations and best wishes to the Chief Manager and his team.

During my first year of banking career I reported at this branch in 1975. As the Chief Manager, I had an opportunity to celebrate its 50th Anniversary in 1995. I recollect the memories of Mr M J A Jeyanathan, the Chief Manager in 1975. He enhanced the productivity and standard of the bankers by exposure to regular lectures by consultants. Thanks to his effective approach. We worked with staff over 185 who serviced the largest customer base in the Jaffna district.

From 1983, when the situation in Jaffna completely changed, we went through a journey which we could never imagine. However, the experience gained at this branch gave me tremendous strength to work during the difficult times which hindered the banking activities. The dedication, honesty and sincerity displayed by the staff worked at this branch helped them to complete the task successfully during the periods of war and under situations such as shortages of liquid cash, stationery, staff, etc. Apart from all these critical situations, we never came across any fraud in Jaffna district. This fact was recognised by the Senior management, which reflected the loyalty of the staff even under challenging times.

I also express my gratitude to Mr C Selvakumaran (DCSO) and his team of security officers, who handled the security of the Jaffna branches and cash movements despite various kinds of threats. Knowledge gained from his security services helped me to handle unexpected circumstances.

I wish to share one of those valuable lessons learned while serving at Jaffna, Vavuniya and Manipay; During life-threatening situations, as long as you are honest, sincere and uphold the core institutional values, you could succeed with the blessings of God.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

During my career as Chief Manager from 1990-1996 there were instances where we paid only limited cash of Rs. 2,000/ to Rs.5,000/ depending on the availability of cash. Similarly there were occasions that we couldn't accept cash over Rs. 10,000/ per customer. We faced this situation until we started getting down cash from Colombo by ship regularly. The cash was paid to the Heads of Government Departments and Institutions in the ship itself. However, there were no robbery in the Jaffna area during this period.

It's time for us to focus on the physically challenged and other vulnerable people and take initiatives to improve the living standards of people in Jaffna. I wish the Bank of Ceylon, the Jaffna branch and the staff all success in their endeavours and to support the development of the area.

My attachment to this Jaffna Branch is recollected with pleasant memories which I cherish in my life.


**Mrs. K. Thurairajah**
Retired Assistant General Manager,
Bank of Ceylon.

One best book Is equal to Hundred good Friends but one good Friend is equal to a Library..

**- DR. A.P.J. Abdul kalam -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுகமான நினைவலைகள்

1967ம் ஆண்டு வங்கியில் இணைந்து கொண்ட நான் களுத்துறைக் கிளையில் இணைத்துக் கொள்ளப்பட்டேன். சகோதர மொழி பேசும் பலர் அங்கு இருந்த போதிலும், அக்காலத்தில் எமது ஊரில் இருப்பது போன்ற உணர்வை அவர்களது நட்பும் பண்புகளும் ஏற்படுத்தியதால் ஊருக்கு மாற்றவேண்டும் அல்லது விண்ணப்பிக்க வேண்டும் என நான் எண்ணியதில்லை.

ஆனாலும் எனக்கு ஒரு வருடம் கழித்து 1968ம் ஆண்டு யாழ் மேற்தரக் கிளைக்கு மாற்றல் தந்தார்கள். அப்போது யாழ்கிளை என்ற பெயர் மட்டும் தான் மேற்தரக் கிளையென்று பிற்காலத்தில் தான் தரமுயர்த்தப்பட்டது. அறுபதுகளின் நடுப் பகுதியிலிருந்தே வங்கிக் கிளைகளில் சிங்கள மொழி மூலமான செயற்பாடுகள் தொடங்கி விட்டன. காரணம் அரசாங்க இலாகாக்களில் அநேகமானவை தங்கள் காசோலைகளைச் சிங்கள மொழியில் எழுதியதோடு சில கடிதங்களையும் சிங்கள மொழியிலேயே எழுதினார்கள்.

அக்காலத்தில் வங்கியில் நிரந்தரமாவதற்கு மூன்று வருட காலத்திற்குள் J.S.C எனும் தரத்தை ஒத்த Singhala test பாஸ் பண்ண வேண்டும் இல்லையேல் வங்கியில் நிரந்தரமாக முடியாது.

பிற்காலத்தில் இந்த தகுதிகாண் பரீட்சை இரத்து செய்யப்பட்டது. ஆனாலும் இந்தப் பரீட்சையில் தேறாதவர்களை வேலை நீக்கம் செய்ய ஒரு நடவடிக்கையும் வங்கி எடுக்கவில்லை. இருந்த போதிலும் இந்தப் பரீட்சையில் ஒருமுறை தேறாதவர்கள் தாமாகவே வேறு வேலை தேடிக் கொண்டார்கள். Clerical Service இல் இணைந்து கொண்டார்கள். ஆனால் வங்கியில் இணையும் முன்பே எனக்குச் சிங்களத்தில் பேசும் அறிவு ஓரளவு இருந்தது. அதை மேலும் ஊக்கமாக விரிவுபடுத்தி ஒரு சிங்கள ஆசிரியரிடமும் படித்ததால் எட்டு மாதத்தில் வந்த முதல் பரீட்சையிலேயே சித்தியடைந்தேன்.

நான் யாழ் கிளைக்கு மாற்றலாகியதற்கு இதுவும் பிரதான காரணம். அப்போது யாழ் கிளையில் சிங்களம் வாசிக்கத் தெரிந்தவர்கள் அநேகமாக இல்லையென்றே சொல்லலாம். காசோலைகள் ஏற்றுக் கொள்ளும் கரும பீடத்தில் சிங்களம் தெரிந்த ஒருவர் வேண்டுமென்றே கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

எனக்கு நினைவிருக்கும் வரை அப்போது ஒரு சிங்களம் பேசும் உத்தியோகத்தர் Sub Manager தரத்தில் இருந்தார். ஆகவே கருமபீடத்திற்கு ஒருவரின் தேவை அவசியமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அங்கிருந்த சிங்களம் பேசும் உத்தியோகத்தர் பெயர் திரு.W.A. Gunaratna ஆகும். ஆனால் இவர் பிறகு A.G. Wirasinghe என்ற பெயரில் ஒரு பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுக்குப் பின்னர் வேறு ஒரு வங்கியில் ஒரு உயர் பதவி வகித்தவர். W.A.G என்ற எழுத்துக்களிலேயே அவரின் பெயர் வெவ்வேறாக அறியப்பட்டது. மிகவும் திறமையான சாந்தமான ஒரு உத்தியோகத்தர்.

நான் அங்கு கடமையாற்ற வரும் போது முகாமையாளர் திரு. R.P நடராஜா என்பவராவார். மிகவும் கண்டிப்பானவர். பிற்காலத்தில் ஒரு பிரதிப் பொது முகாமை யாளராக ஓய்வு பெற்றவர். அப்போதைய உதவி முகாமையாளர் திரு. T. முருகையா ஆவார். இவரும் கண்டிப்பிற்குப் பெயர் போனவர்.

இவர்களுடனும் இன்றும் சில மூத்த வங்கியாளர்களுடனும் பணியாற்றிய சில நினைவலைகளைப் பகிர்ந்து கொள்வதற்கா கத்தான் இந்தக் கட்டுரையை எழுது கின்றேன்.

அப்போது எல்லாம் கணனிகள் இல்லை. சகல வேலைகளும் Ledger posting machine மற்றும் Adding machine உதவியுடன் தான் நடந்தது.

சேமிப்பு பகுதி முழுவதும் எமது கையெழுத்து மூலம் மட்டுமே செயற்பட்டு வந்தது. சேமிப்புப் புத்தகத்தில் பதிவது பேரேட்டில் பதிவது எல்லாமே கைகளால் தான்.

நடைமுறைக்கணக்கு மட்டும் Ledger Mechine கள் மூலமாகப் பதியப் பட்டன. அப்போது "Ledger" களில் பதிவுகள் செய்யப்பட்ட பின்னர் அந்த Voucher களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் அறிக் கையில் (Statements) பதிய வேண்டும். பகலில் வேலை செய்யும் பணியாளர்களால் இரண்டையும் செய்ய முடியாததால், பிற் பகல் 2 அல்லது 3 மணிக்கு ஒரு ஷிப்ட் (Shift) போடுவார்கள். அதில் இரண்டு / மூன்று பணியாட்கள் மட்டுமே வேலை செய்வார்கள் அவர்களுக்கு Night staff என்று பெயர்.

அவர்களது ஒரே வேலை ஆயிரக் கணக்கான வவுச்சர்களை, அதாவது பகலில் Ledger களில் பதியப்பட்டவற்றை வரிசைக் கிரமமாக Statement களில் பதிவது தான். இதற்கு Ledger machine கள் உபயோகிக் கப்படும். அவற்றையெல்லாம் பதிந்த பின்னர் அவர்களது வேலை முடிந்து விடும்.

அடுத்த நாள் விடியற் காலையில் வேலை தொடங்கும் முன் "Calling out" என்ற நிகழ்ச்சி நடத்தப்படும். இப்போதிருக்கும் பலருக்கு இந்த நிகழ்ச்சி தெரியாது என்று நினைக்கின்றேன். இது Ledger மற்றும் Statement Balance சரியாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறை.

Ledger officer statements எல்லா வற்றையும் வைத்துக் கொண்டிருப்பார். மற்ற லிகிதர் ledger print செய்யும் போது கிடைக்கும் கார்பன் பிரதியுடன் இருப்பார். இது Balancing sheet எனப்படும். வவுச்சர் வைத்திருப்பவர் ஒவ்வொரு நம்பராகச் சொல்வார். உடனே Balancing sheet வைத்திருப்பவர் அதில் உள்ள நிலுவையைச் சொல்வார். (இது பகலில் பதியப்பட்ட நிலுவை) உத்தியோகத்தர் அந்த statement ஐச் சரிபார்த்து வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நாங்கள் call out செய்வது கருமபீடத்திற்கு வெளியே தற்செயலாக வரும் ஒரு பிறமனிதன் கூடக் கேட்டுவிடக் கூடாது என்பதில் வங்கி கண்டிப்பாக இருந்தது. அதனால் தான் வாடிக்கையார் நேரத்திற்கு முன்னர் call out முடிய வேண்டும் என நாம் அறிவுறுத்தப்பட்டிருந்தோம். ஏனெனில் ஒருவர் கணக்கு இலக்கத்தை சொல்லும் போது மற்றவர் நிலுவையைச் சொல்வார். அதாவது calling out செய்யும் போது இதைக் கூடப் பிறர் யாரும் கேட்டு விடக் கூடாதென்று நிர்வாகம் மிகவும் கண்டிப்பாக இருந்தது.

அப்போது chief clerk என்று ஒரு பிரதான இலிகிர் இருப்பார். சம்பளப் பட்டியல் கூட அவர்தான் தயாரிப்பார். கிட்டத் தட்ட chief clerk ஒரு முகாமையாளர் மாதிரித் தான் செயற்படுவார். நாங்கள் அருகே போக கூட பயப்படுவோம். அப் போது திரு. உமாபதி என்பவர் (தற்போது அமரராகி விட்டார்) பிரதம இலிகிதராக இருந்தார். கண்டிப்பில் கடுமையானவர். எனக்கு நினை விருக்கிறது. அப்போது திரு நவரட்ணம் என்று ஒரு லிகிதர் இருந்தார். அவர் திரு உமாபதியின் மேசைக்கு முன்னால் கூடப் போகமாட்டார். அவரது மேசையைச் சுற்றிக் கொண்டு பின்புறமாகத் தான் போவார். அதுவும் ஒரு காலம்.

என்னுடன் பணியாற்றிய மறக்க முடியாத பலரை இன்னும் என் மனம் மறக்கவில்லை. அனேகமானோர் அமரர் களாயிருப்பார். அவர்களில் திருவாளர்கள் மகாலிங்கம், (அமரர்) திருநாவுக்கரசு (Ledger officer), திரு.சேகராசசிங்கம் (Savings Officer In - charge), W.A. குணரட்ண (Savings Ledger Officer) பிற்காலத்தில் (A.G.Wirasinghe - DGM) அமரர் உமாபதி (பிரதம லிகிதர்) நகுலசிங்கரட்ணம் போன்றவர்களை நான் மறக்க முடியாது.

அப்போது யாழ்கிளையில் வேலைப் பழு மிக அதிகம். எல்லாம் Manual என்ற படியால் நாங்கள் சில வேளையில் இரவு ஒன்பது மணிவரை கூட வேலை செய்வோம். Night staff சிலவேளை இரவு ஒரு மணிவரை வேலை செய்துவிட்டு அங்கேயே உறங்கி விடுவார்கள்.

ஆனாலும் நாங்கள் ஒரு நாளும் சலிப்படைவதில்லை. Month End நாட்களில் Trial Balance out ஆனாலும் அன்றும் அதைச் சரி செய்யும் வரை வீடு போக மாட்டோம் சில வேளைகளில் வங்கியிலேயே உறங்கி அடுத்த நாள் விடியப்போய் மீண்டும் காலை 8.00 க்கு வந்து விடுவோம்.

அப்படியான இரவுகளில் பலரது அனுபவங்களைச் சொல்லி எல்லோரும் குதூகலமாக இருப்பதால் வேலைப்பழு இருப்பதில்லை.

யாழ் கிளை இலங்கை வங்கியின் ஐந்தாவது கிளையாக கிட்டத்தட்ட 1945ம் ஆண்டளவில் திறக்கப்பட்டது என நினைக் கிறேன். அப்போது யாழ் வைத்தியசாலைக்கு முன்னால் இருந்த ஒரு உணவகத்தின் கட்டிடத்தில் இது இயங்கியது. பரணி ஹோட்டல் என நினைக்கிறேன். முதலாவது முகாமையாளர் பிற்காலத்தில் பொது முகாமையாளராக வந்த ஒரே தமிழர் அமரர் சி.லோகநாதன் ஆவார்.

அதன் பின்னர் தற்போது உள்ள இடம் அரசாங்கத்திடம் 99 வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தகைக்கு எடுக்கப்பட்டு இந்தக் கட்டிடம் கட்டப்பட்டது. ஆதியில் இந்த இடம் ஒரு மயானமாக இருந்து பிறகு கைவிடப்பட்ட இடம் என்று நான் அறிந்தேன்.

இந்தக் கட்டிடம் கட்டும்போது இரவுக் காவல் கடைமையிலிருந்த சில பணி யாளர்கள் நான் பணியாற்றிய காலத்தில்கூட இருந்தார்கள். அவர்கள் தாங்கள் காவலி ருக்கும் போது பேய் நடமாட்டம் உள்ளதாக கதை கதையாகக் கூறுவார்கள். உண்மை யோ பொய்யோ நாங்கள் அவற்றை மிகவும் இரசித்துக் கேட்டிருக்கிறோம்.

இந்த யாழ் கிளையில் நான் குறுகிய காலமே பணியாற்றினாலும் அந்த நினைவு களும் என்னுடன் பணியாற்றிய பலரும் காலத்தால் மறக்க முடியாத நிகழ்வுகளும் மனிதர்களும் ஆவார்.

இப்படியான ஒரு குதூகலமான அனுபவங்கள் தற்போதுள்ள சமகால வங்கி யாளர்களுக்கு அநேகமாக கிட்டியிராது என்றே நான் நினைக்கிறேன். அப்போது வங்கி தான் எங்கள் இரண்டாவது வீடாக இருந்தது. வீட்டில் பிரச்சனையானாலும் வங்கி வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து நாமும் வளமாகி வங்கியையும் உயர்த்தினோம்.

பழையவற்றை நினைவு கூறுவதே ஒரு சுகமான அனுபவம் தான் இந்த நினைவுகளை மீண்டும் மீட்டெடுக்க ஒரு சந்தர்ப்பம் தந்தவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்

**க. பாலசுப்பிரமணியம்**
ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி,
வடபிராந்தியம்.

## சிந்தனைத் துளிகள்

- *உழைப்பின் வேர்கள் கசப்பானவை ஆனால் அதன் கனி இனிப்பானது*
- *படித்தவன் போடும் கணக்கு தப்பாகலாம் ஆனால் படைத்தவன் போடும் கணக்கு தப்பாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வங்கி வரலாறும் பயணித்த பாதையும்

நிதித்துறை ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய வகிபாகமாகின்றது. அதனை நிர்வகிப்பது ஒரு நாட்டின் மத்திய வங்கியும் ஏனைய வங்கிகளின் நடவடிக் கைகளும் ஆகும்.

வங்கிகளைப் பொறுத்தமட்டில் நாட்டில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட வங்கியாக எமது இலங்கை வங்கி 01.08.1939ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் சேவைகளைப் பூர்த்தி செய்வதில் தன்னிகரற்று விளங்குகின்ற எமது வங்கி "தேசத்தின் வங்கியாளன்" என்ற மகுட வாசகத்திற்கு உரித்துடையதாகி முதற்தர வங்கியாக கணிக்கப்பட்டு பல வருடங்களாக தொடர்ந்தும் கோலோச்சி வருகின்றது.

இன்று நாடு பூராகவும் 645 கிளை களைக் கொண்டு இயங்கும் இலங்கை வங்கி தனது ஐந்தாவது கிளையாக யாழ்ப்பாணக் கிளையை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலையின் முன்னைய வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடத்திற்கு முன்னால் அப்பொழுதிருந்த "ஹாட்டல் பரணி" கட்டிடத்தில் 02.02.1945ல் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தது. அந்நாட்களில் இக்கிளை ஒரு சிறிய கட்டிடத்திலேயே தனது செயற்பாடுகளை ஆரம்பித்து மக்களுக்கு சேவையாற்றியது. தற்பொழுது எமது கிளை கம்பீரமாக சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.

சாதாரணமாக ஒரு வங்கியாளன் 30 தொடக்கம் 35 வருட வங்கிச்சேவையை வழங்குபவர்களாகவே அவர்களது வயது அமைந்திருக்கும். சிலர் மட்டும் இதற்கு விதிவிலக்காகி ஓர் இரு வருடங்கள் அதிகமாக சேவையாற்றக்கூடியவர்களாக விளங்குவார்கள். அந்த வகையில் எனது வங்கிச்சேவை 1970 ஒக்டோபர் தொடக்கம் 2008 ஒக்டோபர் வரையான ஏறத்தாழ 37 வருடங்கள் வங்கிச் சேவையை அர்ப் பணிப்புடன் ஆற்றுவதற்கு எமது வங்கித் தாய் எனக்கு இடமளித்து வாழ் நாளில் மறக்க முடியாத பல அனுபவங்களை கற்றுத் தந்துள்ளாள். இன்றும் எனது வாழ்க்கைக்கு உறுதுணையாக ஓய்வூதியம் வழங்கி எனது குடும்பம் மகிழ்ச்சியாக வாழவழி அமைத் துக் கொடுத்தாள்.

யாழ்ப்பாணக் கிளை தனது 75வது வருட நிறைவினைக் கொண்டாடி மகிழும் இந்த வேளையில் ஒரு மலரினை வெளி யிடுவது அதன் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாகும். அவ்வாறு யாழ்ப்பாணக் கிளை தனது 50வது வருட நிறைவின் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மலரினை வெளியிட்டது எனக்கு நினைவிருக்கின்றது.

இந்த மலரினை வெளியிட்டு இதில் எனது அனுபவங்கள் பகிர்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமையானது ஒரு மட்டற்ற மகிழ்ச்சியை தருகின்றது.

இவ்விடயத்தில் எனது வங்கிப் பாதையையும் எனக்குக் கிடைத்த பதவி உயர்வுகளையும் சுருக்கமாக குறிப்பிட விரும்புகின்றேன்.

எனது வங்கிச் சேவையானது 1970ல் இளநிலை எழுது வினைஞராக ஆரம்பித்தது. முதன் முதலில் தலை நகர் கொழும்பு யோர்க் வீதியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தின் சர்வதேசப் பிரிவில் கடமை யாற்றினேன். 1973ன் காலப் பகுதியில் வங்கியின் செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்று கமநல சேவை நிலையங்கள் தோறும் வங்கிகள் தமது கிளைகளை நிறுவின. அதன் காரணமாக மாத்தளை மாவட்டத்திலுள்ள நாவுல கமநல கிளை முதல் அம் மாவட்டத்தின் சகல கமநலக் கிளைகளிலும் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. மிக குறுகிய காலப்பகுதியில் அதாவது 1975ல் உப முகாமையாளராக பதவி உயர்வு பெற்றேன். அதனைத் தொடர்ந்து 1976ல் திருமலை மாவட்டத்திலுள்ள குறிஞ்சாக்கேணியில் கடமை புரிந்தேன்.

காலம் கரைந்தது. வாழ்க்கைப் பயணம் தடம் புரண்டது. மூன்று தசாப் தங்களாக புரையோடிப் போன வடக்கு கிழக்கில் ஏற்பட்ட இனக் கலவர உள்நாட்டு யுத்தம் எனக்கு பல அனுபவங்களைக் கற்றுத் தந்தது.

1977ல் பேரூந்து பயணத்தின் போது மயிரிழையில் உயிர் தப்பினேன். இவ் வேளையில் திருமலை மாவட்ட பிரதான கிளைக்கு மாற்றலாகி கிளையின் கடன் அறவீட்டு பகுதியின் பதில் உதவி முகாமையாளராக கடமையாற்றிக் கொண்டி ருந்த பொழுது 1983ல் யாழ்ப்பாணம் இரண்டாம் கிளைக்கு மாற்றலாகி 1984ல் எனது பிறந்த மண் ஊர்காவற்துறையில் சேவையாற்றும் அரிய வாய்ப்பை பெற்றேன். அத்துடன் கிளையின் முகாமையாளர் தரத்திற்கும் உயர்த்தப்பட்டேன்.

பதவி உயர்வின் மகிழ்ச்சியை விட யுத்த சூழ்நிலையில் காகிதாதிகள் தட்டுப்பாடு, இயந்திர உபகரணங்கள் பழுதடைந்தால் சீர்படுத்த தலைநகர் கொழும்பில் இருந்து ஆளணி வருகை யின்மை, ஊழியர்களின் போக்குவரத்து பாதிப்பு ஆகியவற்றிற்கு முகம் கொடுத்து வங்கி நிர்வாகச் செயற்பாட்டின் போது பல்வேறு படிக்கட்டுக்களை கடந்து வங்கிச் சேவை முடிந்த வரை திறம்பட நடந்தேறியது.

அதே வேளையில் எமது ஊர்காவற் றுறைக்கிளை அமைவிடம் காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையே அமைந்துள்ள நீரேரியின் அருகில் ஊர்காவற்துறைக் கரையில் அமைந்திருந்ததால் காரைநகர் இராணுவ முகாமில் இருந்து ஏவப்படும் செல்வீச்சு எமது கிளையை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து அழிவுகளை ஏற்படுத் தியதால், கட்டாய இடப்பெயர்வுக்கு நாம் முகம் கொடுத்து எமது கிளையை வாடிக்கை யாளர் நலன் கருதி செருக்கன் சந்திக்கு இடமாற்றினோம். அங்கு மின்சார வசதிகள் இல்லை. கோடைக்கால குடிநீர் பிரச்சனை ஆகியவற்றிற்கு முகம் கொடுத்து வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளை வாடிக்கையாளர் நலமே பெரிதென வங்கியை நடத்தி வந்தோம்.

இக்காலப் பகுதியில் ஓய்வூதியர்களின் நலன் காத்து சுருவில் பிரதேசத்தில் ஒரு விசேட கரும பீடம் ஒன்றை அமைத்து வாரத்தில் ஒரு நாள் சேவையாற்றினேன். இந்த விடயம் சாதாரண வரிகளாக அமைந்தாலும் யுத்த காலத்தில் பல ஓய்வூதியர்களின் வலி சுமந்த நினைவுகளுக்கு ஒத்தடம் கொடுப்பதாக பலரது பாராட்டையும் பெற்றுத் தந்தது. இதுவே பின் நாளில் திருவிழாக்கால விசேட கரும பீடங்கள் அமைத்து வங்கிச் சேவையை ஆற்ற வழி சமைத்தது என்றால் அது மிகையில்லை.

யுத்தமும் தன் கோரப் பிடியை இறுக்கியது. ஊழியர்களின் ஒருமித்த மனம் தளராப் பங்களிப்புடன் மக்களுக்கு வங்கிச் சேவையை எந்த நிலையிலும் வழங்க வேண்டும் என்ற கரிசனையை ஏற்படுத்தியது.

ஆனாலும் 1990ல் யுத்தம் உக்கிரம் அடையத் தொடங்கியது. தீவகத்தின் அனைத்துப் பிரதேசங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது மக்கள் யாழ் மாவட்டத்தை நோக்கி இடம் பெயர்ந்தார்கள். இன்று நினைத்தாலும் என்னால் நம்ப முடியாதுள்ளது. அத்தகைய ஒரு சாதனை படைத்த விடயம் - ஷெல் வீச்சு விமானக் குண்டு வீச்சுக்கு மத்தியில் மாட்டு வண்டியில் வங்கி ஆவணங்கள் காகிதாதிகள் திரவப் பணம் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். இதில் என்னுடன் கடமையாற்றிய சகல ஊழியர்களின் அர்ப்பணிப்பும் போற்றுதற்குரியது. விசேடமாக ஒருவர் பெயரைக் குறிப்பிட்டாலும் மற்றவர்கள் மனதை காயப் படுத்தி விடும் என்பதால் அவ் வேளையில் என்னுடன் கடமையாற்றிய சகலரையும் நெஞ்சிருத்தி என்றென்றும் நன்றி உடையவனாவேன். வங்கித் தாய்க்காக அன்று அவர்கள் சிந்திய வியர்வை என் கண்முன்னே என் ஆளுமைக்கு கிடைத்த இமாலய வெற்றியாக இருந்தாலும் என்றும் நான் மறப்பதற்கில்லை.

இக் காலப் பகுதியில் பிறிதொரு சாதனையையும் எமது ஊழியர்கள் நிகழ்த்திக் காட்டினார்கள். அக்காலப் பகுதியில் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புச் சான்றிதழ் மூலம் வைப்புக்களைத் திரட்டுவதில் ஊர்காவற்துறைக் கிளை வட மாகாணத்தில் முதலிடத்தில் இருந்தமையை குறிப்பிட்டே ஆகவேண்டும். இது ஒரு இடப்பெயர்வின் போது சாதித்த சிறப்பம்சமாகும். பலரது பாராட்டுக்களும் எமக்குக் கிடைத்தது. என் ஆளுமைக்கு ஒத்துழைப்பு நல்கிய சகல ஊழியர்களையும் நினைவு கூறத்தக்கது மட்டுமல்லாமல் துன்பம் வரும் வேளையிலும் நாம் சிரித்து மகிழ வைத்த சம்பவம் ஆகும்.

மீண்டும் இடப்பெயர்வு 1995 நவம்பரில் வலிகாமம் ஒட்டு மொத்தமாக பெரியதொரு இடப்பெயர்வை சந்தித்தது. அப்போதும் எமது ஊழியர்களும் நானும் எடுத்த செயற்பாடு காரணமாக மீசாலையில் உள்ள கமநல சேவை நிலையத்தில் எமது கிளையை இயக்கி யுத்தத்தினால் இன்னலுற்ற எமது வாடிக்கையாளர்களுக்கு சேவையை தடங்கலின்றி நடத்தினோம்.

1996ல் வவுனியாக் கிளைக்கு மாற்றலாகி வவுனியாக் கிளையின் அபிவிருத்திக் கடமையில் ஈடுபட்டேன். வவுனியா அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது வட பகுதிக்கு ஒரு பாலமாக அமைந்து இருந்தது.

இந்த பாதையில் பயணித்த எனக்கு 1998ல் யாழ் மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராக கடமையாற்றும் அரிய வாய்ப்பு கிடைத்தது.

இங்கு கடமையாற்றிய எனது சேவைக் காலம் ஒரு பொற் காலம் ஆகும்.

யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் மாணவர்களை நியமித்து அவர் தம் நலன் காத்து மாணவர்களுக்கான சிறப்புச் சேமிப்புத் திட்டங்களை தோற்று வித்தமை வங்கி நடவடிக்கைகளின் ஒரு மைல் கல்லாகும்.

யாழ் மாவட்டத்தில் யாழ் பிரதான கிளையும் யாழ் இரண்டாம் கிளையும் மட்டுமே கணினி மயப்படுத்தப்பட்டு வலைப் பின்னல் வரிசையில் கொண்டு வந்த போதிலும் ஏனைய கிளைகளுக்கு தலை நகர் கொழும்பில் இருந்து ஆளணி வருவதற்கு சகோதர மொழி பேசுவோர் பயத்தின் காரணமாக மறுத்ததால் நான் பகீரத முயற்சி எடுத்து இறுதியில் எமது ஊழியர்கள் நால்வரை கொழும்புக்கு அனுப்பி அவர்களை இத்துறையில் தேர்ச்சி பெற வைத்து அவர்களால் யாழ் மாவட்ட ஏனைய ஊழியர்களுக்கு இரண்டு மாத (சனிக்கிழமை - ஞாயிற்றுக்கிழமை உட்பட) பயிற்சி கொடுத்து சகல கிளைகளையும் வலைப்பின்னல் அமைப்புக்குள் கொண்டு வர முடிந்தது.

தங்க நகை அடகுக்கு பல உள்ளக வெளியக எதிர்ப்புக்களின் மத்தியிலும் பல முயற்சிகளின் பின் அத்திட்டத்தை அறிமுகப் படுத்தியமையும் நகை அடகுச் சேவையில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுத்தந் தமை எனது முயற்சிக்கும் ஆளுமைக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இத்தகைய அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் வங்கித் தாய் எனக்கு இந்தியாவின் பூனே வங்கி நிறுவகத்தில் பயிற்சி அளித்து புலமைப் பரிசில் வழங்கி கௌரவித்தாள்.

இவ்வாறு வங்கி வரலாற்றுப் பதிவுகள் என்னால் எழுதப்பட்ட வரிகள் என் மனதில் இளமை நினைவுகளை சுமந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் எமது யாழ். மேற்தரக் கிளை மென்மேலும் வளர்ச்சி கண்டு எமது மக்களுக்கு நல்லதோர் சேவை புரிந்திட வாழ்த்தி நிற்கின்றேன்.

**B.A அருமைநாயகம்**
ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி,
வட பிராந்தியம்.

*மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.*

*புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.*

*– தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது ஆசியுரை அல்ல, அனுபவக் கட்டுரை

இலங்கை வங்கி மேற்றரக்கிளையின் 75ம் ஆண்டுவிழா சிறப்பு மலருக்குரிய சேவைகள் பற்றிய ஆசியுரை வழங்க எவ்வளவு தூரம் நான் பொருத்தமானவன் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய வங்கி வாழ்க்கையின் சில சம்பவங்களை குறிப்பிடுவதன் மூலம் மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராகக் கடமையாற்றியமை பற்றிய நினைவுகளையும் பகிர்ந்து கொள்வதில் தவறில்லை என நினைக்கின்றேன்.

1939இல் இலங்கை வங்கி எனும் அன்னைக்கு யாழ் மண்ணில் பிறந்த இக்குழந்தைக்கு 75 வயதாகியும் முதுமை பெறாது தனது பூட்டப்பிள்ளையை விட சுறுசுறுப்பாகவும் நவீன யுக்திகளுடனும் பணியாற்றும் இக்கிளை 100வது ஆண்டு மலரையும் வெளியிட்டு சாதனை புரிய வேண்டும் என இத்தால் வேண்டிக் கொள்கின்றேன். ஏனெனில் ஆவணங்கள் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த மேற்றரக்கிளையின் சிரேஷ்ட முகாமையாளராக திருமதி.கமலராணி துரைராஜா இருந்த போது திரு. C. நாகரட்ணம் அவர்கள் பிரதமலிகிதராக (Chief Clerk) இருந்து ஏனைய ஊழியர்களுடைய அயராத உழைப்புடன் (பொன் விழா) 50ம் ஆண்டு மலர் வெளியிடப்பட்டமையே எனது சிந்தனையையும் தூண்டிவிட்டது. இவ்வழியை பின்பற்றியே நான் ஸ்ரான்லி வீதிக்கிளையின் முகாமையாளராக இருந்த போது வெள்ளி விழா மலரை 11.11.2002 இல் (25ம் ஆண்டு நினைவு ஆண்டு –Silver Jubilee) வெளியிட்டேன்.

இதே பாணியில் திரு.K.P ஆனந்தநடேசன் அவர்கள் பருத்தித்துறை கிளையில் முகாமையாளராக இருந்தபோது அக்கிளையின் 50வது ஆண்டு நினைவு மலரை (பொன்விழா- Golden Jubilee) வெளியிட்டார்.

இப்போது எனது கௌரவத்திற்குரிய திரு. கு. சிவஞானசுந்தரம் அவர்கள் இப்பாதை யிலே 75ம் ஆண்டு சிறப்பு மலரை வெளியிட முன் வந்தமைக்காக அவருக்கும், அவருக்கு உறுதுணையாய் இருப்பவர்களுக்கும் நான் இங்கு பாராட்டுக்களையும் எனது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**என்னைப் பற்றி எனது மணிவிழா மலரில் எனது அன்பிற்குரிய ஊழியர்கள் வழங்கிய செய்திகளில் சிலவற்றை கீழே தர விரும்புகின்றேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. K.Sivagananathan



Mr. K.Kanesamoorthy

வங்கியில் எனது மூத்த குருவாக திகழ்ந்தவர் வங்கியியற் பேரறிவாளன் அமரர் K.சிவகணநாதன். இவர் ஒரு காசாளராக சேர்ந்து, London branch - country manager ஆக இருந்து Advisor to the Central Bank Governor ஆக செயற்பட்டவர். இலங்கை வங்கியில் பல புரட்சிகள் புரிந்தவர். வங்கித்துறையில் பட்டங்களைப் பெறவும் நடைமுறை வங்கி நடவடிக்கை களின் சூட்சுமங்களின் அறிவினைப் பெறவும் எனக்கு இவர் ஊக்கியாக இருந்தது போல மூத்த வங்கியாளர் திரு. K. கணேசமூர்த்தி ஐயா அவர்களே பின்வரும் அமைப்புக ளை உருவாக்க கருப்பொருளாக இருந்தவர்.

**1.** வங்கியாளர் சங்கம் யாழ்மாவட்டம் (Bankers association Jaffna District)- இது அனைத்து வங்கிகளின் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்து போர்க்கால சூழ்நிலையில் பல கூட்டுமுடிவுகளை எடுக்கவும்- இராணு வத்தினரது கெடுபிடிகளை சமாளிக்கவும் பெரும் உதவியாக இருந்தது. இதன் ஒருங் கிணைப்பாளராக நான் செயற்பட்டேன்.

**2.** யாழ்மாவட்ட இலங்கை வங்கி விளையாட்டு , நலன்புரிச் சங்கம் - ( Sports Welfare and Art Literary Association BOC - Jaffna District ) இவ் வமைப்பபில் குடா நாட்டில் வேலை செய்யும் அனைத்து இலங்கை வங்கி ஊழியர்களும் அங்கத் துவம் பெற வழிசெய்யப்பட்டது. பல்வேறு கிளைகளிலிருந்து ஓய்வு பெறுவோர் அனைவரையும் ஒன்றுகூட்டி கௌரவித்து, ஞாபகார்த்தமாக அவரவர் பெயர் பொறிக்கப் பட்ட குத்துவிளக்கு, மலர்மாலைகள், பொன்னாடைகள் போன்றவற்றாலும் சகல அங்கத்தவர்களாலும் கௌரவிக்கப்பட்டு வழியனுப்பி வைக்கப்படுவர்.

**3.** “ஊக்கி” (The Catalyst) என்ற காலாண்டு சஞ்சிகையை பிரதம ஆசிரியராக இருந்து வெளியிட்டு, வங்கியியல் சம்மந் தமான பல கட்டுரைகளையும் வங்கியின் போட்டிப் பரீட்சைக்களுக்குரிய வினாவிடை களையும் பிற கல்விமான்களது கட்டுரை களையும் இது உள்ளடக்கியதாக வெளி யிட்டேன்.

இவற்றிற்கெல்லாம் எனக்கு உறு துணையாக இருந்தவர்களுள் முதன்மை யானவரான அமரர் பொன் பாலகுமார் அவர்கள் இங்கு கௌரவத்துடன் நினைவு கூரப்படவேண்டிய ஒருவராவார்.

**4.** இலங்கை வங்கி ஊழியர்களுக்காகவும் ஏனைய வங்கியாளருக்குமான சில சேவைகள்:

**அ.** தனிப்பட்ட முறையில், சர்வ கலாசா லைப் பேராசிரியர்களுடன் என்னால் “ வட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna college under graduate Dept. "இல் நடாத்தப்பட்ட வங்கிப் பரீட்சைக்கான நிலையம்" பின்னர் வங்கியாளர் சங்கத்தின் முயற்சியினாலும், எனது குரு மு.சிவகணநாதன் அவர்களின் ஊக்குவிப்பாலும் 2002 ம் ஆண்டு London chartered institute of bankers என்பதன் வடமாகாணக் கிளை (Affiliated Branch for Northern Province) மேற்படி நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதில் முக்கிய பங்காற்றியவர்களாக எமது BOCயின் திரு. மு. உலகநாதன், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் (Regional Manager) திரு. T. ரகு அதன் AGM ஆக இருந்த திரு. K. ஆனந்தராஜா மற்றும் Jaffna college சேர்ந்த விரிவுரையாளர் திரு. அ.குமாரவேல்ஆகியோரைக் குறிப்பிடலாம்.

எனது அனுமானப்படி ஆயிரத்திற்கு மேற்பட்ட வங்கியாளர் வங்கியியல் பரீட்சைகளில் சித்தியெய்தி இருப்பர்.

**ஆ.** 1995ம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தில் நல்கிய சேவைகள் என மணி விழா மலரில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு.

இக்காலகட்டத்தில் வலிகாமத்தில் இடம்பெற்ற பாரிய ஒட்டுமொத்த இடப்பெயர்வினால் இங்கிருந்த சகல வங்கிக் கிளைகளும் சாவகச்சேரிக்கும், வடமராட்சிக்கும் மிகச் சொற்ப ஆவணங்களுடன் தற்காலிகமாக நகர்த்தப்பட்டன.

இவ்வேளையில் இவர் (ந.சிவரட்ணம்) யாழ். மேற்தரக்கிளையில் உதவி முகாமையாளர் தரத்தில் கடமையாற்றினார். இக்கிளை திருமதி K. துரைராஜா அவர்களின் முகாமைத்துவத்தில் இருந்தது. திரு.ந.சிவரட்ணம் மற்றும் தற்போதைய அச்சுவேலிக் கிளை முகாமையாளர் திரு. வ.புவனேந்திரன் ஆகியோர் வடமராட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையினால் தங்கள் கடுமையான தியாகங்கள் மூலமாக இக்கிளையை (Jaffna Supra grade) பருத்தித்துறையிலும் ஏனைய எமது வங்கிக் கிளைகளை சாவகச்சேரியிலும் நடாத்த உதவினர். இக்கால கட்டத்தில் இலங்கை வங்கியானது ஏனைய வங்கிகளை விட முன்னோடி வங்கியாக திகழவைத்ததுடன் அளப்பரிய சேவைகளை செய்து எமது வங்கியின் " தேசத்தின் வங்கியாளர்" என்ற பெயரையும் நிலை நிறுத்தினார்.

குண்டூசி தொடக்கம் மின்பிறப்பாக்கி வரை உபகரணங்களை ஒழுங்கு செய்ததுடன் சக ஊழியர்களுக்கான இருப்பிட வசதிகளையும் செய்து கொடுத்ததை நினைத்து அவர் திருப்திப்படுவதை நண்பர்களாகிய நாம் அறிவோம். ஆனாலும் இடப்பெயர்வின் போது திரவப்பணம் உட்பட வங்கியின் ஆவணங்களைக் காப்பாற்றிய ஊழியர்களுக்கு தான் எவ்வளவு முயன்றாலும், அப்போதைய உதவிப்பொது முகாமையாளர் உட்பட உயர் முகாமைத்துவம் எந்தவித பாராட்டுக் கடிதங்களையோ (Appreciation letter) உயர்பதவிக்கான விசேட புள்ளிகளையோ (Merit marks) இதுவரை வழங்கவில்லை என்ற மனநெருடலுடன் இருப்பதாகக் கூறினார். இவ்விடயத்தில் அக்கால சேவையின் போது உயிர் துறந்த திரு.அல்பிறட் போன்ற உத்தியோகத்தர்களையும் அந்தளவு கடுமையாக உழைத்த ஏனைய ஊழியர்களினது சேவைகளையும் நினைவு கூருகின்றார்.

**குறிப்பு :-** இக்காலத்தில் திரவப்பணம் மிகவும் தட்டுப்பாடாக இருந்தது. எனவே பணத்திற்கு பதிலாக வங்கி ஆணைகளே (Pay Orders) வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr.W.D.L.B .Abeywardane

இவ் இக்கட்டான காலகட்டத்தில் வடமாகாணத்திற்கு திரு. அபே என்பவரே முதன்மைப் பாதுகாப்பு அதிகாரியாக (D.C.S.O) இருந்தார். இவரது முயற்சியால் எமது தலைமையகத்திலிருந்து ரொக்கப் பணத்தை பருத்தித்துறை துறைமுகத்திற்கு கப்பல் ஊடாக கொண்டுவர ஆவன செய்தார். அப்பொழுது Chief Manager ஆக இருந்த திருமதி. K. துரைராஜா அவர்கள் மிகத்துணிவுடனும் தியாக சிந்தனையுடனும் துறைமுகத்திலுள்ள கப்பலுக்குச் சென்று, நூலேணியில் (Rope Ladder) கப்பலின் தளத்திற்குப்போய் பணத்தை பொறுப்பேற்று வந்தமையை இந்த இடத்தில் நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

2004ம் ஆண்டில் சிரேஷ்ட முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று பதுளை ஊவா மாகாண அலுவலகத்தில் கணக்காய்வு பகுதித் தலைவராகவும், (Team leader -audit dept. பின் வன்னிப் பிரதேச மாவட்ட முகாமையாளராகவும் (Area manager- Wanni) கடமை புரிந்து 2005ம் ஆண்டின் இறுதியில் யாழ் மேற்தரக் கிளையின் (Jaffna Supra Grade Branch) சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமை புரிந்தார்.

**5.** B.O.C வடபிராந்தியத்துடன் தொடர்புடைய வேறு சில வரலாற்றுப் பதிவுகள் வருமாறு:

**அ.** மேலே குறிப்பிடப்பட்ட D.C.S.O அபே என்பவர் தென்னிலங்கையைச் சேர்ந்த BOC நண்பன். இவர் Mr. W.D.L.B.Abeywardane ஆவார். இவருடைய சேவையைப் பற்றி இங்கு நான் நிச்சயமாக குறிப்பிட்டேயாக வேண்டும். இதற்கு முந்திய பந்திகளில் ஒரு சில வார்த்தைகள் கூறிய போதும் மேலதிகமாக சில விடயங்களை கூற விளைகின்றேன்.

இம் மாகாணத்திற்கு (NP) இவர் சேவையாற்ற வந்த காலம் 1993ஆம் ஆண்டு. ஆனால் இவருடைய சேவை முக்கியமாக 1995ம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தையும் தாண்டி நீண்டகாலம் தொடர்ந்தது.

இடப்பெயர்வு காலத்திலும் சரி அதற்கு பின்னரும் சரி இவரது சேவை வடமாகாண இலங்கை வங்கி ஊழியர்களுக்காக அர்ப்பணம் செய்யப்பட்ட ஒன்றாகும்.

இடப்பெயர்வு காலத்தில் யாழ் மக்கள் ஒட்டுமொத்தமாக தென்மராட்சி மற்றும் வடமராட்சி போன்ற பிறபகுதிகளுக்கு இடம்பெயர்ந்த போது காரைநகர் கிளை திறக்கப்பட்டு தென்னிலங்கை நண்பர்கள் வந்து அங்கு சேவையாற்றினார்கள். இக்கிளை முப்படைகளுக்குமான ஊதியங்கள், மேலதிக கொடுப்பனவுகள் போன்றவற்றை முக்கியமாக செய்த போதும், காரைநகரில் இடம்பெயராது வாழ்ந்த முதியோர்களுக்கும், குடும்பங்களுக்கும் தனது சேவையை ஆற்றியிருந்தார்.

Cash transport - இக்காலப்பகுதிகளிலும் இதற்குப் பின்னரும், மூன்று நான்கு ஆண்டுகளாக கொழும்பிலுள்ள எமது தலைமையகத்திலிருந்து திரவப்பணம் (Liquid cash) ஒவ்வொரு தடவையும் பல இலட்சங்கள் ரூபா செலவில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஹெலிகொப்டர் மூலமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி ஊடாக எமக்கு வந்து சேர்ந்தன. இச்செலவுகள் யாவும் (மில்லியன் கணக்கில்) கிளைகளிடையே பகிர்ந்து பொறுப்பேற்கப்பட்டது. ஆனால் இவரது முயற்சியாலும் தலையீட்டாலும் இராணுவத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களது இராணுவ விமானங்கள் மற்றும் இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் கொழும்பிலிருந்து எவ்வித செலவுமின்றி முழுக்க முழுக்க இலவசமாக இவரால்தான் பணம் கொண்டுவரப்பட்டது. இதே பாணியில் தான் அந்த இக்கட்டான காலத்தில் இவருடைய உதவியுடன் ICRC flag உடன் கப்பல்களில் பணம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது. இக்காலப்பகுதிகளில் திரு. M. சண்முகசுந்தரம் மற்றும் K. கணேசமூர்த்தி ஆகியோர் மாவட்ட முகாமையாளர்களாக பணியாற்றினார்கள். ஒருதடவை இப்போது இளைப்பாறியுள்ள திரு. K.பாலசுப்ரமணியம் (AGM) அவர்கள் இவ்வாறு நூலேணியில் (Rope ladder) ஏறும்பொழுது தவறி கடலினுள் விழுந்ததையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

திரு. அபே அவர்கள் உத்தியோக பூர்வமாக கொழும்பிற்கு சென்று வரும் பொழுதெல்லாம் ஊழியர்களுக்குத் தேவையான மருந்து, பெட்ரோல் போன்றவற்றையெல்லாம் கொணர்ந்து வழங்குவார். அதுமட்டுமல்ல இயல்புநிலை வரும்வரையில் குறிப்பாக மேற்தரக்கிளை ஊழியர்களுக்கான சமைத்த உணவுகளையும் உலர் உணவுகளையும் இராணுவத்தினரின் முகாம்களிலிருந்து பெற்று வழங்கிவந்தார். இவரது சேவை வடமாகாணத்தில் 1993 - 2000ம் ஆண்டு வரை நீடித்தது. இவரது சேவையைப் பாராட்டி இலங்கை வங்கி தலைமையகம் Chief security office of Entire Bank of Ceylon என்ற பதவி உயர்வைக் கொடுத்து கௌரவப்படுத்தியது.

ஆ. "out sourced staff" எனும் வெளிக்கள ஊழியர்களை எமது ஆளணியில் சேர்ப்பதற்காக நான் இரண்டாம் கிளையின் முகாமையாளராகவும் திரு. K. பாலசுப்ரமணியம் அவர்கள் AGM ஆகவும் திரு. B.A அருமைநாயகம் அவர்கள் OM ஆகவும் பணிபுரிந்த காலப் பகுதியில் (2002களில்) (யுத்தச் சூழ்நிலையால் மிக நீண்ட காலமாக வடமாகாணத்திற்குரிய ஆகக்குறைந்த ஆளணியைக் கூட எமது தலைமையகம் தரவில்லை) அப்போது DGM (Branches and Dev. Banking ) ஆக இருந்த திரு. S.ரனசிங்க குடாநாட்டுக்கு வருகை தந்து முகாமையாளர்களின் கூட்டத்தை கூட்டி பல இலக்குகளை (Targets) அடையவேண்டும் என இடித்துரைத்தார். அன்றாட வங்கி நடைமுறைகளையே செயற்படுத்த 50 வீதமான ஆளணிகூட இல்லாத நேரத்தில் இந்த இலக்குகளை அடையும்படி கேட்டதே நியாயமில்லை என நான் சுட்டிக்காட்டினேன். எனவே தற்காலிக ஊழியர்களை (Casual employees) நியமிக்க AGM அவர்களுக்கு அதிகாரம் வழங்கும்படி கேட்டபொழுது அது நடைமுறைச் சாத்தியம் இல்லையெனக் கூறி மாற்று வழியாக மேலே கூறப்பட்ட வெளிக்கள ஊழியர்கள் எனும் எண்ணக்கரு பற்றி கூறி அதன் மூலம் தாங்கள் கோரும் அடிப்படைத் தராதரங்கள் (Basic qualifications) உள்ள ஏதாவது அமைப்பினூடாக இக்காரியத்தை மேற்கொள்ள அனுமதி தருவதாக ஒரு மாற்றுவழியை கூறிச்சென்றார். இதற்குப் பொருத்தமாக "வடமராட்சி தட்டச்சு சுருக்கெழுத்தாளர் சங்கத்தினூடாக" ஏறக்குறைய 100 ஊழியர்களை நியமித்து அவர்களின் அளப்பரிய சேவை மூலம் வடமாகாண ஆளணிப் பற்றாக்குறையை சமாளித்தோம். இவ்விடயத்தில் - மரணித்த எமது ஊழியர்களது குடும்ப பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுள் பலர் இன்று நிரந்தரமாக் கப்பட்டதுடன் சிலர் உத்தியோகத்தர் பதவி களையும் வகித்து வருகின்றனர். ஆனால் ஒரு சிலர் மிகவும் பாதிக்கப்பட்டு எந்தவித ஓய்வூதிய நன்மைகளுமின்றி மிகவும் மனக்கசப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் சிலர் இறந்தும் விட்டனர். இவர்களுக்காக என் மனதில் ஒரு நெருடல் வாழ்நாள் முழுவதும் இருந்து கொண்டே இருக்கும்.




திரு. E.பிரமேராஜன் (இறுதியில் Acting Chief Manager - Jaffna Supra grade கிளையில் கடமையாற்றி 2019இல் ஓய்வுபெற்றவர்)




திரு. W.விஜயகுமார் (இவ்வாக்கத்தினை எழுதும் போது திரு நெல்வேலிக் கிளை முகாமையாளராக (Branch Manager) கடமை புரிந்து வருகிறார்.

**இ.** Introduction of ICBS system to Northern Province

இந்த நவீன Online system வடமாகா ணத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட போது அதற்குரிய குழு (Team) கொழும்பிலிருந்து வருகை தந்து இங்குள்ள ஊழியர்களுக்கு அதுபற்றிய அறிவையும் பயிற்சியையும் அளித்து தாமாகவே Jaffna Supra Grade, Jaffna 2nd Branch மற்றும் Thirunelvely Branch ஆகிய கிளைகளுக்கான தமது செயற்பாடு களை முடித்துச் சென்றனர். இது 2004/2005 இல் என நினைக்கின்றேன். இது திரு.மு.பாலசுப்பிரமணியம் அவர்கள் AGM ஆகவும் திரு.B.A. அருமைநாயகம் அவர்கள் செயற்பாட்டு முகாமையாளராகவும் (OM) நான் மேற்தரக் கிளைக்கு இரண்டாம் கிளையிலிருந்து மாற்றலாகி வந்த காலமும் ஆகும். எமது கூட்டு முயற்சினால், எமது வடமாகாணக் கிளைகளிலிருந்து பின் வருவோரை தெரிவு செய்து தலைமை யகத்திற்கு அனுப்பி, நான்கு - ஐந்து மாத கால பயற்சிகளைப் பெற்று வருமாறு அனுப்பியிருந்தோம்.



திரு.S.தர்மராஜா (கிழக்கு மாகாணத்திலிருந்த வர் - இவர் இறுதியில் Jaffna 2nd Super grade இல் Senior Manager ஆக இருந்து கடமையாற்றி 2015 இல் ஓய்வுபெற்றவர்)



திரு. G.சகாதேவன் (இறுதியில் OM (NP) ஆக இருந்து கடமை ஆற்றி 2018இல் ஓய்வு பெற்றார்)

இவர்கள் தமது பயிற்சிகளை முடித்து வந்து தலைமையகத்திலிருந்து வந்த, திரு. சதானந்தன் அவர்களது குழுவின் நெறி காட்டலில் தாமாகவே இங்குள்ள கிளைகள் அனைத்தையும் ICBS system த்தின் கீழ் கொண்டு வந்தனர்.

இவர்களது சேவையும், தியாகமும் எம்மவர்களால் நினைவு கூறப்படவேண்டிய ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. கொழும்பில் நடாத்தப்பட வேண்டிய பதவி உயர்வுகளுக்கானதும் புதிய நியமனங் களுக்கானதுமான நேர்முகப்பரீட்சைகள் யாழ் மாவட்டத்திலேயே நடைபெற வழி வகுத்தமை.

இவை திரு. K பாலசுப்ரமணியம் AGM ஆகவும் திரு. B.A அருமைநாயகம் அவர்கள் OM and AGM ஆகவும் இருந்த காலத்திலிருந்து எனது நிர்வாகம் வரை நடைபெற்று வந்தன. பின்வரும் தரங்க ளுக்கான Interviews வடமாகாணத் திலேயே முதன் முதலாக நடாத்தப்பட்டன.

1. Out Searched Staff including Security Guard (Then D.C.S.O Mr. S. Sivarajah was also in the Panel)
2. New Selection for Clerical Grade (Trainee Staff Assistants)
3. Supervisor to Sub Manager
4. Sub Manager to Asst. Manager
5. Management Trainees

இதில்

ஐந்தாவதாக காணப்படும் management Trainees Interview இங்கு நடாத்த நான் எடுத்த கடும் முயற்சிகளும் அப்போதைய (2009) G.M. Mr. B.A.C. Fernando அவர்களின் பேருதவியும் மறக்கப் பட முடியாதவையே.

பல காலங்களாக போர்ச் சூழ்நிலை நிலவியே வந்தமையால் அக்கால நடைமுறைப்படி பொலிஸ் அனுமதி, இராணுவ அனுமதி, விமானப்பயணச்சீட்டு பெறுதல், மீண்டும் கொழும்பில் இதே நடைமுறைகளை பின்பற்றுவதுடன் வேறு பல கெடுபிடிகளும் இருந்து வந்தமையால், வடமாகாண இலங்கை வங்கி தலைமை யகத்திலிருந்த (AGM Office NP) உயர் அதிகாரிகளினால் மேற்குறிப்பிட்ட உயர் பதவிகளுக்கானதும், புதிய நியமனங்களுக் கானதுமான நேர்காணல் இங்கேயே நடாத்தப்பட வழியேற்படுத்தப்பட்டது. இத னால் பணச்செலவும் ஏனைய கஸ்ரங்களும் தவிர்க்கப்பட்டன. இவ் விடயமானது வடமாகாணத்தை பொறுத்தளவில் ஒரு பெரிய மாற்றத்திற்கும் இலங்கை வங்கியின் நடைமுறைகளை திசை திருப்புவதற்குமான குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல்லாகும்.

மேற்காட்டப்பட்ட இரண்டு விடயங் களில் முதலாவது தேர்வுகளை நடாத்தும் போது பின்வருவோர் தேர்வுக்குழுவின் (interview panels) அங்கத்தவர்களாக செயற் பட்டனர்.

திரு. B.A அருமைநாயகம் (AGM –chairman)
திரு. N.சிவரட்ணம் (OM)
திரு. சு.விஜயசிங்கம் (Jaffna Branch Chief Manager )

இரண்டாவது குழுவிற்கு (2009)
திரு. K. உலகநாதன் (Then Area Manager – Wanni)
திரு. N.சிவரட்ணம் (AGM- Chairman)
திரு. V.S.சிவநாதன்
திரு. சு.விஜயசிங்கம் (Chief Manager)

இந் நடவடிக்கைகளினால் பல சிரமங்கள் தவிர்க்கப்பட்டு, எம்மால் தெரிவு செய்யப்பட்டவர்களுள் அநேகர் கிளை முகாமையாளர் தரம்(Branch manager), மாவட்ட முகாமையாளர் (Area Manager) செயற்பாட்டு முகாமையாளர்(OM) போன்ற தரங்களில் பணிபுரிந்து வருகின்றனர். அத்துடன் சிலர் ஓய்வு பெற்றும் விட்டனர்.

மனங்கொள்ள வேண்டியது :- எனது இவ் அனுபவக் கட்டுரையில் வடமாகாண ஊழியர்கள் பட்ட கஸ்ரங்களும் தியாகங் களும் பற்றியும் கூறப்போனால் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுறா கட்டுரையாகவே முடியும். இவ் விடயங்களைப் பற்றி வேறுசில ஓய்வுநிலை ஊழியர்களிடமிருந்தும் விடயங்களைப் பெற்று பதிவு செய்தல் நன்மை பயக்கும் எனும் நம்பிக்கையுடன் இக்கட்டுரையை நான் நிறைவு செய்கின்றேன்.

Please Refer Annexure 1 too, that gives important past history of (NP)



N. Sivartnam
Retired AGM - BOC - NP
B.A,(S.L), A.I.B, F.I.B(S.L),
P.G.Dip- in Pub.Admin.

**Annexure I:-**

Extracted from the writeups by the joint efforts of Mr. K Ulakanathan (Retied operation manager – NP) and Mr. K.Balasubramaniam (Rtd A.G.M – NP) (in English) under the guidance of Mr. N.Sivaratnam (Rtd A.G.M - NP) and from the write-up of Mr. S.Nadarajah (in Tamil) who was the then O.I.C Kachcheri branch in 2009. Specially these were created in connection with the 70th Anniversary of BOC.

Jaffna Super Grade Branch celebrated its Golden Jubilee on 2nd February, 1995. This was the fist Branch in Northern Province and 5th Branch of Bank of Ceylon. Mr. C.Loganathan was the first Manager who became the first Ceylonese General Manager of the Bank of Ceylon. To Commemorate the occasion, a well- attended Function graced by religious dignitaries, well wishers, staff members and special invitees was held in Jaffna. The souvenir that was published to mark the occasion was unique in that it was the first time that such a souvenir had been brought out by a branch in the Northern Province. The staff and management donated medical equipment's worth Rs. 15 000/= to the Teaching Hospital, Jaffna.

05 three wheel cycles and artificial limbs to the disabled, Chests of drawers for the use of the inmates of Thirunelvely Saiva Sirar illam and Sports equipment for the use of the Kaithady Saiva Illam.

Jaffna, normally a vibrant city with a teaming population was all but deserted when the army marched in October 1995 following "Operation Riviresa 1" after routing the LTTE who had allegedly forced residents to flee from Jaffna and Valgamam Divisions across the picturesque Jaffna lagoon to the main land. The residents estimated to be around 200,000 were displaced and were compelled to take temporary shelter in Vadamaradchy and Thenmaradchy areas. That was a mass exodus of People that took place overnight from the entire Valigamam divisions and Jaffna to Vadamaradchy and Thenmaradchy.

The Bank's branches and employees were no exception to this human tragedy. There were no communication facilities to contact the head Office to get instructions. Mr. Shanmu gasundram, Area Manager, Jaffna and Mrs. K.Thuraiajah, Chief Manageress ,Jaffna Super Grade Branch took a strategic decision to shift the branches to Vadamaradchy and Thenmaradchy areas. Branch Managers Ms. K.Balasubramaniam, V.Iyamperumal, T.Thangeswaran, N.Sooriyanathan, B.A.Arumainayagam, other senior officers and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

members of staff assisted them to implement the decision. Mr. N.Sivaratnam, Assistant Manager Attached to Point Pedro Branch arranged the necessary furniture for the smooth functioning of Jaffna Super Grade Branch and other Branches. He also assisted in arranging accommodation to several staff members. The only mode of communication with Head Office was through the " Care International" Radio and that too was just once a week.

Jaffna Super Grade Branch functioned at the Point Pedro Branch premises. They had an Extension Office at Chavalachcheri. Kankesanthuri Branch functioned at Chavakachcheri Branch premises. Jaffna Second Branch and Kayts Branch were functioning at Meesalai Agrarian Services Centre premises. Chunnakam Branch, Manipay Branch and Area Office were Functioning at a Private building at Chavakachcheri. In the meantime, a third Jaffna City Branch was open in the Jaffna town and was functioning at the Hospital road bank premises. A branch of the Bank was opened at Karainagar to service the Navy personnel. There was no access to this Branch from Jaffna and therefore staff from Colombo and who came by the ship &manned the Branch.

**N. Sivartnam**
B.A,(S.L),A.I.B, F.I.B(S.L),
P.G.Dip- in Pub.Admin,
Rtd. Assistant General Manager (NP),
Bank of Ceylon.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Team of Bank of Ceylon Supra Grade Branch Jaffna - 2020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளரின் உள்ளத்திலிருந்து....

கடந்த எண்பத்தியொரு ஆண்டுகளாக வேரூன்றி செழித்து ஒரு நிறுவனம் நிற்க அதன் அடித்தளங்கள் பக்கபலமாக இருப்பதே காரணமாகிறது. அதன் பக்க பலமான ஒரு வேரான யாழ்ப்பாண கிளை இன்று தனது எழுபத்தி ஐந்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றது. பெப்ரவரி 2ம் நாள் 1945ல் தனது சேவையை இவ் யாழ்ப்பாண மண்ணில் ஆரம்பித்து இன்று எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைந்து விட்டன. ஆயினும், இன்னும் இக்கிளை அதே இளமையுடனும் துடிப்புடனும் முன்னோக்கிச் செல்வதை நாம் பார்த்து பூரிப்படைகிறோம்.

அன்று இயந்திரங்கள் இல்லை, கணனிகளும் இல்லை. போட்டி வங்கிகளும் இல்லை. ஆனால் பணிபுரிந்த ஊழியர்கள் வாடிக்கையாளர்களின் சேவையிலும் திறமையிலும் அதி உச்சபட்சமதிப்பை கொண்டிருந்தனர். கண்ணியத்துடன் கணக்கையும் சரிபார்த்தனர். எதுவித எதிர்பார்ப்புமின்றி நீண்ட நேரம் பணிசெய்து அனைத்து வாடிக்கையாளர் எதிர் பார்ப்பையும் பூர்த்திசெய்தனர். யாழ்ப்பாண பிராந்தியத்திலுள்ள அனைத்து மக்களினதும் தொழில் துறையினதும் வாழ்வாதாரத்தோடு பின்னிபிணைந்து பொருளாதார வளர்சிக்கு இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளையின் கடந்த 75 ஆண்டு கால பணி மகோன்னதமானது. அரசியல், யுத்தகால பிரச்சினைகளில் இக்கிளை மிகச் சிரமத்துடன் மக்களிற்கு ஆற்றியபணி என்றும் மறக்க முடியாதது.

காலஓட்டத்தின் மாற்றங்களிற்கு முகங்கொடுத்து வங்கி இன்று பல்வேறு பட்ட சவால்களையும் எதிர்கொள்ளும் வலிமையை கொண்டுள்ளது. பல்வேறுபட்ட போட்டித்தன்மை, கலாச்சாரமாற்றம், நுகர்வு தன்மைமாற்றம், காலநிலைமாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற சூழ் நிலையில் இன்று வங்கிகள் தமது வங்கி தொழிலை கொண்டு நடத்துகின்றன. இதற்கேற்ப யாழ்கிளையும் சிறந்த திறமையான இளைய தலைமுறை ஊழியர் குழாமுடன் தனது பணியை சிறப்புடன் செய்வதனை அவதானிக்க முடிகிறது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்இன்று உலகநாடுகள் அனைத்தும் கொவிட்-19 தாக்கத்தால் பொருளாதாரத்தில் மிகவும் தாக்கமடைந்துள்ளன. இதற்கு நாமும் விதிவிலக்கல்ல. இந்த பேரிடரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அனை வருடனும் இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளையும் முழுவீச்சில் செயல்படுவது மிகவும் பாராட்டுக்குரியது.

மாறிவரும் தொழில் நுட்பவளர்ச்சி மற்றும் வாழ்க்கை முறைமைக்கேற்ப வங்கித் தொழில் இன்று மாறுபடுகிறது. வங்கியை நோக்கி செல்லாது தமது வங்கி தேவைகளை வாடிக்கையாளர் நிறைவேற்றிக்கொள்ளும் முறைமைக்கு மாறிவரும் நிலையில், அத்தகைய நிலைமையை திறமையாக கையாண்டு வங்கியினை வளம்பெற செய்ய ஊழியர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதனை இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளை செய்யும் என்ற திடமான நம்பிக்கை எமக்குண்டு. எழுபத்தி ஐந்தாம் ஆண்டினை கொண்டாடும் வங்கி மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துவதோடு, பிரதான முகாமையாளர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின் றேன்.

**பா. நந்தகுமார்**

ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர்,

(துணைச்சேவைகள் பிரிவு)

இலங்கை வங்கி.

**சுவாமி விவேகானந்தர் சிந்தனைத் துளிகள்!**

- *மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி.*
- *மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Retired Assistant General Manager (NP)

It gives me immense pleasure to give this message on the occasion of launching this book to mark 75 years Anniversary of the Bank of Ceylon Jaffna Branch.

I am proud to see Bank of Ceylon Jaffna Branch play a vital role in the Economic Development of the area. Even during the civil war which lasted for three decades, Bank of Ceylon Jaffna Branch offered none interrupted service to the Jaffna Peninsula. They offer better services to Government sector, business community and General Public.

In contrast to the High-Tech digitalized world class banking environment for our Local Public, to move to cashless society.

I have no doubt that the Bank of Ceylon Jaffna Branch will grow from Strength to Strength and continue to play a significant role in Economic Development of Jaffna Peninsula.

I wish the Bank of Ceylon Jaffna Branch every success in its future endeavours.

**S. N. Manikkasinghe**
Rtd. Assistant General Manager (NP),
Bank of Ceylon.

you can only win when your mind is stronger than your emotions



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the former Chief Manager (Jaffna)

It's give me great pleasure to send this message of felicitation for the souvenir that will be published to mark the occasion of the $75^{th}$ Anniversary of Bank of Ceylon, Jaffna Super Grade branch. First of all, I place my heartiest Congratulations and best wishes to the present Chief Manager, staff members, and also to the past Chief Managers and staff members who have immensely contributed to uplift the branch to it's present prestigious position.

This branch was declared open in 1945 as the $5^{th}$ branch of Bank of Ceylon at the heart of Jaffna city (Formerly known as Parani Hotel), with Mr. C. Loganathan being the first manager and later he was the $1^{st}$ Sri Lankan General Manager of Bank Of Ceylon. This was the only branch catering the vast clientele of the Jaffna city limits until BOC opened its Second Jaffna branch at Stanley Road,

I am honoured to mention that I was given an opportunity to work at this prestigious branch as the Chief Manager during a crucial time when road transport from Jaffna peninsula to other parts of the country was disconnected and only Air transport was allowed with restrictions.

This opportunity arose while I was working as the manager of the Point Pedro branch. I was asked to take over the Jaffna Super Grade branch from Mr. R.Jeyendra since he was assigned as the Operations Manager, for Northern Province consequent to the promotion of the then Operations Manager Mr. N. Sivaratnam as the Assistant General Manager of Northern Province.

It is pertinent to mention that the then newly promoted Chief Manager, Mr Jeyendra volunteered to report at Jaffna branch, from Eastern Province to fulfill this role, even though several officers in the parallel grade, native to Jaffna, were reluctant to take up the assignment at that time due to the prevailed situation.

I took over the branch on $12^{th}$ January 2009. During my tenure as the Chief Manager , I was able to introduce some revolutionary changes in the layout of the branch and within the administration with the support/ under the guidance of the Mr. N. Sivaratnam AGM (NP), Mr Weerasena (DGM S&CM) and Ms. Silva (AGM - Business Process &Re-Engineering). Since this was an old and massive branch, operating with a huge staff



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

force handling a vast number of customers and accounts from almost all the government departments in the region. The branch was functioning on both the floors having safety Locker facility & Foreign Banking unit in the upstairs block.

During the time of manual operation, we handled large number of Current Accounts, Savings Accounts, Term deposits & Foreign currency accounts, Loan accounts and other service accounts. At that time period both of the floors were utilized effectively. After the relocation of the branch due to civil war and due to the introduction of computerization, number of staff was reduced and Locker facility was discontinued . In addition, government departments had decentralized their financial administration and their accounts had been transferred to other BOC branches.

Having gained experience after implementation of the model branch concept at the Point Pedro branch, I conducted an extensive study of the circumstances of the Jaffna branch with an intention of implementing same. Bringing all the departments together under one roof, not only over come the administration difficulties in managing the staff, but also enabled direct supervision of staff for the benefits of the customers with quick access to relevant departments.

My proposal was accepted by all levels of management and finally with the approval of the Re- Engineering unit the model branch concept was implemented within two months time. Even though, in the initial stages, there was opposition from some senior staff who were more familiar with, eventually ,the present layout was accepted by all.

During my tenure at this branch I was able to establish the Safety Locker facility again with the co-operation of the DGM (Support Service). We were also able to open two extension offices namely Main Street branch and Bus stand branch. These offices have now, upgraded to full fledged branches. With these unforgettable memories I would like to thank whole heartedly all my superiors and the staff members who had supported me during my tenure of service as the Chief manager of Jaffna branch.

Finally, I would like to thank the organizing committee of the 75th Anniversary celebrations of Jaffna Supra grade branch, for provides me with this opportunity to recollect and share precious memories from my time at Jaffna Super grade branch.

**K. P. Anandanadesan**
Rtd. Assistant General Manager (Marketing),
Bank of Ceylon.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Former Assistant General Manager

As the Former Asst. General Manager of Northern Province, I feel much proud and happy to pen this Message of Greetings to the Bank of Ceylon - Jaffna Supra Grade Branch while completing 75 long years of Service and proudly celebrating its Platinum Jubilee.

The Jaffna branch has some historical memories such as the former Manager of Jaffna branch,Mr. C.Loganathan became the first Ceylonese General Manager of Bank of Ceylon. Jaffna branch was opened as the fifth branch of Bank of Ceylon in 1945 when British was ruling the country. Since then, the branch has been providing a remar kable service to its customers even during the most turbulent period of Jaffna, espe cially when the war situation prevailed for nearly three decades, solely with the hard work, unwavering commitment and many scarifications made by the employees. Batt ling with that situation, number of notable achievements were made by them up to now.

Also, the Jaffna branch has provided several opportunities to produce number of Professional Bankers and has played a major role in developing the career path of the Staff during the past 75 years. I take this opportunity to wish all the Chief Managers, Senior Managers, Managers and the entire staff force who have rendered their maximum valuable efforts and immense contributions to provide best customer services with an appreciable level of standard and to build up the branch to grow into such a prestigious level as it stands proudly today.

I could also remember the note worthy contributions made by the Jaffna Super Grade Branch Team to adjust the Northern Province as the Best Province among all other provinces in national level in the year 2018 during my period. I would like to extend my sincere gratitude to all staff members who have provided their valuable service to that effect.

Finally, my Best wishes to the Branch Chief Manager, all staff members and their valued customers and wish them every success too in celebrating this historic event with showers of blessings.

**M. James Prabaharan**
Former Assistant General Manager (NP),
Bank of Ceylon.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Grade 5 Scholarship Winners Award Ceremony - 2019




18⁺ Gold Coin Wedding Gift - 2020



18⁺ Scholarship Award Ceremony



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Reminiscences - Jaffna Branch

The Jaffna Branch observed the 75$^{th}$ anniversary on 2$^{nd}$ February 2020. The establishment of the branch marks in the history of economic and social development of the Northern part of Sri Lanka.

Of my thirty nine years of service with the Bank of Ceylon, I was happy to be associated with the Jaffna Branch for a period of four years from September 2000 to September, 2004. I worked as Manager - Operations of the Branch. I quote below the landmarks along the way:

Lockers for safe custody of valuables of various kinds including jewellery, share certificates, life polices and title deeds were provided by the branch. It was unique that at the time this service was introduced no other bank in Northern Province has started. This service was stopped due to reasons known to all of us. How ever this faci lity is available since 23$^{rd}$ September 2009.

10813(P)

International Unit was opened in February, 1978 to handle international business such as encash ment of foreign drafts, establishing Letters of credits for imports, processing of imports, processing of import bills and NRFC and RFC transactions.

The branch celebrated its Golden Jubilee on 2$^{nd}$ February, 1995. To commemorate the occasion attended function graced by religious dignitaries, well wishers, staff members and special invites was held in Jaffna. The souvenir that was published to mark the occasion was unique in that it was the first time that such a souvenir had been brought out by a bank branch in Northern Province.

Ran Surekum Naya Seva was inaugurated at the branch on 7" March, 2001 by the A.G.M (N.P) Mrs.1.P.Ratnathurai.

"Saturday Banking' that no other bank has introduced in Jaffna at that time was ceremonially inaugurated at the Branch by the Province A.G.M Mrs.K. Thurairajah on 6$^{th}$ October 2001.

Automated Teller Machine was installed at the Branch and this service was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

inaugurated by the Province AGM Mrs. K.Thurairajah on 24" May, 2002.

The computerization of Jaffna Supra Grade Branch under UNISYS system was ceremoniously inaugurated by Mr. T.S.Ranasinghe, Deputy General Manager, Branches and Development Banking on 1" July, 2002. Mr. S. Vignarajah, Senior Manager of the branch welcomed the guests.

The branch celebrated its diamond jubilee on 22nd February, 2005. Celebrations took place on a low key due to the Tsunami devastation. Mr. Sivalingarajah, Dean of the Faculty of Arts, University of Jaffna, was the Chief Guest.

The Branch commenced operating under the International Comprehensive Banking (ICBS) on line network from 22nd April, 2005.

Miss H. Indrani had a Kantha Ran Ginum with the branch and was one of the victims of Tsunami disaster. A cheque to the value of Rs. 500, 000/= being insurance payment was handed over to the nominee by Mr.K. Balasubramaniam, Province AGM.

Master Thanaraja Kaviraj holder of RKG at the branch, student of Jaffna Central College was selected to participate in the Inter Religious Sports Meet held in South Korea. Financial assistance was given by the branch with a view to encourage the student in his chosen field.

The first draw under the BOC Super Deposit Account to select the winner of a Suzuki Maruthi car was held on 23rd October 2008 and the winner was Mrs. Kalaimagal Anantha kumar of Karainagar, who had purchased the certificate from the branch.

These are but a few of the recollections lingering in my memory which I have jotted down.

All in all the period of four years I have served the branch has been a fulfilling and rewarding experience.

**K. Ulaganathan**
Retired Operations Manager (N.P),
Bank of Ceylon.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்ந்த நிலைக்கு என்னை உருவாக்கிய வங்கிக் கிளைக்கு இன்று அகவை எழுபத்தைந்து

இலங்கை வங்கி அதி மேற்தரக் கிளையானது தனது 75 ஆவது அகவையைக் கொண்டாடுவதையிட்டு அதற்கான வாழ்த்துரை ஒன்றினை வழங்குவதற்கு எனக்கு கிடைத்த இச் சந்தர்ப்பத்தினை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இவ் வங்கிக் கிளையானது வரலாற்றில் ஒரு தமிழரான இலங்கை வங்கியின் புகழ் பூத்த பொது முகாமையாளர் திருவாளர். C லோகநாதன் அவர்களை முகாமையாளராகக் கொண்டு இலங்கையின் 5வது கிளையாக 02.02.1945ல் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து சிறந்த கல்விமான்களை முகாமையாளராகக் கொண்டு தனது சேவைகளை வழங்கி வந்த கிளையில் 1995ம் ஆண்டு திருமதி. K. துரைராசா அவர்கள் பிரதான முகாமையாளராக பதவி வகித்த காலத்தில் தனது பொன்விழாவினை சிறப்பாகக் கொண்டாடியது அனைவர் மனதிலும் நிலைத்து நிற்கும் என நம்புகின்றேன்.

தொடர்ந்து யாழ் வாழ் மக்களிற்கு சிறப்பான சேவையாற்றிய இக் கிளையானது 2000ம் ஆண்டில் இருந்து 2008ம் ஆண்டு காலப்பகுதிவரை பெரும் வளர்ச்சி கண்டது என்பது மிகையாகாது. முதலில் 2000ம் ஆண்டு பொதுப் பேரேடு (General Ledger) கணனிமையப்படுத்தப்பட்டது. (Micro Banking System) மனித வளம் பயன்படுத்தப்பட்டு வந்த வளர்ச்சி நடைமுறைகள் யாவும் 2002ம் ஆண்டு நடுப்பகுதியில் Unibank Unisays System என்னும் கணனிப்பொறி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ் நகரில் முதல் தடவையாக தன்னியக்கப் பணப் பரிமாற்ற இயந்திரம் (ATM) பொருத்தப்பட்டு அதனூடாக சிறந்த சேவை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2005ம் ஆண்டு April மாதமளவில் தற்போதும் நடைமுறையில் உள்ள ICBS எனும் வலையமைப்புக்குள் முழு நாட்டில் இருக்கும் வலையமைப்புச் (Online) செயற்பாட்டுக்குள் வங்கி நடை முறைகள் கொண்டு வரப்பட்டது. மேலும் வாடிக்கையாளரின் நீண்ட நாள் கோரிக்கையான பாதுகாப்பு பெட்டக வசதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இவை பெருமிதமான வளர்ச்சி என்பது வெளிப்படை. மேற் சொல்லப்பட்ட வங்கிக் கிளையின் வளர்ச்சிப் பாதையில் என்னையும் ஒரு பணியாளனாக பல்வேறு பதவி நிலைகளில் இணைத்துக் கொண்டேன் என்பது எனக்கு கிடைத்த பேறாக நான் கருதுகின்றேன்.

தொடர்ந்து 2015ம் ஆண்டில் இக் கிளையின் பிரதான முகாமையாளர் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. 2016ம் ஆண்டு மார்கழி மாதம் வடக்கு மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டு முகாமையாளர் பொறுப் பேற்கும் வரை நானும் எனது ஆளணி யினரும் சிறப்பான சேவையை வழங்க முடிந்ததுடன் அச்சமயம் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத் திட்டத்தில் (Power +) கணக்குகளை திறப்பதில் ஏற்படுத்தப்பட்ட போட்டியில் வடமாகாணத் தில் அதிக வைப்புக்களை திரட்டி முதல் நிலையைப் பெற்றுக் கொண்டமை ஒரு சிறப்பு அம்சமாகும்.

நான் இக்கிளைக்கு முதல் இட மாற்றம் 1987ல் வழங்கப்பட்ட சமயம் எழுது விளைஞராக பணக் கொடுக்கல் வாங்கல் கருமபீடத்திலும் தொடர்ந்து 2000ம் ஆண்ட ளவில் பதவி உயர்வோடு பிரதம இலிகி தராகவும் வெளிநாட்டு நாணயக் கணக்குப் பிரிவின் அதிகாரியாகவும் கடன் பிரிவின் அதிகாரியாகவும் வாடிக்கையாளர் சேவை முகாமையாளராகவும் இருந்து பணியாற்றி இறுதியில் பிரதான முகாமை யாளராகப் பதவி பெற்று சேவையாற்றி யதனை இறைவன் எனக்கு கொடுத்த வரம் என்றே கருதுகின்றேன்.

நிறைவாக யாழ் அதி மேற்தரக் கிளையானது 100வது ஆண்டும் அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கும் உலகலாவிய ரீதியில் ஏற்படும் மாற்றங் களுக்கு ஏற்ப தன்னையும் அதற்கு ஏற்ப உள்வாங்கி சிறப்பான சேவைதனை வழங்கு மென்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது என்ற நம்பிக்கையுடன் வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

**க. சகாதேவன்**
ஓய்வு நிலை செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி,
வடமாகாணம்.

## நீதி

*தாமதப்படுத்தப்படும் நீதி
மறுக்கப்பட்ட நீதிக்கு
ஒப்பானது.*

*அவசரத்தில் செய்யப்படும் நீதி
சில வேளைகளில் தவறாகச்
சென்று விடுகிறது.*

*நீதியைச் சரியாகச் செய்வது
மட்டுமல்ல, முக்கியமாகச்
சரியாகச் செய்ததாக அது
தோன்றவும் வேண்டும்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வு பெற்ற பிரதான முகாமையாளர் அவர்களின் ஆசிச் செய்தி

யாழ் அதிமேற்தரக் கிளை தனது 75வது வருடத்தை பூர்த்தி செய்ய இருக்கும் இத் தருணத்தில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவதுடன், நீங்கள் வெளியிடும் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை வரைய என்னை பணித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிமேற்தரக் கிளை ஆரம்பிக்கப்பட்ட போது ஆஸ்பத்திரி வீதியில் பரணி ஹோட்டலில் இலங்கை வங்கியின் 5வது கிளையாக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு தற்போதுள்ள இடத்துக்கு மாற்றப்பட்டது. மேற்தரக்கிளையை நான் பொறுப்பேற்ற நாளில் இருந்து இளைப்பாறும் வரை மகிழ்ச்சியுடன் கடமையாற்றினேன். அது ஒரு பொற்காலம் தான். ஓய்வு பெற்ற போது கிடைத்த மனநிறைவும் வங்கியின் 40 வருட வாழ்க்கையை நேர்மையாகவும் வாடிக்கையாளர்களின் திருப்தியாகவும் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றதுடன் என்னுடன் சேவை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் தலை வணங்குகின்றேன். அந்த வகையில் எனது இறுதி ஆண்டு, இறுதி மாதம், இறுதி நாள், இறுதி மணித்தியாலம், இறுதி நொடி வரை மகிழ்ச்சியாக கழித்து மன நிறைவுடன் ஓய்வு பெற்று இன்று மன நிறைவுடன் வாழ்கின்றேன். நானே கிளைக்கு வந்த போது கிட்டத்தட்ட 150 ஊழியர் வரை இருந்தார்கள் என்று நினைக்கின்றேன். இந்த 150 ஊழியர்களும் இக்கட்டிடத்துக்குள் அடைபட்டு இடவசதி இல்லாத நிலையில் சேவை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் காலை 8.00 மணியிலிருந்து இரவு 10 மணிக்கு வேலை முடிந்து செல்லும் வரை பட்ட கஷ்டங்களை இன்று வேலை செய்யும் ஊழியர்களுக்கு முற்காலத்தில் எப்படி வேலை செய்தோம் என்பதை வார்த்தையால் விவரிக்க முடியாது எல்லா வங்கி செயற்பாடுகளும் கையாலேயே இயங்கின. (Manual) இப்போது அது எதிர்பார்க்க முடியாத வகையில் எந்த தகவல்களையும் நொடிப் பொழுதில் பெறக்கூடியதாக அமைந்துள்ளது.

எங்கள் கிளை 2001ம் ஆண்டு கணணி மயப்படுத்தப்பட்டது. இதில் வியப்பு என்னவென்றால் கணனி மயப்படுத்தப்படும் போது அப்போதைய 90 சதவீதம் ஆன ஊழியர்கள் கணினி அறிவை பெற முடியாத நிலையில் இருந்தனர். இந்நிலையில் திடீரென அப்போதைய உதவிப் பொது முகாமையாளரான திருமதி துரைராசாவிடம் இருந்து அறிவித்தல் வந்தது. அப்போது செயற்பாட்டு முகாமையாளராக ஆக இருந்த திரு. Balasubramaniyam அவர்களுக்கும் ஆச்சரியம். ஆனால் எங்களுக்கு தெரியும் உதவிப்பொது முகாமையாளரின் அறிவிப்பு மிகவும் கடுமையானது என்று. அவர் ஒரு செயல் வீரர், அவர் ஒன்றை தீர்மானித்தால் அதை நாங்கள் மறுபேச்சில்லாமல் முடித்துக் காட்ட வேண்டும். அதற்கு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட கால அவகாசம் தந்து அதை முடித்துக் காட்ட வேண்டும் என்றால் நாங்கள் அவர் குறிப்பிடும் கால எல்லை போதாது என்று சொன்னால் அவர் என்ன சொல்வார் தெரியுமா No You can Do it. You Must Do It அவர் கொழும்பில் இருந்து தொலைபேசியில் அறிவுரை சொன்னால் எங்களுக்கு தர்ம சங்கடம், மறு வார்த்தை பேச முடியாது. ஆனால் பின்பு அந்தக் காலத்தில் Target ஐ அடைய முடியாது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவமும் அவரிடமிருந்தது. இக்கால கட்டத்தில் திரு பாலா அவர்கள் OM ஆக இருந்தார் அவருக்கும் அதே கதிதான். எனக்கு தந்த அறிவுறுத்தலை போன்று அவருக்கும் அறிவித்தல் வரும், நாம் இருவரும் திரிசங்கு நிலையில் தான் இருந்தோம். அறிவித்தலின் படி 48 மணித்தியாலத்தில் எங்கள் கிளையில் இருந்த சகல நடவடிக்கைகளையும் Area Officeக்கு மாற்றும் படியும் அங்கிருந்து வங்கி நடவடிக்கைகளை நடத்துமாறும் பணிக்கப்பட்டோம். சிந்தித்துப் பாருங்கள் குறிப்பிட்டது போல் எல்லா வங்கி தளபாடங்களையும் இரண்டு நாட்களில் (சனி, ஞாயிறு) மாற்ற வேண்டியிருந்தது. இரவு பகல் என்று பாராமல் நித்திரையின்றி செய்து முடித்தோம். இங்கு ஒரு முக்கியமான நபர் அமரர் பேரின்பநாதன் என்ஜினீயர் அவர்களையும் நினைவு கூறவேண்டும். அவருடைய பங்களிப்பும் மிகவும் இன்றிய மையாததாக அமைந்தது. இந்த தற்காலிக சிறிய, குறுகிய இடத்தில் 150 ஊழியர்களையும், தளபாடங்களையும் வைத்து வங்கி நடவடிக்கையை நிறைவேற்றினோம்.

இக்கட்டான நிலையில் எனது ஊழியர்கள் மனங்கோணாது எனக்கு தந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் பெருமையாக மதிக்கின்றேன். சரி இப்போ கணினிமயமாக்கல் தொடங்கியது முதல் எங்கள் கிளை புதுப்பொலிவு பெற்றது. அதன் பின்பு கொழும்பில் இருந்து பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் வந்தனர். இதற்கு முன்பு எங்கள் கிளையில் இருந்து மூன்று ஊழியர்கள் திருவாளர்கள் சகாதேவன், விஜேயகுமார், பிரேமராஜன் தெரிவு செய்யப்பட்டு கொழும்பில் பயிற்சி பெற்ற படியால் எனது வேலை சுலபமாக இருந்தது. உங்களுக்கு தெரியும் இந்த கணிணிமயமாக்கல் காலமானது வடக்கில் போர்க் கால சூழலில் இருந்தது. ஆனால் இருக்கக்கூடிய மற்றும் கிடைக்கக்கூடிய இருந்த மூலதனத்தை வைத்துக் கொண்டு செயற்ப்பட்டோம். கொழும்பில் இருந்து பயிற்சி பெற்ற 10 பேர் வந்தனர். அதில் ஒன்பது பேர் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் அவர்கள் வந்து இறங்கி விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு தங்கும் இடவசதி, உணவு ஆகியன பெற்றுக் கொடுப்பதில் மிகவும் கஷ்டப்பட்டோம். எனினும் திரு பாலா அவர்களுடைய ஒத்துழைப்புடன் சுலபமாக அக்கஷ்டத் தையும் கையாண்டோம். எனது தேவைக்காக மேல் மாடியில் ஒரு அறையும் குளியல் அறை வசதியும் இருந்தது. அப்போது கொழும்பில் இருந்து வந்தவர் களை தங்க வைக்க எனக்கு ஒரே வழி தான் தோன்றியது. எனது அறையை விட்டு வெளியேறி அவர்களுக்கு அதை கொடுத்து விட்டேன். ஒரு அறையில் பெரும்பாலானவர்களும் சிலர் விறாந்தைகளையும் பாவித்தனர்.

அதற்கு அவர்கள் கொடுத்த நன்றியை திரும்பவும் நினைத்து மகிழ்ச்சி அடைவேன். கணனிமயப்படுத்தல் தொடங்கியது முதல் இரண்டு, மூன்று கிழமைகளால் நாம் பழையபடி எங்கள் கிளைக்கு Area Office இல் இருந்து மாற்றப்பட்டோம். வங்கி நடவடிக்கைகள் உரிய இடத்தில் ஆரம்பமானது. நாம் பட்ட கஸ்டத்தை விபரிக்க முடியாது. அக்காலகட்டத்தில் யாழ் மாவட்டத்தில் குறிப்பிட்ட சில வங்கிகள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கின. அதிலும் இலங்கை வங்கியில் 6 -7 கிளைகள் தான் இயங்கின. ஆகையினால் எங்கள் கிளை யாழ் மாவட்டத்தில் ஆகக்கூடிய அதிக வாடிக்கையாளர்களை கொண்டதாக காணப்பட்டது. கிட்டத்தட்ட 500 வரை வாடிக்கையாளர்கள் தினசரி சமூகமளிப்பார். ஆகவே தினசரி வரும் வாடிக்கையாளர்கள் கணணி மயப் படுத்தப்பட்ட அன்றும் வந்தார்கள். அவர் களுக்கு புதிய கணக்கு இலக்கம் புத்தகங்கள் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு நீண்ட வரிசையில் நின்றார்கள். மற்றும் அவர்கள் முதலில் புதிய விளக் கத்தை பெற்றுத்தான் கணக்குகளை நடைமுறைப்படுத்த முடியும். வரிசை யிலிருந்து ஒவ்வொருவராக வந்து புதுக் கணக்கை பெற்றுக்கொள்வதற்கு 5 நிமிடம் தேவைப்படும் அப்போது எனக்கு வாடிக்கையாளர் துன்பத்தை அறிந்து நான் ஒரு முறையை கடைப்பிடித்தேன். அதன் போது பெரும்பாலானவர்களை நான் அழைத்து அவர்களுடைய பழைய இலக் கத்தை பாவித்து பணம் கொடுக்கல் வாங்கல் களை செய்து வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தி வரிசையில் இருக்கும் ஆட்களை குறைத்து விட்டேன். பின்பு வங்கி நேரம் முடிந்ததும் அந்த பழைய கணக்கு கொடுக்கல் வாங்கல்களை செய்த அந்த ஏடுகளை (Vouchers) புது கணக்குக்கு மாற்றி அன்றைய கொடுக்கல்வாங்கல்களை நிறைவு செய்ய இரவு 12 மணி ஆகும். அதன் பின்பு வீடு சென்று காலை 8.00க்கு அடுத்தநாள் தொடங்கும். இந்த நெருக் கமான காலங்களில் காசாளர்களை அழைத்து வாடிக்கையாளர்களின் வரிசை நீண்டால் தொலைபேசியில் (Intercom) எனக்கு தெரியப்படுத்த நான் உடனே ஒரு புதிய கவுண்டரை (Counter) எனக்கென ஏற்படுத்தி நானே தனிப்பட்ட முறையில் கொடுக்கல் வாங்கல்களை செய்வேன். பின்பு அப்பணத்தை காசாளரிடம் கொடுப் பேன். வாடிக்கையாளர்கள் இதனால் எனக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து வந்தவர்கள் என்னுடைய நடவடிக்கையை பார்த்து மெச்சி சொன்னார்கள் "இது வரை 100 கிளைகளை கணினி மயமாக்கி உள்ளோம். ஆனால் இது போன்று நடவடிக்கை எடுத்து வாடிக்கை யாளரை திருப்திப்படுத்திய ஒரு முகாமை யாளர் ஒருவரையும் கண்டதில்லை என்று."

நான் வாடிக்கையாளர்களை நம்பி னேன், அவர்களும் என்னை நம்பி நடந் தார்கள். அப்போது ஒரு நாளைக்கு கணக் கில் வரும் பணம் இல்லாத காசோலைகளை நான் திருப்பி விடுவது இல்லை, ஒரு நாளைக்கு 10 காசோலைகள் வரை பணம் இல்லாவிட்டாலும் Pay பண்ணுவேன். வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ள முடியாது. அப்போது போன் வசதி இல்லை. ஆனால் அத்தகைய வாடிக்கையாளர்கள் கணக்கை அடுத்தநாள் நிவர்த்தி செய் வார்கள். இப்போதைய வங்கி ஊழியர் களுக்கு என்னிடம் இருந்து ஒரு சில அறிவுரைகள். வாடிக்கையாளர்களை கவரும் வகையில் பழகுங்கள். அவர்களின் தேவையை தயவு செய்து அன்றே பூர்த்தி செய்யுங்கள் நாளை வாருங்கள் எனக் கூறாதீர்கள். Never say come tomorrow.

மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்து நேர்மையாக நடந்தால் வங்கி உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றும் இறுதியாக என்னுடன் சேவை ஆற்றிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து அந்த பசுமை யான நினைவலைகளுடன் திருப்தியாக ஓய்வுக் காலத்தை நடத்துகின்றேன்.

இலங்கை வங்கி வாழ்க

**சி. விக்னராஜா**

ஓய்வுநிலை பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்.அதிமேற்தரக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Retired Senior Manager

It is with great pleasure that I send this message of greetings to the Chief Manager and Staff on the occasion of the 75th Anniversary of the branch.

Seventy Five years is a land mark in the life of any institution and the Jaffna Branch has grown from very small beginnings to a fully - fledged Super Grade Branch. When the Branch was opened on 2nd February 1945 as the first indigenous Bank in the Jaffna peninsula it occupied a small building. Now it has acquired a property in a very prominent place and has its own building having sufficient space to cater to the needs of both staff and customers. Moreover, the branch has a large compound and hence ample parking space for all concerned.

Due to the efficient and untiring service to the customers, it was ranked as the No.1 Bank in the Island in every sphere of banking. As an employee I can proudly mention the fact that it was the Bank of Ceylon which introduced the banking habit or the banking culture in the peninsula or to be more specific to the entire Nation and the Bank in turn was referred to as the "Bankers to the Nation"

During my stint as the senior Manager(Nov.2006 - Aug.2008)the branch had just been migrated to ICBS system and the post implementation process was carried out during my stay with special reference to the rearrangement of Mandates, reversal of long outstanding items in the General Ledger, recovery of delinquent loans, among other things.

While I do appreciate the unstinted patronage extended by the customers who are the substances of our constitution, I wish the branch many more success in the years to come.

**R. Vijayasingham,**
Retd. Senior Manager,
Bank of Ceylon,
Supra Grade Branch,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the former Chief Manager

It gives me an immense pleasure to send this message to the souvenir published on the occasion of the celebration of the Platinum anniversary of 75th anniversary on 02.02.2020.

Jaffna Supra grade branch was opened on 02.02.1945 as a 5th branch of Bank of Ceylon which was the pioneer state commercial bank in the banking industry of Sri Lanka and it is a" BANKER'S TO THE NATION".

Jaffna Supra Grade Branch had been providing yeoman services to the people of Northern Province towards its social Economic developments through Agriculture, Fisheries, Industry, Housing Transport, Tourism, Trade, Education, Self-employment, Poverty alleviation, and Trade finance sectors.

In the past before the establish ment of People's Bank in 1960 as a state commercial bank Jaffna Supra Grade Bank of Ceylon branch had played a monopoly role in the banking industry.

Although severe competition is faced with the opening of other commercial banks both local and foreign specially after the introduction of open economy in 1978, BOC is maintaining its leadership position in the market share with the contribution of Jaffna supra grade branch.

I am very happy and proud to say that I was also had an opportunity to serve as a Chief Manager from May 2010 to March 2012 in the high prestige branch which had been managed by dynamic eminent personalities specially 1st Sri Lankan General Manager Mr. C. LOGANATHAN.

I wish all the success in the future.

**A. Mahadeva**
BA, AIB, Certificate in professional English (OUSL)
1st in Law of LLB (OUSL),
Associate of Professional Banker L/735,
Retd. Chief Manager,
Bank of Ceylon, Supra Grade Branch,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமையாளரின் பார்வையிலே...

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண அதிமேற்தரக் கிளை தனது 75வது ஆண்டு நிறைவை கொண்டாடும் இவ் வேளையில் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ் வடைகின்றேன். 1945ம் ஆண்டு சாதாரண ஒரு கிளையாக ஆரம்பிக்கப்பட்டு ஆலமரம் போன்று பாரிய விருட்சமாக வளர்ச்சி யடைந்து யாழ் மக்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி 75 வருடங்களாக தங்கு தடையின்றி சேவையாற்றி இன்று அதி மேற்தரக் கிளையாக தரமுயர்த்தப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய கிளையில் நான் இரண்டு தடவைகள் அதாவது 1979 - 1989 காலப்பகுதியிலும் பின்னர் 2011 - 2013 காலப்பகுதியிலும் ஏறக்குறைய 12 வருடங்கள் சேவையாற்றி யுள்ளேன். எனது 32 வருடங்கள் இலங்கை வங்கியின் சேவைக்காலத்தில் ஏறக்குறைய 1/3 பகுதியை யாழ்ப்பாணக் கிளையில் பணி யாற்றக் கிடைத்ததை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

முதற் காலப் பகுதியில் நான் சேவையாற்றும் போது யாழ்ப்பாணக்கிளை நூற்றுக்கு மேற்பட்ட ஆளணியுடன் இயங்கி வந்தது. அக் காலப்பகுதியில் யாழ் நகரில் விரல் விட்டு எண்ணக்கூடிய வங்கிகளே செயற்பட்டன. இவற்றுள் இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக்கிளை மிகவும் ஒரு முக்கியத்தும் வாய்ந்த ஒரு வங்கியாக திறமையுடன் செயற்பட்டது. 1980 களின் ஆரம்பப் பகுதியில் நிலையான வைப்புக் களிற்கான வட்டி 22% வரை வழங்கப்பட்டு பல்வேறு வகையான சேமிப்பு ஊக்குவிப்பு திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு செயற் படுத்தப்பட்டு வந்தன. யாழ் மக்கள் குறிப்பாக சேமிப்புக்களில் அதிக ஈடுபாடு காட்டுவார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகைய பின்னணியில் இக்கால கட்டத்தில் யாழ் கிளையின் நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களில் எதிர்பாராத அளவில் அதிகூடிய வாடிக்கை யாளர்களால் வைப்பிலிடப்பட்டன. இப்படி வைப்பிலிடப்பட்ட நிதியைக் கொண்டு அக் காலகட்டத்தில் நாடளாவிய ரீதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களிற்கும், கடன் வழங்கல் நடவடிக்கைகளிற்கும் இலங்கை வங்கியினால் பாரிய பங்களிப்பு செய்ய முடிந்தது.

யாழ்ப்பாணக் கிளையின் சேவை யில் இன்னொரு மைல்கல்லாக அமைந்த விடயம் என்னவெனில் வங்கியொன்றின் சர்வதேசப் பிரிவொன்று (International unit) யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இலங்கை வங்கியின் யாழ்ப்பாண கிளை யிலேயே ஆரம்பிக்கப்பட்டு வாடிக்கையாள ருக்கு சேவையாற்றி வந்தமையாகும். யாழ்ப்பாண கிளையின் கீழ் அது அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் வாடிக்கையாளர்களின் வசதி கருதி அது இப்போதுள்ள இலங்கை வங்கியின் வடமாகாண அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் கீழ் பகுதியில் இயங்கி வந்தது. அங்கு வெளிநாட்டு காசோலைகள், உண்டியல் மாற்றுவதற்கென்றே நீண்ட வரிசையில் வாடிக்கையாளர் கூடி நிற்பர். அத்தோடு யாழ் வர்த்தகப் பெருமக்களின் இறக்குமதித் தேவைகளிற்காக நாணயக் கடிதங்கள் (Letter of credits) திறக்கப்பட்டு வழங்கப் பட்டதுடன் அவர்களுக்கான நிதி வசதிகளாக அடமானக் கடன் (pledge loan) நம்பிக்கை சீட்டு கடன்கள் (Trust receipt loan) போன்றவையும் வழங்கப்பட்டு வந்தன. மேலும் பிரயாணிகள் காசோலைகள் வழங்கல், உண்டியல்கள் வழங்கல், வெளி நாடுகளிற்கு பணம் அனுப்புதல் போன்ற சேவைகளும் பாரிய அளவில் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்படியாக யாழ்ப்பாணக் கிளை யில் பல்வேறு உள்ளூர் வங்கி சேவை களும் சர்வதேச வங்கிச் சேவைகளும் இடம் பெற்றுக் கொண்டிருந்தமையால் அக்கால கட்டத்தில் நாடளாவியரீதியில் இலங்கை வங்கியின் அதிக இலாபமீட்டும் கிளைகளில் முதல் 5 இடங்களிற்கு உள்ளும் யாழ்ப் பாணக் கிளையும் அமைந்திருந்தது இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். வாடிக்கையாளர்களுக்கான பாதுகாப்பு பெட்டக (Safety lockers) வசதிகள் கூட மற்ற வங்கிகளிற்கு முன்னராகவே யாழ்ப்பாணக் கிளையினால் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்தன. இப்படியாக வாடிக்கையாளர்களிற்கும் யாழ் மக்க ளிற்கும் தேவையான சகல தேவைகளும் வசதிகளும் யாழ்ப்பாணக் கிளையினால் வழங்கப்பட்டு வந்ததனால் அதனைப் பெரிய Bank என அடைமொழியிட்டு பலர் கூறி வந்தனர். யாழ்ப்பாண கிளையின் சர்வதேச கிளையில் நான் கடமையாற்றிய காலப் பகுதியில் எனது உயர் அதிகாரிகளிடமி ருந்தும் சக ஊழியர்களிடமிருந்தும் நான் கற்றுக்கொண்ட பல விடயங்களும் அனுபவங்களும் பிற்காலத்தில் என்னை யொரு சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஆற்றல் கொண்டவனாக மேம்படுத்திக் கொள்ள உதவின என்பதை நன்றியுடன் இங்கு நினைவு கூறுகின்றேன்.

சிரேஸ்ட முகாமையாளர் பதவி உயர்வு கிடைத்ததும், கொழும்பில் பணியாற்றிய நான், யாழ் கிளைக்கு மாற்றப்பட்டேன். இக் காலப்பகுதியில் யாழ் கிளையில் பதில் பிரதான முகாமையாளராக செயற்பட்டேன். யுத்தம் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியென்பதால் அபிவிருத்தியிற்கும் மீள் கட்டமைப்பிற் குமான விடயங்களிற்கு முக்கியத்துவம் கொடுத்து வங்கியின் செயற்பாடுகள் இடம்பெற்றன. அத்தோடு முற்றாக கணனி மயப்படுத்தப்பட்ட சேவையென்பதால் ஆளணி முன்பு போல் இல்லாமல் மிகக் குறைவாகவே காணப்பட்டது. இக் காலப்பகுதியில் யாழ் கிளையில் எனக்கு கிடைத்த அனுபவம் ஒரு புதிய கிளை யொன்றை திறப்பதற்கான முழுச் செயற் பாடுகளும் எப்படி இடம் பெறுகின்றன என்பனவாகும். எனது காலப்பகுதியில் நல்லூரில் புதிய கிளையொன்று ஆரம் பிக்கப்பட்டமையை இங்கு குறிப்பிடு கின்றேன். அந்நாட்களில் யாழ் அதிமேற்தரக் கிளையின் கீழ் 4 உப கிளைகள் இயங்கி வந்தன.

இப்போது அவை தனித்தனி கிளையாக மாறிவிட்டன. அத்தோடு நான் கொழும்பில் இறக்குமதி, ஏற்றுமதிப் பிரிவில் பணியாற்றிய போது பெற்ற அனுபவத்தைக் கொண்டு வாடிக்கையாளர்களின் இறக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கான நாணயக் கடிதங்களை கொழும் பிற்கு அனுப்பாமல் யாழ் கிளையிலேயே வைத்து செய்து அவர்களுக்கான சேவை களை வழங்கக் கூடிய வகையில் தேவை யான கணனிகள் தொடர்பாடல் சாதனங்கள், கணனி வலைப்பின்னல் அமைப்பு போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டு அச் சேவை தொடங்கப்பட்டது. இதனால் வாடிக்கையாளர்களிற்கு தமது இறக்குமதி தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்ள பெரிதும் உதவியாக உள்ளது.

யாழ்ப்பாணக் கிளைக்கு பெருமை சேர்க்கும் விடயங்களாக யாழ் கிளை ஆரம்பிக்கப்பட்ட போது முதல் முகாமை யாளராகக் கடமையாற்றிய திரு. செ.லோகநாதன் அவர்களே இலங்கை வங்கி யின் முதலாவது இலங்கை பிரஜையான பொது முகாமையாளர் (First srilankan General Manager) ஆகவும் பதவியேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இலங்கை வங்கியில் பொது முகாமை யாளராக பதவி வகித்த ஒரே ஒரு தமிழனும் அவரேயாகும். அத்தோடு யாழ் கிளையில் பணியாற்றிய எத்தனையோ பேர் பிரதிப் பொது முகாமையாளராகவும் உதவிப் பொது முகாமையாளராகவும் உயர் பதவிகளில் கடமையாற்றியுள்ளதுடன் தற்போதும் கடமையாற்றிக் கொண்டி ருக்கிறார்கள். இக்கிளையில் பணியாற்றிய மேலும் பலர் தங்களை ஒரு முழுமையான வங்கியாளராக மேம்படுத்திக் கொண்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வங்கியியல் தொடர்பான பல்வேறு துறைகளில் பிரகா சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.


யாழ்ப்பாணக்கிளை தனியே வாடிக்கையாளர் சேவையில் மட்டும் முதலிடம் என்றில்லை. பல்வேறு வகை விளையாட்டுக்களான கிரிக்கெட், உதை பந்தாட்டம், பற்மின்டன், வலைப்பந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள் போன்றவற் றிலும் ஈடுபாடு காட்டி வெற்றிகளைப் பெற்றுக் கொண்டதுடன் தொடர்ந்தும் ஆர்வத்தோடு செயற்பட்டுக் கொண்டும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நவராத் திரி, பொங்கல், விழாக்கள் போன்ற வற்றை வெகு விமர்சையாகக் கொண்டாடியும், ஊழியர்களுக்கான சுற்றுலாப் பயணங்களை ஒழுங்கு செய்து அசத்தியுள்ளது. அத்துடன் சமூகப் பொறுப்புடன் வைத்தியசாலைகள், பாடசாலைகள், அனாதை இல்லங்கள் போன்றவற்றிற்கும் தொடர்ந்து உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

வாடிக்கையாளர்களுக்கு உரிய சேவையை வழங்கும் யாழ் அதிமேற் தரக்கிளை மென்மேலும் மெருகுபெற்று நவீன வசதிகளுடன் பல்லாண்டு காலம் தொடர்ந்து சேவையை வழங்கிடவும், தற்போது பணியாற்றும் பிரதான முகாமை யாளர் உயர் அதிகாரிகள், பல்வேறு தரங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றவும், அவர்களின் சேவையினால் யாழ் கிளை மென்மேலும் வளர்ச்சியடைந்து வாடிக் கையாளர்களுக்கான அதி உச்ச சேவையை தொடரவும் வாழ்த்தி, அதற்காக எல்லாம் வல்ல இறைவனிடம் இறையருள் வேண்டி மன்றாடுகின்றேன்.

**தி. ஜேசுதாசன்** (AIB)
ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ் அதிமேற்தரக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுபத்தைந்தை எட்டிப் பிடிக்கும் யாழ்நகரக்கிளை...

1939ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி, படிப்படியாக தனது வங்கி நடவடிக் கைகளைப் பிரதான நகரங்களில் பரவ லாக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியது. இந்தவகையில். இலங்கை வங்கி தனது ஐந்தாவது கிளையை யாழ் நகரில் தொடங் கியது. அதன்படி, யாழ்நகரக்கிளை, 1945ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மின்சார சபைக் கட்டடத்துக்கு முன்பாக உள்ள தனியார் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆறு ஊழியர்களுடன் ஆரம்பிக்கப் பட்ட இந்தக்கிளை, பின்னர் பன்னிரண்டாக அதிகரிக்கப்பட்டது. அதன் முதல் முகாமை யாளராக, திரு.C.லோகநாதன் அவர்கள் பொறுப்பேற்றார். 1953ம் ஆண்டிலிருந்து பொது முகாமையாளராகப் பணியாற்றத் தொடங்கிய இவரே, இந்தப் பதவியை அடைந்த முதலாவது இலங்கையர் எனும்பெருமைக்குரியவர். இக்கிளை, 1960ம் ஆண்டு அதே வீதியில் “இலங்கை வங்கி” க்கென சொந்தமாக அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு இடம்மாறியது.

இவ்வாறிருக்க, 1978ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23ம் திகதி, என்னை இலங்கை வங்கியுடன் இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கினேன். நான் முதன் முதல் வேலை செய்யத் தொடங்கியதும் இந்த யாழ் நகரக் கிளைதான். அப்போது என்னுடன் சேர்த்து 135 ஊழியர்கள் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தோம். கிட்டத் தட்ட இது ஒரு தொழிற்சாலையைப் போல இயங்கிக் கொண்டிருந்தது.

அந்த நாட்களில், அத்தனை ஊழியர்களும் அமர்ந்து வேலை செய்யக் கூடியவாறு தளபாட வசதிகள் கூட அங்கி ருக்கவில்லை. அப்படியிருந்த போதும், எம் மனநிறைவுக்கும், மகிழ்ச்சிக்கும் குறை விருக்கவில்லை.

1980களில் அனைத்து இலங்கை வங்கிக் கிளைகளுக்கிடையான லாப மீட்டலில், கண்டி நகரக்கிளை முதலிடத் தையும், யாழ் நகரக்கிளை இரண்டாம் இடத்தையும் தொடர்ந்து பலவருடங்கள் தக்கவைத்துக் கொண்டன என்பது எமக்குப் பெருமை சேர்க்கும் விடயம்.

நான் யாழ் நகரக்கிளையில், கடமை யிலிருந்த காலத்தில் நடந்த சில மறக்க முடியாத அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ம் மே மாதம் 31ம் திகதி இரவு, மாத இறுதி வேலைகளில் நாம் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருநாள். சுமார் இரவு 10 மணியிருக்கும். சிங்களத்தில் பலர் கூச்சலிடும் ஒலிகேட்டு வெளியில் வந்து பார்க்கிறோம். வேம்படிச் சந்தியிலிருந்து திகுதிகுவென தீப்பற்றியெரிந்து கொண்டிருந்தது நான் நாள் தவறாது போய் வரும் பூபாலசிங்கம் புத்தகசாலை. இது மட்டுமல்ல, பாராளுமன்ற உறுப்பினர் திரு.V. யோகேஸ்வரன் அவர்களது இல்லமும் தீக்கிரையாகிக் கொண்டிருந்தது. விக்கித்து போனோம். பூபாலசிங்கம் கடைச் சுவருடன் தொடர்ந்து பின்னாலிருந்த வீடுகளிலும் தீ பரவத் தொடங்கியிருந்தது. அங்கிருந்த மக்கள் அழுகுரல்களுடன் அவசர அவசரமாக தங்கள் உயிரைக் காக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் தொடர்ச்சியாகக் கூக்குரல் கேட்டபடியிருந்தது. அவசரமாக மதில் மேலேறிப் பார்த்தால், நெருப்பிற்குள் சிக்கியிருந்தது ஒருகுடும்பம். அன்று பணியிலிருந்த எம் ஒரு சிலரால் அந்தக் குடும்பம் அன்று உயிர் தப்பியது. அன்றிரவு முழுவதும் உணவுமின்றி வங்கியிலேயே இருந்தோம். அடுத்தநாள் காலை நாம் நினைத்ததை விடவும் மாபெரும் அழிவு எம் சமுகத்திற்கு ஏற்பட்டிருந்ததெனத் தெரியவந்தது. எம் பொக்கிஷமான யாழ் நூலகமும் கருகிச் சாம்பலாகியிருந்தது.

1984ம் ஆண்டு என்று ஞாபகம், ஆயுதப் போராட்டம் மெல்ல மெல்லத் தீவிரமடைந்து கொண்டிருந்தகாலம். எமது யாழ் நகரக் கிளையைக் கொள்ளையடிக்கும் ஒரு முயற்சி நடந்தது. ஒரு இரவு வங்கியை சேதப்படுத்தி வங்கிக்குள் நுழைந்த போராளிகள் குழு, பாதுகாப்பு அறையைத் தகர்க்கப் பெருத்த முயற்சியை மேற்கொண்டது. அடித்து உடைக்கும் முயற்சி தோல்வியுற, அந்த அறைக்கதவுக்குக் கீழே குண்டு வைத்தாவது தகர்க்க முயன்றிருக்கின்றார்கள். அதுவும் தோல்வியடைய, வெளியேயிருந்த இரும்பு பாதுகாப்புப் பெட்டகத்தை எடுத்துச் சென்று விட்டார்கள். ஆனால், அதுவும் அவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தான் கொடுத்திருக்கும். ஏனெனில், அதற்குள் இருந்தது வெறும் விபரக் கோவைகள் தான்!

இதெயெல்லாம் விடவும் பெரிய நகைச்சுவை, அடுத்த நாள் காலை நாம் வந்து பாதுகாப்பு அறைக் கதவைத் தொட, காக்கை இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக, அது தானாகவே திறந்து கொண்டது!

இந்த அனுபவங்களோடு சேவை செய்தநான் வடக்கில் இருந்து 1984ஆம் ஆண்டு மாற்றலாகி மீண்டும் வடக்கிற்கு வர 26 ஆண்டுகளாகியது. 2010ம் ஆண்டு UNHCR ஆல் மீள்குடியேற்றத்திற்கான நிதி உதவி வழங்கும் திட்டத்தின் இணைப்பாளராக வவுனியா மாவட்டக் காரியாலயத்தில் பொறுப்பேற்றுக்கொண்டேன். இந்தப் பயணம் மீண்டும் 2013ல் என்னை யாழ் கிளையில் பிரதான முகாமையாளராகக் கொண்டு வந்து சேர்த்தது. அந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெறும் போது எந்தப் புள்ளியில் இலங்கை வங்கியுடனான என் உறவு தொடங்கியதோ அங்கேயே அழகாக நிறைவுக்கு வந்தது. இதனால் தானோ என்னவோ, யாழ் நகரக்கிளையும் அங்கு பணிபுரிந்த அனைவரும் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு இடத்தை பிடித்துக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களில் சிறு கிளையாக இருந்த போது 135 பேருடன் இயங்கிய வங்கி, நான் விடை பெறும் போது பல மடங்கு விரிவடைந்து, ஆனால் வெறும் 46 பேருடன் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. கணனி மயமாக்கமும், தொழினுட்ப முன்னேற்றங்களும் எம் பணியை இன்னும் இலகுவாக்கி, மேலும் சிறப்பானதொரு சேவையை நாம் மக்களுக்கு வழங்க உதவி புரிந்தது.

இந்த வருடம் இந்தக் கிளை கம்பீரமாகத் தனது 75 வருடங்களைப் பூர்த்தி செய்து அதிமேற்தரக் கிளையாகத் தரம் உயர்ந்து நிற்கிறது. இத்தோடு மட்டுமல்லாது, இந்தக் கிளை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து தனது சேவையை மேலும் பல லட்சம் பேருக்கு எதிர்காலத்தில் வழங்குவதற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதைய பிரதான முகாமையாளருக்கும், சக ஊழியர்களுக்கும், வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் அவர்களுக்கும் இவ் வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**இ. கிருஷ்ணபிள்ளை**
ஓய்வுநிலை பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ். அதிமேற்தரக் கிளை.

*தான் சிறந்த மனிதன்என்று யாருக்கும் நிரூபிக்க*
*ஆசைப்படாத மனிதன் எவனோ அவனே*
*உண்மையில் சிறந்த மனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதான முகாமையாளராக யாழ் அதி மேற்தரக்கிளையில் எனது அனுபவப் பகிர்வுகள்

பிரபஞ்ச இயக்கம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது என்பது ஆண்டவன் நியதி. 24.09.1974ல் ஓர் லிகிதராக தாய் வங்கியில் இணைந்து 15.03.2015ல் அதே தாயிடம் பிரதான முகாமையாளராக கடமையாற்றி ஓய்வு பெறவைத்த இறைவனின் கருணையைப் போற்றுகின்றேன்.

இது ஒரு பொற்காலம் எமது திரு நாட்டில் ஐந்தாவது கிளையாகவும், புகழ் பூத்த பொது முகாமையாளரையும், புலமையும் மிக்க வங்கித்துறை சார்ந்த நூற்றுக் கதிகமான பெருமக்களை உருவாக்கிய எமது அன்னைக்கு, புதிய தொழில் நுட்பங்களும், இளம் இரத்தமும் செலுத்த வேண்டிய மிக முக்கியமான காலத்தின் கட்டாயம், நாடெங்கும் வங்கி நடவடிக்கைகள் ஒரே வலைப்பின்னலின் கீழ் செயற்பட தாய்க்கிளையின் கீழ் பல சேவை நிலையங்கள் முக்கிய இனங்காணப்பட்ட இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு பின் படிப் படியாக சுயாதீனக் கிளைகளாய் மாற்றப் பட்ட முக்கிய தருணம் இக்காலம் தான்.

அதிகாரப் பரவலாக்கத்தின் தேவையை உணர்ந்து, பல இளம் ஆற்றல் மிக்க அதிகாரிகளை இனங்கண்டு, களப் பரீட்சையில் ஈடுபட்டு அதில் பெற்ற வெற்றியை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தது ஆனந்தமான அனுபவம்.

இளம் கன்று பயமறியாது, தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி ஏன் அதற்கு மேலும் பாயும் என வியப்புற்றேன். முயற்சிகள் வீணாகவில்லை. இனங் காணப் பட்ட இவ் அதிகாரிகள் இன்று மாகாண (பிராந்திய), மாவட்ட கிளை நிர்வாகங்களில் பிரதான நிர்வாகிகளாக மேலும் பலர் பதவி உயர்வுடன் இளநிலை அதிகாரிகளாகவும் பணியாற்றுவதை ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து இரசித்தேன்.

இக் கால கட்டத்தில் பாமரர் முதல் படித்தவர் வரை பாராட்டக்கூடியதாக சேவையினை நல்கி அவர்கள் பாராட்டப் படும் போது விதைத்த விதையின் அறுவடையை எண்ணி பேருவகையுற்ற காலமிது.

உண்மையில் இது ஆசியுரையல்ல அனுபவப்பகிர்வு மட்டுமே, ஆதலால் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல் சில கருத்துக்களையும் பதிவிட விளைகின்றேன். “ஒரு பொல்லாப்பும் இல்லை”, “எப்பவோ முடிந்த காரியம்” சித்தர் வாக்கு யாரையும் குறை கூற முற்படவில்லை, எமது வங்கியில் சகல வரப்பிரசாதங்களையும் முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்துக் கொண்டு சுயலாப நோக்கத்திற்காக தந்திரமாகப் பயன்படுத்தி எமது வியாபார நடவடிக்கைகளை நயவஞ்சகமாகப் பறித்தவர்களும் இருந்த காலமிது. ஆனால் அதனை எமது ஊழியர்கள் அனைவரும் ஒன்று பட்டு துணிவுடன் முறியடித்து அவர்களின் கடமையுணர்ச்சியை செப்பியது.

மேலும் சில தனிப்பட்ட கருத்துக்களையும் குறிப்பிட விளைகிறேன். வங்கியின் வியாபார முன்னேற்றம் கருதி சேவை மூப்பிலன்றி திறமை அடிப் படையில் குறிப்பட்ட காலம் திட்டமிட்டு கடமை புரிய அனுமதிப்பது பல சாதகமான பலன்களை அடையமுடியும். மேலும் பல நடைமுறைப் படிகளை தாண்டுவதில் சில இடர்கள் இருந்தமையால் வயது முதிர்ந்த ஆனால் உறுதியான பல்வேறு சந்தர்ப்பங்களில் தகர்க்க முடியாத எமது மூதாட்டிக்கு இயலுமான வரையில் சோடனை செய்து குமரி போல் அழகுபடுத்தி இரசித்ததும் இக்காலம் தான். இவ்வாறொரு சந்தர்ப்பத்தை எனக்குத் தந்த எல்லாம் வல்ல. “கிருபாகரன்” பாதம் பணிந்து நீங்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துக்கள். பவள விழா அன்னையின் பாதம் பணிய இறைவன் தந்த வரம் நன்றியுடன் வியக்கத்தக்கது.

**சண்முகரத்தினம் பிறேம்குமார்**
அமரநிலை பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ். அதிமேற்தரக் கிளை.

*நமக்கு நாமே கண்ணாடியாக இருந்து விட்டால்...*
*யார் முன்னாடியும் மண்டியிடவும், மன்னிப்பு*
*கேட்கவும் அவசியம் இல்லை..!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வு நிலை பிரதான முகாமையாளரின் வாழ்த்துரை

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையின் 75வது ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு இச்செய்தியினை வழங்குவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையில் உள்ள வர்த்தகர்களின் நீண்ட நாள் அபிலாசைகளை நிறை வேற்றும் முகமாக ஒரு தேசிய வங்கியை உருவாக்க வேண்டும் என்ற பரிந்துரைக் கிணங்க 1939ம் ஆண்டு அரச மன்றத்தால் சட்டவாக்கம் அங்கீகரிக்கப்பட்டு இலங்கை வங்கி இயக்குனர்களின் முதலாவது கூட்டம் 1939ம் ஆண்டு ஆடி மாதம் 26ம் திகதி நடைபெற்று இலங்கை வங்கி சம்பிரதாய பூர்வமாக 1939ம் ஆண்டு ஆவணி மாதம் 01ம் திகதி அன்றைய தேசாதிபதியாகவிருந்த சேர் அன்றூகல் டிறெகாற் என்பவரால் 41, பிரிஸ்டல் வீதி கோட்டை என்னும் முகவரியில் அமைந்த கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இன்றும் அதே இடத்தில் முதலாவது கிளையான நகர அலுவலகம் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

இலங்கை வங்கியானது தனது வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் முகமாக தனது கிளைகளை கண்டி, காலி, புறக்கோட்டை, யாழ்ப்பாணம் என ஸ்தாபித்தது. அந்த வகையில் 1945ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி தனது 5வது கிளையாக யாழ் நகரில் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள பரணி ஹொட்டல் அமை விடத்தில் யாழ் கிளை திறக்கப்பட்டது. கிளை யின் முதலாவது முகாமையாளராக திரு. செல்லையா லோகநாதன் பொறுப்பேற்றார். இவர் பின்னர் 1953இல் பொது முகாமை யாளரான முதலாவது இலங்கையர் என்ற பெருமையைப் பெற்று 16 வருடங்கள் சேவை செய்து ஓய்வு பெற்றார். அன்றைய முகாமையாளர்களினால் கடைப்பிடிக்கப பட்ட சிறந்த கொள்கையினால் யாழ்ப்பாணக் கிளை துரித வளர்ச்சியடைந்தது. வளர்ச்சிக் கேற்ற இடவசதி தற்போதுள்ள இடத்தில் ஒரு நிலத்தைக் கொள்வனவு செய்து வசதியான 2மாடிக் கட்டிடத்தை அமைத்து புதிய கட்டிடத்தில் 1961 நவம்பர் இல் தனது சேவையைத் தொடர்ந்தது.

பல முகாமையாளர்களினதும் ஊழி யர்களினதும் கடின உழைப்பினால் துரித வளர்ச்சியடைந்த யாழ் கிளையானது திரு. இராசையா சிவலிங்கம் முகாமையாளராக இருந்த காலத்தில் வாடிக்கையாளர் சேவை யில் சிறந்து விளங்கியதோடல்லாமல் தன்னகத்தே சர்வதேசப் பிரிவினையும் (International Unit) ஸ்தாபித்தது.

வங்கிச் சேவையில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக சேவைகளை வழங்கி ஒரு புதிய பரிணாமத்தை எட்டியிருந்தது. இதனால் 1982 இல் வங்கியின் துரித வளர்ச் சியினால் இக்கிளை மேற்தரக் கிளையாக தரமுயர்த்தப்பட்டது. இந்தக் காலத்தில் யாழ் மாவட்டத்தின் எல்லாப் பகுதிப் பட்டணங் களிலும் இலங்கை வங்கி தனது கிளைகளை ஸ்தாபித்து மாவட்ட மக்களிற்கு உன்னதமான வங்கிச் சேவைகளை வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. எனினும் யாழ் மாவட்ட மக்களில் அநேகமானோர் யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் கணக்கினைப் பேணுவதை ஒரு பெருமையாகக் கருதுகின்றனர்.

23.08.1978 இல் இலங்கை வங்கியில் இணைந்து கொண்ட நானும் பல தோழர்களும் யாழ்ப்பாணக் கிளையில் சேவை செய்கின்ற பாக்கியத்தைப் பெற்றோம். 1978ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு பிற்பகுதி வரை காசாளராக இலிகிதராக வங்கியின் சகல பிரிவிலும் பல முகாமையாளர்களின் கீழே வேலை செய்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் காலத்தில் 120க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்தோம். காலை 8.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை ஒரு தொழிற்சாலை போல யாவரும் மிகப் பரபரப்பாகவும், துரிதமாகவும் இயங்கிக் கொண்டிருப்போம். எல்லோரும் ஒற்றுமையாகவும், குழுவாகவும் மேலதிகாரிகளிற்கு பணிவாகவும் வேலை செய்வோம். இந்தக் காலம் வாழ்வில் மறக்க முடியாத ஒரு காலமாக உள்ளது.

நாட்டில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக வங்கிகளின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன. கடன் வழங்கலில் கட்டுப்பாடுகள் காணப்பட்டன. வங்கிகளில் திரவப் பணம் வைத்திருக்க முடியாது. கிளைகளில் பணப் பரிமாற்றம் நடைபெறுவதில்லை. வங்கிகளில் காசு இருப்புக்கள் யாவும் இராணுவ முகாம்களான குருநகர் முகாம், கோட்டை முகாம் போன்ற இடங்களில் பேணப்பட்டு வாடிக்கையாளர்களிற்கு சேவை வழங்கப்பட்டது. தொலைத் தொடர்பு பரிவர்த்தனை இல்லை. இவ்வாறான பல இன்னல்களின் மத்தியில் ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் வங்கிகள் மக்களிற்கு முடிந்தளவு உன்னத சேவையை வழங்கியது. இந்தக் காலப்பகுதியில் பெரும்பாலானோர் தொழில் முனைவோர் யாவரும் இடம் பெயர்ந்து கொழும்பிலும் இன்னும் பல புலம்பெயர் தேசங்களிலும் குடியேறினர்.

அண்மையில் ஏற்பட்ட அமைதிச் சூழலில் வங்கிகள் யாவும் கணணி மயப்படுத்தப்பட்டு தானியங்கி இயந்திரங்களும் இணைக்கப்பட்டு 365 நாட்களும் 24 மணி நேரமும் வங்கிச் சேவையை உலகத் தரத்திற்கு ஏற்ப சேவை வழங்கி வருவதை நாம் அனைவரும் அனுபவித்து வருகின்றோம்.

என்னைப் பொறுத்த வரையில் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் 2003 சித்திரை தொடங்கி 2009 கார்த்திகை வரை உப முகாமையாளராகவும் 2015இல் பத்து மாதங்கள் பிரதான முகாமையாளராகவும் வேலை செய்யக் கிடைத்தது. இந்தக் காலத்தில் என்னுடன் வேலை செய்த மேலதிகாரி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நண்பர்கள் யாவரும் மிகவும் வினைத்திறனுடன், நேர்மையாகவும் கடமை புரிந்த அனைவரையும் மறக்க முடியாது. அனைவருக்கும் நன்றிகள். மேலும் வளர்ச்சிக்கு பெரிதும் காரணமாக இருந்த எமது வாடிக்கையாளர்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றேன். நீங்கள் யாவரும் கொடுத்த ஒத்தழைப்பே வங்கி மேற்தரக் கிளையாக உயர்ந்து பரிணமிக்கக் காரணமாகும். யாழ்ப்பாணத்தின் வளர்ச்சிக்குப் பின்னால் இலங்கை வங்கி யாழ் கிளையின் பணியின் பங்கு மகத்தானது. எனவே எமது வாடிக்கையாளர்களிற்கு நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் வங்கியுடன் இணைந்திருந்து உங்களிற்கான சேவையினைப் பெற்றிடுங்கள்.

நிறைவாக இன்றைய பிரதான முகாமையாளரும், உத்தியோகத்தர்களும் உங்கள் வங்கிச் சேவையினை வினைத்திறனுடன் உச்சமாக வழங்கி எமது வங்கியினை வங்கிச் சந்தையில் முதல் நிலையில் பேண வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**தி. செந்திநாதன்**
ஓய்வுநிலை பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி, யாழ்.அதிமேற்தரக்கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வங்கி அதிமேற்தரக் கிளை
## பவளவிழா வாழ்த்து

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை 75வது வருட பூர்த்தியில் தனது பவளவிழாவினைக் கொண்டாடுவதனை முன்னிட்டு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

ஐந்தாவது கிளையாக சிறிதாக உருவாகினாலும் பல கட்ட வளர்ச்சியை அடைந்து இலங்கையின் வடபால் மக்கள் மத்தியில் வங்கிப் பழக்கத்தை அறிமுகப் படுத்தியதில் யாழ் அதிமேற்தரக் கிளை முதன்மையானது, பாரம்பரிய வங்கியியல் தொழிலில் கணிசமான கால வரலாற்றைக் கொண்டதாக திகழும் இக்கிளையானது சர்வதேச பிரிவினையும் உருவாக்கி வெளிநாட்டு அனுப்பீடுகளை பெறுவதற்கும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை கையாளவும் மக்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது. இன்றைய டிஜிற்றல் யுகத்தில் தனது சேவைகளை பாரம்பரிய வங்கியியல் முறைமையைக் கடந்து தன்னியக்க காசு பெறும், வைப்பிடும் இயந்திர அமைப்பும் இணைய வங்கியியல் வசதிகளுடனும் யாழ் நகரில் தலைநிமிர்ந்து நின்று அதிமேற்தரக் கிளையாக விளங்குகின்றது. மேலும் நவீன வசதிகளுடன் கூடிய கட்டிட வசதிகளை அதிகரிக்கும் நிலையில் உள்ளது.

இலங்கை வங்கி யாழ் அதிமேற்தரக் கிளையின் பிரதம முகாமையாளராகக் கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தினை எனது வாழ்நாளில் கிடைத்த பாக்கியமாகக் கருதுகின்றேன். எனது முப்பத்தேழு வருட இலங்கை வங்கி வாழ்வில் வகித்த முக்கிய பல பதவிகளை நினைவு கூர்வது இத்தருணத்தில் பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

2004ம் ஆண்டு இலங்கை வங்கியானது தனது Manual Operation இல் இருந்து முழுவதுமாக சர்வதேச தரத்திற்கேற்ப கணனி மயப்படுத்தப்படுவதற்காக வட மாகாணத்தில் இருந்து மூன்று உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதில் என்னுடன் சேர்ந்து திரு.க. சகாதேவன் (ஓய்வுநிலை செயற்பாட்டு முகாமையாளர், வடபிராந்தியம்), திரு. விஜயகுமார் (முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி) ஆகியோர் தெரிவாயினர்.

நாங்கள் மூவரும் தேவையான ஆறுமாத காலப் பயிற்சியினைப் பெற்ற பின்பு தென்னிலங்கை மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளை எமது ICBS Team உடன் சேர்ந்து கணனி மயப்படுத்தினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்பு 2007ல் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையின் முகாமையாளராகவும், 2011ல் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி மேற்தரக் கிளையின் சிரேஸ்ட முகாமையாளராகவும், 2014ல் இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையின் முகாமையாளராகவும் 2015ல் இலங்கை வங்கி மானிப்பாய் மேற்தரக்கிளையின் சிரேஸ்ட முகாமையாளராகவும் அதன் பின்பு சக நண்பர் திரு. பொ. பாலகுமார் அவர்களின் மறைவைத் தொடர்ந்து 2016ல் வன்னி பிரதேச முகாமையாளராகவும் (அத்துடன் ஆறு மாதகாலம் மேலதிகமாக பதில் பிரதம முகாமையாளராக வவுனியா அதி மேற்தரக் கிளையில் கடமையாற்ற வேண்டியேற்பட்டது) அதைத்தொடர்ந்து 2017ல் இலங்கை வங்கி யாழ்ப்பாணம் பிரதேசம் 2 இன் பிரதேச முகாமையாளராகவும் மேலதிகமாக பிரதேசம் 1 இன் பிரதேச முகாமையாளராகவும் கடமையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

இத்தகைய பல பொறுப்புக்களை வகித்தும் மனதில் ஏதோ ஒரு குறை இருந்தது. அது இலங்கை வங்கியின் யாழ் அதிமேற்தரக் கிளையில் பிரதம முகாமையாளராக கடமையாற்றவில்லை என்பதாகும். எனது மனக்குறையினை அப்போதைய உதவிப் பொது முகாமையாளரான திரு. M.J பிரபாகரன் அவர்களிடத்தில் தெரிவித்த போது அவரும் எனது அவாவினை ஏற்றார். 2018ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை வங்கியின் அதிமேற்தரக்கிளையின் பிரதம முகாமையாளராக பொறுப்பேற்கும் பாக்கியம் கிடைத்தது. அப்போது பிரதம முகாமையாளராக இருந்த திருமதி சுமங்களா பிரபாகரன் அவர்கள் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

நான் பொறுப்பேற்ற போது பூச்சிய நிலையில் இருந்த நட்சத்திர இலக்கினை (targets) வருட முடிவில் மூன்று நட்சத்திரங்களாக அதிகரிக்க முடிந்தது. (மொத்தம் ஐந்து நட்சத்திரங்கள்) திறமை வாய்ந்த முகாமையாளர்கள் பலரை உருவாக்கிய இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளையானது இலங்கையின் ஐந்தாவது கிளையாகும். 1980 களில் Manual operation ஆக இருந்த காலத்தில் 150 ற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றினார்கள். அக்காலங்களில் ஊழியர்கள் இதனை ஒரு Factory (தொழிற்சாலை) என்றே அழைத்தார்கள். பெரும்பாலான அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கணக்குகளை இலங்கை வங்கி யாழ் அதிமேற்தரக் கிளையிலேயே பேணுகின்றனர்.

தற்போதைய பிரதான முகாமையாளர் திரு.கு.சிவஞானசுந்தரம் அவர்கள் பல்துறைசார் விற்பன்னர் ஆவார். அவரின் தலைமையில் யாழ்.அதிமேற்தரக் கிளையானது மேலும் உன்னதம் அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதோடு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. பிரேமராஜன்**
ஓய்வுநிலை பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி,
யாழ். அதிமேற்தரக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரேஷ்ட பிரதிப் பிரதம பாதுகாப்பு அதிகாரியின் வாழ்த்துச்செய்தி

இலங்கை வங்கி தனது 81 வருட கால வங்கியியல் வரலாற்றினை தாண்டி வெற்றியுடன் பயணித்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில், அதன் 5வது கிளையாக வடமாகாணத்தில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் அதிமேற்தரக்கிளை தனது 75வது வருட பூர்த்தியைக் கொண்டாடுகிறது என்பதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன்.

யாழ் அதிமேற்தரக்கிளை - யாழ் நகரின் மையப்பகுதியில் தனக்கேயுரிய கம்பீரத்துடன் அமைந்திருப்பதோடு உலகின் சகலபாகங்களில் இருந்தும் வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு, மிகவும் அர்ப்பணிப்பு மிக்க ஊழியர்கள் மூலம் வினைத்திறனான சேவையினை வழங்கி வருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். அது மட்டுமன்றி, நவீன தொழினுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப போட்டி உலகில் ஈடு கொடுக்க கூடியவாறு இணைய ஊடக வழி மூலம் பல தரப்பட்ட வசதிகளை வங்கியின் அறிவுறுத்தல்களுக்கமைவாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கி நிலைபேறான வெற்றியுடன் செயற்பட்டு வருவதும் சிறப்பான விடயம்.

இனிவரும் காலங்களிலும், யாழ் அதிமேற்தரக்கிளை சிறந்ததொரு கிளையாக ஒளி வீசும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. அதன் வெற்றிக்கு முதுகெலும்பாக இருந்த, இருக்கின்ற ஒவ்வொரு ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் பிரதான முகாமையாளர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இராசையா சபானந்தம்**
சிரேஷ்ட பிரதிப் பிரதம பாதுகாப்பு அதிகாரி,
(வலயம் III
இலங்கை வங்கி,
வடக்கு/ கிழக்கு/ வடமத்திய மாகாணம்).

*போகும் போதே என்னை ரசித்துக் கொண்டே*
*போ.. திரும்ப வரமாட்டேன் உனக்காக..*
*இப்படிக்கு வாழ்க்கை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Opening Ceremony of a Special Stall of Jaffna Supra Grade Branch
at the Nallur Kanthaswamy Temple on 06.08.2001






Donations to the Teaching Hospital Jaffna
by the District Staff

Saturday Banking in Jaffna Branch





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண அதிமேற்தரக் கிளையில் பிரதான முகாமையாளர் பதவியை அலங்கரித்தவர்கள்

| | | |
|---|---|---|
| 01. | Mr. C. Loganathan | 02.02.1945--1946 |
| 02. | Mr. E.C.G Wickramasingha | 1947-1949 |
| 03. | Mr. T.S Muthulingasamy | 1950-1953 |
| 04. | Mr. H.L.D Selvaratnam | 1954-1956 |
| 05. | Mr. R. Sivagnanasothy | 1957-1960 |
| 06. | Mr. A.B Rajasingam | 1960- 1965 |
| 07. | Mr. R.P Nadarajah | 1965-1968 |
| 08. | Mr. A. Navaratnam | 1969-1970 |
| 09. | Mr. T.V.A Chanmugam | 1970-1973 |
| 10. | Mr. M.T.A Jayanathan | 1973-1975 |
| 11. | Mr. D.A. Aseervatham | 1975-1977 |
| 12. | Mr. K.Kanagaratnam | 1977-1978 |
| 13. | Mr. R.Sivalingam | 1978-1982 |
| 14. | Mr. M. Kanagaratnam | 1983-1986 |
| 15. | Mr. K. Thirunavukkarasu | 1986-1990 |
| 16. | Mrs. K. Thurairajah | 1990-1995 |
| 17. | Mr. V. Thillainathan | 1996-1998 |
| 18. | Mr. B.A Arumainayagam | 1998-2001 |
| 19. | Mr. C. Nadarajalingam | 2001-2001 |
| 20. | Mr. S. Vignarajah | 2001-2005 |
| 21. | Mr. N. Sivaratnam | 2005-0ct.2006 |
| 22. | Mr. R. Vijayasingam | Nov.2006 -Aug 2008 |
| 23. | Mr. R. Jeyandra | Sept.2008 Jan.2009 |
| 24. | Mr. K.P. Anandanadesan | Feb 2009 May 2010 |
| 25. | Mr. A.Mahadeva | June 2010- March 2012 |
| 26. | Mr. T.Jesuthasan | April 2012- June 2013 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 27. | Mr. R. Kirushnapillai | July 2013-Dec2013 |
| 28. | Mr. S.Premkumar | Jan 2014-March 2015 |
| 29. | Mr. T.Senthinathan | April 2015- Nov. 2015 |
| 30. | Mr. G. Sagathevan | Dec. 2015-Nov.2016 |
| 31. | Mrs. S. Pirapaharan | Dec.2016-Nov2018 |
| 32. | Mr. E. Premarajan | Dec.2018- Oct.2019 |
| 33. | Mr. S. Anantharajah | Nov 2019-Feb 2020 |
| 34. | Mr. K. Sivagnanasudaram | March 2020 |

## சிந்திக்க சில வரிகள்

- *உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்*
- *பேச்சிலும் நடத்தையிலும், பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்*
- *பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன்வாருங்கள்*
- *அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியின் வளர்ச்சிப்பாதையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் முன்னேற்றங்களும்

1939 - ஜீலை 26 ஆம் திகதி இலங்கை வங்கியில் முதலாவது பணிப்பாளர் சபைக்கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் 1ம் திகதி 41, பிரிஸ்டல் வீதி, கொழும்பு கோட்டையில் இலங்கை வங்கி தேசாதிபதி சேர். அன்ரூ கல்டிகொட்டினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

1946 - வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரத்திற்காக, கொழும்புக் கோட்டையிலுள்ள "கிராண்ட் ஒரியண்டல் ஹோட்டலில்" வெளி நாட்டுப் பகுதியொன்று திறக்கப்பட்டது.

1949 - நிதிச்செயற்பாடுகளின் முன்னணி வகித்த உன்னத மையமான லண்டன் நகரத்தில் லட் கேட் உறில் என்னும் இடத்தில் இலங்கை வங்கியின் முதலாவது வெளிநாட்டுக் கிளை திறக்கப்பட்டது.

1953 - ஜனவரி 1ந் திகதி - பொது முகாமையாளராக முதல் இலங்கையரும் வங்கியின் ஆரம்பகால ஊழியர்களில் ஒருவருமான திரு.சி லோகநாதன் நியமிக்கப்பட்டார்.

1956 - நடமாடும் வங்கிச் சேவையை இலங்கை வங்கி அறிமுகப் படுத்தியது

1961 - ஜுலை 1961 ஆம் ஆண்டு 65ம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வங்கி தேசியமயமாக்கப்பட்டது.

1966 - டிசெம்பர் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1967 - புதிய நடவடிக்கைகளையும் , சவால் களையும் எதிர்கொள்ளும் விதத்தில் ஊழியர்களின் திறமையை வளர்ப் பதற்கு ஊழியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1970 - அதிகாரப் பரவலாக்கம் ஆரம்பிக் கப்பட்டது. நான்கு பிராந்திய காரியா லயங்கள், கொழும்பு, கண்டி, யாழ்ப் பாணம் , காலி ஆகிய இடங்களில் அங்குள்ள 56 கிளைகளைக் கண் காணிப்பதற்காக திறக்கப்பட்டன.

1971 - கச்சேரி சிறாப்பர்களின் கடமை களை மேற்கொள்ள, கச்சேரிக் கிளைகளை இலங்கை வங்கி திறந்ததன் மூலம், அரசாங்கத் தொழிற்பாடுகளில் கூடிய பகுதி வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.

1973 - பெப்ரவரி மாதம் வங்கி கிராமிய விவசாய கடனளிப்புத் துறையில் பிரவேசித்து தனது முதலாவது கமத்தொழில் சேவை நிலையக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Public Library Jaffna

கிளையை "கிராகமவில்" திறந்து அதனைத் தொடர்ந்து இது போன்ற கிளைகளை விரைவாக நிறுவ 1977ல் மொத்தம் 398 கிளைகளை நிறுவியது. வீட்டுக் கடன் துறையில் வங்கி பிரவேசித்தது.

1975 - சந்தைப்பகுதிகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கும் விதத்தில் வங்கியின் மறுசீரமமைப்பு மேற் கொள்ளப்பட்டது. பிராந்திய காரியாலயங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

1978 - ஜனவரி - 500க்கு மேற்பட்ட கிளைகளின் கண்காணிப்புக்காக மாவட்டக் காரியாலயங்கள் திறக் கப்பட்டன. இதன் மூலம் அதிகாரங் கள் மேலும் பரவலாக்கப்பட்டன. குறுகிய, மத்திம, நீண்டகால கடன் வழங்கல் கைத்தொழில் நிறுவனங் களுக்கு வர்த்தக ஆலோசனை வழங்கல், ஆகியவற்றிற்கான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தில் (IFC) கடன் வழி அறிமுகம். முதலாவது சிறிய, நடுத்தரக் கைத் தொழில் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கல் அறிமுகம்.

1979 - ஜூன்- வங்கி கடல் கடந்த வங்கி யியல் சேவையில் (OFF Shore Banking) பிரவேசித்து, மத்திய வங்கி யின் அனுமதியுடன் வங்கியின், வெளிநாட்டு நாணய வங்கியியல் பகுதி கொழும்புக் கோட்டையில் உள்ள யோர்க் வீதியில் ஆரம்பிக் கப்பட்டது.

வங்கியின் லண்டன் கிளைக்கு, 1979ம் ஆண்டின் இங்கிலாந்து வங்கியியல் சட்டத்தின் பிரகாரம் "அங்கீகரிக்கப்பட்ட அந்தஸ்து (Recognized Bank Status) வழங்கப் பட்டது.

1980 - வங்கியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபா 100 கோடியாக அதிகரிக்கப்பட்டது.

ஜனவரி - வங்கி நிர்வாகம், பிராந் தியங்களிலிருந்து வலய நிர்வாகத் திற்கு மாற்றப்பட்டது. உதவிப்பொது முகாமையாளர்களின் கீழ் 5 வலயங் கள் ஸ்தாபிக்கப்பட்டன.

இலங்கையின் முதலாவது குத்த கைக் கம்பனியான, இலங்கை ஓரியன் குத்தகைக் கம்பனியுடன் கூட்டிணைந்து வங்கியால் ஆரம் பிக்கப்பட்டது.

1981 - மே-வங்கியின் இரண்டாவது வெளி யூர்க்கிளை, மாலைதீவுக் குடியரசின் தலைநகர மாலேயில் ஆரம்பிக் கப்பட்டது. கம்பனிகள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றுக்கான சேவைகளை துரிதமாகவும் திறமை யாகவும் செயற்படுத்த தொகுதிக் கிளை ஆரம்பிக்கப்பட்டது.

வங்கியின் கணக்கியல் நடை முறைகள் கம்பியூட்டர் மயமாக்கப் பட்டன.

1982 - ஜனவரி சிங்கப்பூரால் வங்கியின் பிரதிநிதி அலுவலகம் ஆரம்பிக்கப் பட்டது.

இலங்கையின் முதல் வாணிப வங்கி, இலங்கை வாணிப வங்கி என்ற பெயரில் வங்கி உப கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது சிறிய நடுத்தரக் கைத் தொழில் கடன் வழி ஆரம்பிக் கப்பட்டது.

1985 - கொழும்புக் கோட்டையிலுள்ள 32 மாடிகளைக் கொண்ட தலைமை யகக் கட்டடத்திற்கு, வங்கி இடம் மாறத் தொடங்கியது.

1986 - வங்கியின் லண்டன் கிளை லண்டன் வீதியிலுள்ள சீ- பாங் இல்லம் என்று அழைக்கப்படும் 6 மாடிக் கட்டிடத் திற்கு மாறியது.

1987 - வங்கியின் தலைமையகம் ஜனா திபதி மாவத்தையிலுள்ள புதிய 32 மாடிகள் கொண்ட கோபுர அமைப் புடைய தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.
27ந் திகதி மே - ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் வைபவ ரீதியாகத் தலைமைக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

1988 - நவெம்பர் - முதல் பெண் பொது முகாமையாளர் திருமதி ஆப். எல். நாணயக்கார பதவி ஏற்றுக் கொண்டார்.
வங்கி தன்னியக்க ரெலர் இயந்திரம் (ATM) காசோலை உத்தரவாத அட்டை (Cheque Guarantee Card) ஆகியவற்றின் அறிமுகத்துடன் இலத்திரனியல் வங்கியியல் யுகத் தில் பிரவேசித்தது.
மூன்றாவது சிறிய, நடுத்தர கைத் தொழில் கடன் வழி ஆரம்பிக்கப் பட்டது.

1989 - பெப்ரவரி - சீ-பாங் அட்டை அறி முகம் செய்யப்பட்டது.
வங்கியின் மாவட்ட நிர்வாக அமைப்பு மாகாண அலுவலக நிர்வாக அமைப்பாக மாற்றப் பட்டுள்ளது.

1990 - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வாடிக்கையாளர்களுக்கான முன் னோக்கி பரிமாற்ற ஒப்பந்தம்: மூன்று கீற்றுக்கள் பரிவர்த்தனை ஒப்பந் தத்தால் அறிமுகப் படுத்தப்பட்டது.

1990 - "சீ பேங்க்" காப்பீட்டு சேவைகளை நிறுவுகின்றது.

1990 - "சீ பேங்க்" விசா சர்வதேச கடன் அட்டை வழங்கப்பட்டது.

1990 - "சீ பேங்க்" சுற்றுலா மையம் திறக்கப்பட்டது. (cey bank travel center)

1991 - உள்ளூர் வெளிநாட்டு வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்று தலைமை அலுவலகத்தில் "சீ பாங் காப்புறுதி சேவை மையம்" (Cey Bank Insurance Service Centre என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

1991 - வங்கியின் காப்புரிமைகள் மற்றும் வர்த்தக முத்திரைகளின் கீழ் அதன் தயாரிப்புகள் மற்றும் சேவைக ளுக்காக செய்யப்பட்டது.

1992 - சர்வதேச தரத்திற்கு மூலதன அமைப்பை மறு சீரமைப்பு செய்வ தற்கான நடவடிக்கையும் கடன் நட்டங்களை ஈடு செய்வதற்கான நட வடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

1992 - பெண்களுக்கு பிரத்தியோகமான "கான்தா ரன் கிணும்" கணக்கை அறிமுகப்படுத்தியது.

1992 - மகாவலி பிரதேசத்தில் விவசாய சமூகத்தின் நலனுக்காக சுழல் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 - "வர்த்தகக் கடதாசி" (Commercial Paper) என்ற புதிய சேவை உருவாக்கப்பட்டது.
தன்னியக்க ரெலர் இயந்திர முறை மூலம்(ATM) வாடிக்கையாளருக்கு உள்நாட்டு நாணயத்தில் பணத்தைப் பெற வாய்ப்பளிக்கப்பட்டது.

1993 - "ரன் கெகுளு" சிறுவர் சேமிப்புக் கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

1993 - இலங்கை வங்கி உலகளாவிய வங்கிகளிற்கிடையிலான நிதி தொலை தொடர்பு (Swift)சங்கத்தில் இணைந்தது.

1994 - "ரண் சுரக்கும் நய சேவா" என்ற பெயரில் நகைகளை அடகு பிடித்து பணம் வழங்க வங்கி ஆரம்பித்தது.
வெளிநாட்டு நாணயச்சந்தையில் 1993 டிசெம்பரில் நஷ்ட வைப்பு எல்லை வணிகம் (Margin Trending) அறிமுகப்படுத்தப்பட்டது. வங்கியில் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபா 100 பில்லியன் ஆக அதிகரிக்கப்பட்டு 100 பில்லியன் ரூபாவைக் கொண்ட அமைப்பாக (100 Billion Rupee Organization) மாறியுள்ளது.

1995 - இந்தியாவில் சென்னை நகரிலும், பாக்கிஸ்தானில் கராச்சி நகரிலும் வங்கி கிளைகளைத் திறக்கிறது.

## 1996-2000

1996 - சீ பேங்க் கோல்ட் சொப்பை திறக்கிறது. இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடம் பிரபல்யம் அடைந்தது.

1996 - நிறுவன மேம்பாட்டு ஆலோசனை மையம் நிறுவப்பட்டது.

1996 - நேபாளத்தில் ஒரு கிளை திறக்கப் பட்டது.

1997 - ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் மிதக்கும் வீத வைப்புச் சான்றிதழ்களை அறிமுகப் படுத்தியது.

1998 - உலகின் சிறந்த 1000 வங்கிகளிலும் ஒன்றாக "த பேங்கர்" (The Banker Magazine) சஞ்சிகையால் இலங்கை வங்கி தர நிலைப்படுத்தப்படுகிறது.

1999 - இலங்கை வங்கி தனது 60 வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. சீ பேங்க் ஹவுஸ் கண்டி நகரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

## 2000-2005

2000 - மார்ச் 8, 2000 அன்று சர்வதேச மகளிர் தினத்தை குறிக்கும் வகையில் "அப்சரா" என்ற விசேட கடன் அட்டை மகளிருக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

2000 - தொழில் தகைமைகள் நிபுணர்களுக்கான சிறப்பு குத்தகை வசதியை அறிமுகப்படுத்துகின்றன.

2001 - இளைஞர்களை இலக்காக கொண்டு "18 Plus" எனும் விசேட கணக்கு முறைமை அறிமுகப் படுத்துகிறது.

2001 - இலங்கையில் முதன்முதலாக இடது கையை எழுத பாவிப்பவர்களுக்கான சிறப்பு காசோலை புத்தகத்தை அறிமுகப்படுத்தியது.

2002 - கடன் அட்டை துறையில் முன்னணி நாமமான மாஸ்டர் கார்ட்டின் கடன் அட்டை அறிமுகப்படுத்தியது, மாஸ்டர்கார்ட் இன்டர்நேஷனலுடன் வணிக உறவைத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 - விசா எலக்ட்ரான் அட்டை அறிமுகப் படுத்தப்பட்டது.

2002 - இலங்கை வங்கி மற்றும் சம்பத் வங்கி ATM களை ஒருங்கி ணைத்தன.

2002 - “கான்தா ரன்திரிய” கடன் வசதியை அறிமுகப்படுத்தியது.

2004 - நவம்பர் 6- தொகுதி கிளைக்கான ICBS ONLINE கணனி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

2004 - BOC இன் 65 வது ஆண்டு விழாவில் இலங்கை வங்கி இலச்சினை வெளியிடப்பட்டது.

2005 - டிசெம்பர் சுனாமியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உதவ சுசஹன கடன் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

## 2006-2010

2006 - ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வங்கி கிளைகளை ஆன்லைன் (online) கணினி அமைப்பில் விரைவாக செயற்படுத்தியதாக IBM மற்றும் FISERV விருதுகளை இலங்கை வங்கி பெற்றது.

2006 - தம்பதிவ புனித யாத்திரைகளுக்கு மேற்கொள்பவர்களிற்கு வசதியளிப் பதற்காக “ தம்பதிவ வந்தனா” என்ற சேமிப்பு கணக்கை அறிமுகப் படுத்தியது.

2006 - தெற்காசிய கணக்காளர்கள் அறக் கட்டளை மன்றத்தால் (SAFA) அர சாங்கத் துறையில் சிறந்த அறிக்கை யிடலுக்கான விருதை வென்றது.

2006 - அமெரிக்க தகவல் தொடர்பு நிபுணத் துவ சங்கத்தின் சிறந்த வருடாந்த அறிக்கைக்கான பிளாட்டினம் League of American Communication Profession Professionala (Vision Award) விருதை வென்றது.

2007 - சிறந்த வருடாந்த அறிக்கைக்கான தங்க விருதை வென்றது (ARC AWARD)

2007 - இலங்கை மக்களின் சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த ஊடக விளம்பர விருதை வென்றது.

2007 - வணிக மற்றும் நிதி நிலைத் தன்மையில் சிறந்து விளங்கிய தேசிய வர்த்தக சபை விருது.

2007 - இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய சிறந்த தொகுதி சமூக பொறுப்புணர்வு அறிக்கைக் கான தங்க விருது.

2007 - தொகுதி சமூகப் பொறுப்பின் கீழ் சிறப்புத் திட்டங்களுக்கான (கல்வி மற்றும் பயிற்சி) இலங்கை வர்த்தக சம்மேளன விருது.

2008 - கிளை விரிவாக்க அலுவலகங்கள் மற்றும் தன்னியக்க ரெலர் இயந் திரங்கள் உள்ளிட்ட அதிக எண்ணிக்கையிலான சேவை அடிப்ப டையிலான ஆன்லைன் கணினி அமைப்புக்களைக் கொண்ட இலங் கையின் மிகப்பெரிய வங்கியாக இலங்கை வங்கி திகழ்ந்தது.

2008 - 'Prestige Plus' நடைமுறைக்கணக்கு அறிமுகப்படுத்தியது.

2008 - 'Super Deposit' கணக்கு அறிமுகப் படுத்தியது.

2008- ரூ 3 பில்லியன் இலக்குடன் ஐந் தாண்டு முதலீட்டு பத்திரங்களை இலங்கை வங்கி வெளியிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கோரிக்கைகள் இலக்கு 4.2 பில்லியனைத் தாண்டின)

2008 - பாரம்பரியமற்ற துறையில் சிறந்த வருடாந்த அறிக்கைக்கான சர்வ தேச தங்க விருதை வென்றது.

2008 - தெற்காசிய கணக்காளர்கள் அறக் கட்டளை சங்கத்தால் (SAFA) அர சாங்க துறையில் சிறந்த அறிக்கை யிடலுக்கான விருதை வென்றது.

2009 - இலங்கை வங்கி தனது 70 வது ஆண்டு விழாவை பெருமையுடன் கொண்டாடியது.

2009 - 70 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கி ரூபா 5.00 பெறுமதியான நினைவு முத்திரை வெளியிடப்பட்டது.

2009 - இலங்கை வங்கி தலைமையகமான எச்செலோன் சதுக்கம் இலங்கை வங்கி சதுக்கம் என மறுபெயரிடப் பட்டது.

2009 - பிராண்ட் /பைனான்ஸ் வருடாந்திர தேர்வுகளினால் “ஆண்டின் சிறந்த பிராண்ட்” என அங்கீகரிக்கப்பட்டது.

2009 - ஸ்மாட் முதலீட்டாளர் வைப்பு முறை அங்கீகரிக்கப்பட்டது.

2009 - ஸ்மாட் முதலீட்டாளர் வைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஜுன் 22, 2009 அன்று, வாடிக்கையாளர்களின் வசதிக்காக தலைமையகக் கட்டிடத் தின் 30 வது மாடியில் 24 மணித்தி யாலங்களுக்கு செயற்படும் ஒரு தகவல் மற்றும் தொடர்பு மையம் திறக்கப்பட்டது.

2009 - அதன் 70வது ஆண்டில், இலங்கை வங்கி இஸ்லாமிய வங்கி பிரிவை அதன் வணிக விரிவாக்கத்தில் இணைத்தது.

2010 - பிட்ச் ரேடிங்ஸ் லங்கா அதன் நீண்டகால தேசிய மதிப்பீட்டில் ஒரு பகுதியாக இலங்கை வங்கியை AA+ (லங்கா) தர நிர்ணயம் பெற்ற வங்கி என சான்றிதழ்படுத்தியது.

2010 - ONE TEN TWELVE இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

2010 - 2010 இல் 50% சந்தைப்பங்கைக் கொண்ட இலங்கையில் சிறந்த வர்த்தக வங்கியாக இலங்கை வங்கி இரண்டாவது முறையாக அறிவிக்கப் பட்டது.

2010 - 24 மணி நேர சேவை பிரிவு முதல் முறையாக தொடங்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டிற்கான வங்கியின் ஒற்றை கடன் வாங்குபவரின் புள்ளிவிவரங்கள் 10 பில்லியனை தாண்டின.

2010 - வங்கியின் பல்வகைப்படுத்தல் செயல்பாட்டின் கீழ், ஆறு தசாப்தங் களாக நிரூபிக்கப்பட்ட வரலாற்று சாதனையுடன் , இலங்கை வங்கி அதன் லண்டன் கிளையை முழுமை யான சொந்த துணை நிறுவனமாக நிறுவியது.

2010 - 2010 இல் புதிய அனுபவத்தை தமது வாடிக்கையாள்களுக்கு வழங்க இணையம் மற்றும் மொபைல் வங்கியை அறிமுகப்படுத்தியது.

2011 - ஃபிட்ச் ரேடிங்ஸ் லங்கா லிமிட்டட்டி னால் 2011 ஆம் ஆண்டின் நீண்ட கால தேசிய தரவரிசைக்கு அமைய இலங்கை வங்கி AA+ (Ika) தர நிர்ணய சான்றிதழுக்குரியதாக மதிப்பிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 - வாடிக்கையாளரின் வசதிக்காக வங்கி தனிப்பட்ட வங்கிக்கான தனித்துவமான அலகு உருவாக்கப் பட்டுள்ளது. (Premier banking)

2012 - இலங்கை வங்கி சிறந்த வங்கியா ளராக Bankers Almanac இனால் மதிப்பிடப்பட்டது.

2012 - இலங்கை வங்கி ரூபா 1 டிரில்லியன் சொத்துத் தளத்துடன் வரலாற்று சாதனை படைத்தது.

2012 - நாடு முழுவதும் இயங்கும் சேவை மையங்களின் எண்ணிக்கை 1000 இற்கு மேற்பட்டதாகும் அத்துடன் 850 க்கும் மேற்பட்ட வெளிநாட்டு தொடர்பாடல் மையங்கள்.

2012 - இலங்கை வங்கி sovereign rating (fitch-BB-/Stable,moody s - B1/ Stable) AA+ (இலங்கை) தரத்தை மீண்டும் பெற்றது.

2013 - இலங்கை வர்த்தக சம்மேளனம் நடத்திய சிறந்த பெருநிறுவன குடிமக்கள் நிலைத்தன்மை விருது விழாவில் இலங்கை வங்கி பல விருதுகளைப் பெற்றது.

2013 - இலங்கையின் முதல்தர வணிக மாக தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக விருது வழங்கப்பட்டது.

2013 - இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய வருடாந்த அறிக்கை விருதுகளில் இணக்க விருதை (Compliance Award) இலங்கை வங்கி வென்றது.

2014 - இலங்கை வங்கி 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

2014 - சீசேல்ஸ் இல் நான்காவது கிளையைத் திறந்து, ஆப்பிரிக்க கண்டத்திற்கு அதன் சேவைகளை விரிவு படுத்தியது.

2014 - யுத்தம் காரணமாக செயலிழந்த யாழ்ப்பாண ரயில் நிலையத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கான உதவி

2014 - இலங்கை பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக சர்வதேச வர்த்தக சிறப்பு விருதைப் பெறுகிறது.

2014 - இலங்கையின் சிறந்த வங்கியாக இலங்கை வங்கியை த பாங்கர் சஞ்சிகை தரவரிசை மற்றும் உலகின் முதல் 1000 வங்கிகளில் 994 வது வங்கியாக மதிப்பிடப் பட்டது.

## 2015 -2019

2015 - இலங்கையின் தேசிய வர்த்தக சபை நடத்திய தேசிய வர்த்தக சிறப்பு விருதுகளில் ஒட்டுமொத்த சாம்பியன் ஷிப்பை வங்கி வென்றது.

2015 - சா∴பா விருதுகள் அரச வங்கிகளில் சிறந்த வங்கியாக மீண்டும்செய்தது.

2015 - மூலதன வருமானத்தைப் பொறுத் தவரை ஆசியா - பசுபிக் பிராந்தியத்தில் (சீனா மற்றும் ஜப்பான் தவிர) முதல் 5 வங்கிகளில் ஒன்றாக இலங்கை வங்கி பரிந்துரைக்கப்படுகிறது.

2015 - ∴பிட்ச் ரேடிங்ஸ்ஸில் AA =(lka) மற்றும் IRA (SL) AAA தரச்சான்றை பெற்றது.

2015 - இலங்கை சந்தைக்கு முதல் முறை யாக பண வைப்பு இயந்திரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்திய முன்னோடி வங்கியாக இருந்தது.

2015 - பேங்கர் சஞ்சிகையால் உலகின் முன்னணி 1000 வங்கிகளில் ஒன்றாக தெரிவானதுடன், இந்த ஆண்டு இலங்கையில் நம்பர் 1 வங்கியாகவும் பெயரிடப்பட்டது.

2015 - வரிக்கு முந்தைய இலாபமாக ஆண்டுக்கு ரூ 31.2 பில்லியனை எட்டியது.

2016 - இலங்கை வங்கி ஆசியாவின் சிறந்த பிராண்டாக அங்கீகரிக்கப்பட்டது.

2017 - வங்கி மற்றும் நிதி சேவைகளின் அதன் தொடர்ச்சியான தொழில் நுட்ப மாற்றத்துடன் தனது BOC App இனை அறிமுகப்படுத்தியது.

2017 - BOC ஸ்மாட் பாஸ் புத்தகத்தை அறிமுகப்படுத்தியது.

2017 - EMV Compliant Chip card நவீன பற்று மற்றும் கடன் அட்டையை அறிமுகப்படுத்தியது.

2017 - CMO Council Asia இனால் 2017 ஆண்டுகளுக்கான boc master brand விருது வழங்கப்பட்டது.

2018 - கண்டி சிட்டி சென்டரில் தனது முதல் 'BOC DIGI' வசதியை அறிமுகப்படுத்தியது.

2018 - டிஜிட்டல் வங்கி முறையில் NFC இணைக்கப்பட்ட அட்டைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப் பட்டது.

2018 - வங்கி மற்றும் நிதி நடவடிக்கை களுக்கு மேலதிகமாக இலங்கை வங்கி 1 மெகாவாட் சூரிய சக்தியை தேசிய மின் கட்டணத்தில் சேர்த்தது.

2018 - உலகதரம் வாய்ந்த பசுமைக் கட்டிடக் கருத்தாக்கத்திற்கு இணங்க கட்டிடத்தின் டிஜிட்டல் சூழலின் மையத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தி திருகோணமலை, கெகிராவ, கிளிநொச்சி ஆகிய கிளைகளின் பசுமை வங்கிக் கிளை களாக்கப்பட்டன.

2019 - தனது ஐந்தாவது வெளிநாட்டு கிளையை மாலைதீவில் குளுமா லேயில் திறந்தது.

*தீர்மானிக்க மனம், வழிவகுக்க அறிவு, செய்து முடிக்க கை தேவை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் முதன்மை வங்கியின் முதல் கிளையின் நீண்ட காலப் பயணமும் அதன் வரலாறும்

இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளை தனது 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வருடத்தில் இக் கட்டுரையை எழுத சந்தர்ப்பம் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.இக்கிளை தனது 50 வருட நிறைவான பொன் விழாவினைக் கொண்டாடியபோது நான் "பாரம்பரிய எல்லைகளைத் தாண்டி நவீன தொழில் நுட்ப வங்கித் தொழில்" எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றை வழங்கினேன். நான் இலங்கை வங்கியில் 40 வருடங்கள் வரை சேவையாற்றி அதன் பின்னர் 10 வருடங்கள் இலங்கை மத்திய வங்கியின் ஓர் அங்கமான இலங்கை வங்கியாளர் நிலையத்தில் கற்கை நெறிப் பணிப்பாளராகச் சேவை செய்து தற்போது ஓய்வு நிலையில் இருப்பினும், யாழ்ப்பாணக் கிளையில் ஒன்றுக்கு மேற்பட்ட காலங்களில் வெவ்வேறு பதவி நிலைகளில் சேவை புரிந்த காலங்கள் மறக்க முடியாதவையாகும். அவைகள் பசுமையான நினைவுகளாகும். எனவே தான் 75 வருடங்கள் சிறந்த சேவையினைச் செய்து, நிமிர்ந்தும், மிளிர்ந்தும் நிற்கும் யாழ் கிளைக்கு எனது பராட்டுக்களையும் மற்றும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் எனது மனதில் எதனை எழுதலாம் என எண்ணும் போது எல்லா வங்கி ஊழியர்களுக்கும் தெரிந்திருந்தாலும், "வங்கியின் தோற்றம் மற்றும் யாழ் கிளையின் வரலாற்றை" மேலோட்டமாக இன்று வங்கியில் உள்ள ஊழியர்கள் சிலருக்கும், மற்றும் சமீப காலங்களில் புதிதாகச் சேர்ந்து கொண்டவர்களின் நலன்கருதியும் இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். எழுத முன்பதாக யாழ்க் கிளையின் வளர்ச்சியில் ஊழியர்களின் பங்கு எத்தகைய மகத்தானது என்பதனை முதலில் கூறியாக வேண்டும்.

இந்தக் கட்டுரையை எழுதும் போது யாழ்ப்பாணக் கிளையின் 75 வருட நீண்ட கால சேவையையும் மற்றும் அதன் வளர்ச்சிச் செயற்பாடுகளையும் பின்னோக்கி பார்ப்பின் அது பயணித்த பாதையானது சீரானதாகவும், சிறப்புமிக்கதாகவும், சுக மானதாகவும் இருந்தும் கூட ஒரு கால கட்டத்தில் கஷ்டங்களையும், தடைகளையும், சவால்களையும் எதிர்நோக்க வேண்டி இருந்ததோடு, கரடுமுரடானதாகவும் இருந்தது என்பதை நினைவில் கொள்ளும் போது அதனை நாவலாசிரியர் சார்ள்ஸ் டிக்கன்ஸ் எழுதிய நாவலான " எ ரேல் ஒப் ரூ சிற்றீஸ்" (A Tale of Two Cities) இன்இரண்டு வரிகளைக் கொண்டு அந்த காலத்தின் நிலையை ஒப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும் என எண்ணுகிறேன். அதனை வைத்து யாழ் கிளையின் சிறந்ததும் மற்றும் கடினமானதுமான காலத்தையும் ஒப்பிடலாம். மேற்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன வரிகளாவன "இட் வாஸ் த பெஸ்ட் ஒப் டைம்ஸ் அண்ட் இட் வொர்ஸ் த வர்ஸ்ட் ஒப் டைம்ஸ் " ( It was the best of times and it was the worst of times) இலங்கை வங்கி யாழ் கிளை ஆரம்ப நாள்தொட்டு1980 இன் முற்பகுதி வரை எத்தகைய தடங்கலுமின்றி சிறந்த முறையில் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வந்தது. அதன் பின்னர் உள் நாட்டுப் போர் சூழல் மற்றும் கொந்தளிப்பான நிலைமையில் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளைச் செயற் படுத்துவதற்கு சிரமங்கள் ஏற்பட்டன. ஊழியர்கள் வேலைக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. வந்து போவதில் ஆபத்துக்கள் காணப்பட்டன. வங்கியின் உள்ளேயும் மற்றும் வெளியிலும் குண்டுவீச்சுக்கள் தினமும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. சில வேளைகளில் குண்டுகள் வங்கிக் கட்டிடங்களின் மேலேயும் உள்ளேயும் விழுந்தன. ஊழியர்கள் தரையில் வீழ்ந்து தப்பித்துக் கொண்டனர். இப்படியான ஓர் சூழ்நிலையில் தான் ஹட்டன் நஷனல் வங்கி யாழ் கிளையின் பதில் முகாமையாளராக இருந்தவர் தனது வங்கி முன்பாக இருந்த கடையொன்றில் பத்திரிகை வாங்கச் சென்ற பொழுது குண்டுபட்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நடப்பதற்கு முதல் இரவு நான் (அப்போது யாழ் 2வது கிளை முகாமை யாளராக இருந்தேன்), திரு. ராகவன் (கோம்ர்சல் யாழ் கிளை முகாமையாளர்) மற்றும் சமீபத்தில் காலஞ் சென்ற திரு. ஜே. ராஜேந்திரன் எல்லோரும் இரவுப் போசன மொன்றில் யாழிலுள்ள வங்கிகளின் செயற் பாடுகள் பற்றி உரையாடினோம். அடுத்த நாள் இந்தச் துயரச் சம்பவம் நடைபெற்றது. இந்தக் கொந்தளிப்பான நிலையில் கூட ஊழியர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து வேலைக்கு வந்து கடமையைச் செய்தார்கள். அவர்களின் அர்ப்பணிப்பும், ஆதரவும், ஈடுபாடும், நேர்மையான சேவை உணர்வும், கிளையை வழிநடாத்திச்சென்ற ஆற்றலும், திறமையும் கொண்ட தலைமைத் துவமும், முகாமைத்துவமும் என்றுமே போற்றுதற்கு உரியவை. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள கிளைகளுக்கு கடன் வசதிகள் கொடுப்பதில் தடைகளும் வரம்பு வரையறைகளும் இருந்தன. இதன் காரண மாக தொழிலதிபர்கள், வாணிபர்கள், வர்த்த கர்கள் மற்றும் தொழில்புரிபவர்கள் வங்கி நிதி வசதியின்றி மிகவும் பாதிப்படைந் தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இங்கே குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில் யாழ் கிளை ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இலங்கை வங்கியின் மொத்த வைப்புச் சந்தையில் எப்பொழுதும் யாழ் கிளையினதும் மற்றைய யாழ்ப்பாணத்துக் கிளைகளினதும் மொத்தப் பங்கானது மிகவும் கூடியதாக இருந்தது அந்தநிலை இப்போதும் தொடர்கிறதென நம்புகிறேன். இதை நோக்கும்போது கடன் வசதிகள் அளிக்காமல் தடைகள் விதித்தது சுகயீனம் கண்ட வாடிக்கையாளர்களுக்கு தேவையான தருணத்தில் சிகிச்சை போன்றதென நினைப் பதுடன் இந்தச் செயலும் தலைமையகத்தின் கொள்கையால் கிளைக்கு ஏற்பட்ட கஷ்ட காலமெனக் கொள்ளலாம்.

**இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையின் திறப்பு**

1945ம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 02ம் திகதி யாழ்ப்பாணக்கிளை ஸ்தாபிக் கப்பட்டது. அந்தக் கிளை ஆஸ்பத்திரி வீதியில் இருந்த கட்டிடத்தில் (முன்னைய பரணி ஹோட்டல்) இயங்கியது. முதல் இந்தக் கிளையின் முகாமையாளராக காலஞ் சென்ற திரு சி. லோகநாதன் நியமிக்க பட்டார். 1946ல் வங்கியின் தலைமையகத்தில் மாற்றங்கள் செய்ததன் காரணமாக திரு. C லோகநாதன் அவர்கள் யாழ்ப்பாணத் திலிருந்து கொழும்புக்கு அழைக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர் சபையின் உப- செயலாளராக நியமிக்கப்பட்டார். திரு லோகநாதனைத் தொடர்ந்து சிரேஷ்ட முகமையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். 1957 - 1958 காலப் பகுதியில் எனது நினைவின் படி நான் லண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கான கட்டணங்களைச் செலுத்துவதற்காக வங்கிக்குச் சென்றபோது பழைய பரணி ஹோட்டல் கட்டிடத்திலேயே யாழ் கிளை இயங்கி வந்தது. அக்காலத்தில் திரு. எம். ஜே.எம். ஜெயநாதன், திரு. சி. கே. கே குணநாயகம், திரு. விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் போன்றவர்கள் பணி புரிந்ததாக நினைவு உள்ளது. அக்காலத்தில் மேற்கூறிய உத்தியோகத்தர்களுடன் நான் வங்கியில் சேர்ந்த பின்னர் எனது சேவைக் காலத்தில் பணியாற்றக்கூடிய சந்தர்பங்கள் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**தேசியமயமாக்கப்பட்ட இலங்கை வங்கியும் புதிதாக தோற்றிய மக்கள் வங்கியும்**

1961 ஜூலை 27ல் இருந்து இலங்கை வங்கி தேசியமயமாக்கப்பட்டது. அன்றிலிருந்து வங்கி அரச வங்கியாக செயற்படத் தொடங்கியது.

இதே ஆண்டில் கூட்டுறவுத் துறை மூலம் கிராமிய வங்கியியலை மேம்படுத்தி, பலகாலம் தேவையெனக் கருதிய விவசாயம் மற்றும் கமத்தொழில் ஆகியவற்றுக்கு கடன் வசதிகள் அளிக்கும் பொருட்டு, மக்கள் வங்கி ஸ்தாபிக்கபட்டது. எனவே இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் அரச வங்கிகளாகச் செயற்படத் தொடங்கின. இதன் காரணமாக இலங்கை வங்கி யாழ் கிளையானது கொமேர்ஷல் வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுடன் போட்டித்தன்மையுடன் தனது சேவையை ஆற்ற வேண்டிய நிலை உருவாகியது.

தேசியமயமாக்கலைத் தொடர்ந்து, இதுவரை காலமும் பிரதான வர்த்தக வங்கியான இலங்கை வங்கி, அரசின் கொள்கைக்கேற்ப ஐரோப்பியாவிற்கே உரித்தான கலப்பு வங்கியியல் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இதன் காரணமாக அரச வங்கி என்ற முறையில் யாழ் கிளையும் வர்த்தகம், வாணிபம் என்பவற்றுக்கு மட்டும் இல்லாமல், விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளுக்கும் குறுகிய , மத்திய, மற்றும் நீண்ட காலக் கடன்களையும் வழங்கத் தொடங்கியது. ஆனால் இது யாழ் கிளையில் மட்டுமல்ல எல்லா கிளைகளிலும் எதிர்பார்த்த வெற்றி அளிக்கவில்லை. இதற்கான காரணம் நாட்டில் அப்போதிருந்த சட்டத் தடங்கலாகும்.

1970ல் அரசாங்கம் கொள்கை ரீதியாக கச்சேரிச் செயலகங்களில் கச்சேரிச் சிறாப்பர்களின் கடமைகளை வங்கி மேற்கொள்ள வேண்டுமென இருந்ததால் இலங்கை வங்கி தனது கிளைகளின் ஒரு அங்கமாகக் கச்சேரிக் கிளைகளை அமைக்க வேண்டியதாயிற்று. இந்தத்தேவையின் நிமித்தம் யாழ் கச்சேரியில் யாழ் கிளையின் ஒரு பகுதியாக காரியாலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

1967 முதல் மக்கள் வங்கியினால் செயல்படுத்தப்பட்ட விவசாயக் கடன் திட்டம் ஒன்றை 1973ல் இலங்கை வங்கியையும் பங்குபற்றுமாறு கோரப்பட்டது. இதன் காரணமாக இலங்கை வங்கி நாடு பூராவும் எல்லா மாவட்டங்களிலுமுள்ள கிராமங்களிலும் கமத்தொழில் கடன்கள் வழங்குவதற்காக விவசாய சேவை நிலையங்கள் (ASC bank branches) திறக்கப்பட்டன. யாழ் மாவட்டம் உட்பட வடபிரந்தியத்தில் பல கிராமிய விவசாய வங்கிகள் திறக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை முகாமைத்துவம் செய்ய தரம் iv (supervisors) உத்தியோகத்தர்களை நியமித் தார்கள். இத்தேவையைப் பூர்த்தி செய்ய நீண்ட காலம் சேவை செய்த உதவிக் காசாளர்களும், எழுதுவிஞையர்களும் பதவி உயர்வுபெற்றார்கள். இதனால் யாழ் கிளை யில் அநேகர் பதவி உயர்வு பெற்றார்கள். மேலும் புதிய ஊழியர்களும் உள்வாங் கப்பட்டார்கள். இதனால் யாழில் பிராந்தி யத்தில் உள்ள கிளைகளின் ஊழியர்கள் தொகை கூடியது.

இந்த விஸ்தரிப்பின் காரணமாக பரந்த வங்கிக் கிளைகளைக் கண்காணிப் பதற்காக 1970 இன் நடுப்பகுதியில் பிராந்தியக் காரியாலயங்கள் திறக்கப் பட்டன, (இவை பின்னர் மாவட்டக் காரியங் களாக மாற்றப்பட்டன.)

**புதிய கட்டிடம்– புதிய தோற்றம்**

இந்த காலகட்டத்தில் வங்கிக்கு, ஒரு சிறந்த சேவையை வாடிக்கையாளர்களுக்கு ஆற்றவும், புதிய வாடிக்கையாளர்களைக் கவரவும் மேலும் சேவைகளை விஸ்தரிக் கவும் ஒரு புதிய கட்டிடம் தேவைப்பட்டது. எனவேதான் தற்போதைய கிளைக் கட்டிடம் ஆஸ்பத்திரி வீதியில் வேம்படிக் கல் லூரிக்குப் பின்புறமாக இருந்த காணியில் புதிதாக வங்கி கட்டப்பட்டது. இந்தக் கட்டிடத்தின் மேல் மாடியின் ஒரு பகுதி முகா மையாளரின் வசிப்பிடமாக ஒதுக்கப்பட்டது.

1970ல் அதிகாரப் பரவலாக்கம் என்ற புதிய கோட்பாட்டின் படி இலங்கை வங்கி நான்கு பிராந்திய காரியாலங்களை கொழும்பு, கண்டி, யாழ்பாணம், காலி ஆகிய இடங்களில் அவ்விடங்களிலுள்ள கிளைகளை மேற்பார்வை செய்யும் பொருட்டுத் திறக்கப்பட்டன. இதற்காக யாழ் கிளையின் பின்புறமுள்ள காணியில் புதியதொரு கட்டிடம் கட்டப்பட்டது.

1972ல் இலங்கை சேமிப்பு வங்கி மற்றும் அஞ்சல் கந்தோர் சேமிப்பு வங்கி இரண்டும் இணைக்கபட்டு அரச வங்கி சாரா சேவைகளை அளித்தது. 1967ல் ஓர் பதிய கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதனை மக்கள் வங்கி செயலாற்றும் படி கேட்கப் பட்டது. 1973ல் இதே திட்டத்தினை இலங்கை வங்கிக்கும் அளித்து அதில் பங்கு பற்றுமாறு கோரப்பட்டது.

தற்போது வங்கிக் கிளையானது வங்கியின் மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு மாற்றப்பட்டு நவீன தொழில் நுட்ப வசதிகளுடனும், இயந்தி ரவியல் வர்த்தக முறையில் சேவைகளை வழங்கி வருகிறது.

1977ல் அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாக வெளிநாட்டு வங்கிகள் கிளைகளைத் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வங்கிகள் சாராத நிதிசார் ஸ்தாபனங்கள் நடைமுறைக் கணக்குகள் தவிர்ந்த சகல வர்த்தக வங்கிச் சேவைகள் அனைத்தையும் வழங்க அனுமதி கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் பல நிதி ஸ்தாபனங்கள் தங்கள் கிளைகளைத் திறந்தன. இதனால் யாழ் கிளை மிகக் கடுமையான போட்டிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய கடும் போட்டியின் மத்தியிலும் சவால்களை எதிர்கொண்டு வாடிக்கையாளர் உறவினைத் தக்க வைத்துச் செயலாற்றி வருவது பாராட்டுக்குரியது.

யாழ் வங்கிக் கிளையிலும் வட பிராந்திய மற்றும் மாவட்டக் காரியாலங் களிலும் நான் பணியாற்றிய காலங்களை நினைவு கூருதல் பொருத்தமானதாக இருக்கும் என எண்ணுகிறேன். தொடர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாக யாழ் கிளையில் பலஆண்டுகள் சேவையாற்றாவிடினும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வெவ்வேறு பதவி நிலைகளில் பணியாற்றியுள்ளேன்.

நான் இலங்கை வங்கியில் 1961ம் ஆண்டு ஜனவரி முதல் கிழமையில் சேர்ந்தேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் எனின் அந்த வருடதில் தான் புதிய கட்டிடத்திலிருந்து கிளை இயங்கத் தொடங்கியது. இந்த வருடத்தில் தான் இலங்கை வங்கி அரச வங்கியானது. மேலும் நான் சேர்ந்த வருடம் வரையில் பெண்கள் வங்கிச் சேவையில் சேர்க்கப்படவில்லை. நான் சேருவதற்கு முன்னதாக ஒரு பெண் சேர்க்கப்பட்டிருந்தார். அவர்தான் எமது முன்னைய பொது முகாமையாளர் திருமதி ரோஹினி நாணயக்கார (முன்பு அவர் மிஸ். ரோஹினிவிஜேரத்ன) என இருந்தார். இதன் பின்னர் தேசிய மாக்கள் கொள்கைக்கும் மற்றும் தேவைக்கேற்பவும், அதிகாரிகள், எழுதுவினைஞர்கள், சுருக்கெழுத்தாளர்கள் தரங்களில் வெற்றிடங்களை நிரப்ப அநேக பெண்களைத் தெரிவு செய்தனர். நான் சேர்ந்த பின்னர் மட்டக்களப்பு, வெள்ள வத்தை கிளைகளுக்கு மாற்றலாகிச் சென்ற போதும் அங்கு பெண்கள் இருக்கவில்லை. பின்னர் நிலைமை சிறிது சிறிதாக மாறியது. மேலும் அக்காலத்தில் ஊழியர்களைத் தெரிவு செய்யும் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்த வர்களைச் சேர்க்கக் கூடாது என்பதாகும். ஆனால் இந்தக் கட்டுப்பாடெல்லாம் பெண்களை வேலைக்கு அமர்த்திய பின்னர் முறியடிக்கபட்டது. இதற்குக் காரணம் நாடு பூராவும் இருந்த கிளைகள் மற்றும் தலை மைக் காரியாலயங்களிலும் ஊழியர்களுக் கிடையில் பல காதல் கல்யாணங்கள் நடைபெற்றுள்ளன. இதற்கு யாழ் கிளை விலக்கல்ல.

நான் யாழ் கிளைக்கு வெள்ள வத்தைக் கிளையிலிருந்து மாற்றலாகி 1968 பிற்பகுதியில் வந்திருந்தேன். அப்போது திரு ஆர்.பி. நடராஜா முகாமையாளராக இருந்து லண்டன் கிளைக்கு மாற்றலாகிச் செல்வதற்கு தலைமையகத்துக்கு சென்றிருந்தார். திரு. வேர்ணன் சண்முகம் கிளையைப் பொறுப்பேற்றிருந்தார். அந் நேரம் கிளையில் 30க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இருந்தனர். திரு முருகையா (A) class உத்தியோகத்தராகவும் பிரதி முகாமையாளராகவும் கடமையில் இருந்தார். மேலும்02 (A)class உத்தியோகத் தர்களாக எ. சுப்பையா, மற்றும் விக்னேஸ்வரன் current account ledgersலும், பி.ரி.ஐ. செகராஜசிங்கம் சேமிப்பு மற்றும் அந்நியச் செலாவணிப் பகுதிக்குப் பொறுப்பாகவும், சபாபதிபிள்ளை (supervisor) மற்றுமொரு Current account ledger க்குப் பொறுப்பாகவும் இருந்தனர். அந்தக் கிளையில் நான் சென்ற வேளையில் பணிபுரிந்து கொண்டு இருந்த எழுது வினைஞர்கள் மற்றும் உதவிக் காசளர்கள் எல்லோருமே 15 - 20 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியவர் களாக இருந்தனர். ஆகவே சேவையில் குறைவான எனக்கு சிறிது பதட்டமாக இருந்தது. கூடிய ஆண்டுகள் சேவை செய்த பலர் இருந்தபோதும் என்னை பிரதம எழுதுவினைஞயராகப் பணியாற்றும் படி திரு சண்முகம் கேட்டுக்கொண்டார். எனது வேலைகளைச் சிறப்பாகப் புரிவதற்கு எனது வேலைக்கு உதவ அமர்த்தப்பட்ட கனகரத்தினம் என்ற சிரேஷ்ட (Peon) ஊழியரின் ஒத்துழைப்புக் கிடைத்தது. இச் சந்தர்ப்பத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றை மனதில் வைத்திருக்க வேண்டியது என்ன வெனில் எல்லாக் கிளைகளில் சேவை யாற்றும் ( Minor Staff) எல்லோரும் வங்கிச் செயற்பாடுகள் பற்றிப் போதிய அறிவும் புதியவர்களுக்கு ஆலோசனை வழங்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்களாகவும் உள்ளனர் என்பதே. யாழ் கிளையில் (minor staff) ஆகக் கனகரத்தினம், சந்திரசேகரம், பரமசாமி, அருளம்பலம் என்பவர்கள் கிளையின் ஆரம்பத்திலிருந்தே கடமையாற்றியவர்கள். அவர்களின் கடமை உணர்வுகளை மறக்க முடியாது.

**யாழ் கிளையில் மற்றுமொரு அனுபவம்.**

அந்நியச் செலவாணிப் பகுதியில் வேலையைச்செய்வதற்கு திரு.செகராஜசிங்கம் உத்தியோகத்தராகவும் அவருக்கு உதவி யாக பரராஜசிங்கம் என்ற சிரேஸ்ட சுருக்கெழுத்தாளரும், மிஸ் செல்வராணி வன்னியசிங்கம் எனும் சுருக்கெழுத்தாளரும் பணிபுரிந்தார்கள். இருவரும் சிறந்த ஆங்கில அறிவு கொண்டவர்கள். U.செகராஜசிங்கம் திருமணம் செய்ததால் கொழும்புக்கு மாற்றலாகிச் செல்ல வேண்டி இருந்தது அந்த நேரத்தில் எனக்கு பதவி உயர்வும் கிடைத்திருந்தது . எனக்குப் பதவி உயர்வு கிடைத்துள்ளதாகவும் அதனால் திரு சண்முகம் என்னை ஜெகராஜசிங்கத்துகுப் பதில் வேலை செய்யுமாறு பணித்தார். நான் அந்நிய செலாவணிப் பகுதியில் எனக்கு மருதானைக் கிளைக்கு1970ல் மாற்றம் கிடைக்கும் வரை பணிபுரிந்தேன்.

மற்றுமொரு விடயம் ஞாபகத்துக்கு வருகிறது. கந்தசாமி இவரை (லண்டன் கந்தசாமி) எனத்தான் வங்கியில் அழைப் பார்கள். இவர் யாழ் கிளைக்கு மாற்றலாகி வந்தார்.அவரை திரு சபாபதிப்பிள்ளை யுடன் Current Account ledger இல் வேலை செய்யுமாறு பணிக்கப்பட்டார். அந்தக் காலங்களில் காசோலைகளில் கணக்கு இலக்கங்கள் இருப்பதில்லை. காசோலை களை கணக்குகளில் பதிவு செய்வதற்கு கையொப்பங்களைக் கொண்டு கணக்கு களை ஒழுங்குபடுத்தி கணக்குகளில் பதிவு செய்வார்கள். கந்தசாமி காசோலைகளை ஒழுங்குபடுத்தும் போது தவறுதலாக ஒரு காசோலை கீழே விழுந்து விடவே அதனை சபாபதிபிள்ளை எடுத்து கந்தசாமியிடம் “இது என்ன?” என்று கேட்க கந்தசாமி “இது தெரியாதா? இதுதான்“Negotiable Instrument” “ நீர் எத்தனை வருட சேவிஸ்?” எனக் கூற இருவருக்கும் இடையில் பெரிய சண்டை மூண்டு சத்தம் போட நாங்கள் எல்லோரும் முகாமையாளர் உட்பட வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

பின்னர் இரண்டாவது முறையாக கொள்ளுபிட்டிக் கிளையிலிருந்து யாழ் கிளைக்கு மாற்றலாகி வந்தேன். இங்கு குறுகிய காலம் வேலை செய்ய வேண்டி யிருந்தது. காரணம், திரு அப்பாப்பிள்ளை நவரத்தினம் அவர்கள் யாழ் கிளையிலிருந்து பதவி உயர்வு பெற்று வட பிராந்திய முகாமையாளராக நியமிக்கபட்டார். நான் அவருடன் வெள்ளவத்தைக் கிளையில் பணியாற்றி இருந்தேன். இந்தக் குறுகிய காலப் பகுதியில் நான் யாழ் கிளையில் பல புதிய ஆண் மற்றும் பெண் முகங்களை கண்டேன். இன்று அவர்களில் சிலர் காதல் திருமணம் செய்து இலங்கையிலும் வெளி நாடுகளிலும் சிறப்புடன் வாழ்ந்து வருகி றார்கள் இன்றுவரை அவர்கள் என்னுடன் தொடர்பு வைத்துள்ளார்கள் என்பதில் மகிழ்ச்சி.

திரு நவரத்னமிடமிருந்து திரு ஜெயநாதன் கிளையைப் பொறுப்பேற்றார். அந்தக் காலத்தில் பிராந்திய முகாமை யாளர்களாக திருவாளர்கள் எ. நவரத்தினம், ஸ்டான்லி வீரசிங்க மற்றும் எம்.ஜே.ம். ஜெயநாதன் ஆகியோர் பணிபுரிந்தார்கள். இவர்கள் எல்லோருடனும் கடமை புரிய வாய்ப்புக் கிடைத்தது ஒரு சிறந்த காலம் எனக் கொள்ளலாம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஸ்டான்லி வீரசிங்க காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. பிராந்தியக் காரியாலயம் (Transfer Committee) ஒன்றில் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள ஒரு ASC Branch இல் பணிபுரிபவரை யாழ்ப்பாணத்தில் உள்ள கிளை ஒன்றிற்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கான கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திரு ஸ்டான்லி வீரசிங்கவுக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. மறு பக்கத்தில் பேசியவர் ஒரு மந்திரி. அவர் தன் பெயரைக்கூறி, கிளிநொச்சியிலுள்ள ASC branch இல் பணிபுரிபவரின் பெயரைச் சொல்லி அவரை யாழ்ப்பாணத்துக்கு மாற்ற வேண்டும் எனக் கேட்டுகொண்டார் . உடனே ஸ்டான்லி வீரசிங்க அந்த மந்திரியின் பெயரை உச்சரித்து "Minister, I am sorry, this is a matter our Committe has to take a decision and I cannot interfere in that matter" எனக் கூறிவிட்டு மாற்றம் செய்யப்படவிருந்த நபரின் பெயரை நீக்குமாறு பணித்தார். அவர் மாற்றலாகி தலைமையகம் சென்றதும் அவர் செய்த முதல் வேலையானது எனக்கு கடிதம் ஒன்றை எழுதி அதில் யாழ்ப்பாணக் கிளைகளில் பணிபரியும் சகல சமாசமய (casual employees) ஊழியர்களை நிரந்தர மாக்கும் நோக்கத்தில்அவர்களின் விபரங் களை அவர்களின் கிளை முகாமையாளர் கள் ஊடாக அனுப்பி வைக்குமாறு வேண்டி னார். வேறு எவரும் செய்யமுடியாத சேவையை அவர் செய்தார்.

திரு ஜெயநாதன் சகல துறைகளிலும் அறிவை தானும் மற்றும் ஊழியர்களும் பெற வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர். எனவே வெளியிலிருந்து நிபுணர்களை அழைத்து பயிற்சிப்பட்டடைகள் நடத்தி ஊழியர்களையும் அதில் பங்குபற்றுமாறு செய்தார். கொழும்பிலிருந்து பேச்சாளர் களை வரவழைத்து அவர்களுடன் ஒரு Resource Person ஆக அறிமுகம் செய்தவர் அவர்தான் என்பதனைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவரது காலத்துக்குப் பின் பிராந்தியக் காரியாலயம் மாவட்டக் காரியா லயமாக மாற்றம் பெற்றது. முதல் மாவட்ட முகாமையாளராக திரு சி.கே.கே. குணநாயகம் பொறுப்பேற்றார். இலங்கை வங்கியினதும் யாழ் கிளையினதும் நீண்ட காலப் பயணத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டு இன்று வங்கியானது வாடிக்கையாளர்கள் வங்கியை நோக்கி சென்ற காலம் மாறி தொழில் நுட்ப மற்றும் இயந்திரவியல் செயற்பாடுகளால் இத்துரித வளர்ச்சியால் வாடிக்கையாளர்கள் வங்கிக்குச் செல்லாமலே தங்கள் தேவை களைத் தாங்களே சுயமாகச் செய்யக் கூடியதாகவுள்ளது. வீட்டிலிருந்தவாறே வங்கித்தேவைகளை வாடிக் கையாளர்கள் 24 மணித்தியாலமும், பெற்றுக் கொள்ள முடியும். பயணம் தொடரும் போது தொடர்ச் சியாக புதிய பரிமாணங்களை எதிர்கொண்டு பல மைல் கற்களைத் தாண்ட வேண்டி ஏற்படும் என எதிர் பார்க்கலாம். 75 ஆண்டு கால நிறைவைக் கொண்டாடும் யாழ் கிளைக்கு மேலும் மேலோங்க மீண்டும் எனது நல் வாழ்த்துக்கள்.

**இரா. வில்லவராஜா**
ஓய்வு நிலை உதவிப் பொது
முகாமையாளர்,
இலங்கை வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றியில் களிப்பாய்

நாட்டின் சுதந்திரத்தை நாம் - அடைய முன், இந்த
நாட்டின் முதல் வங்கியெனத் தோன்றியுமே, யாழ் குடா
நாட்டினிலும் கிளை - அமைத்த இலங்கை வங்கித் தாயே! நீ
காட்டிய நற் பாதையிலே களிப்புற்றோம் வாழியவே!!

வங்கிச் சேவையிலே பவளவிழாக் கொண்டாடும்
இங்கித நல்வேளையிலே இலங்கை வங்கித் தாயே! உனை
பொங்கும் மகிழ்வுடனேபூரித்து வாழ்த்துகின்றோம்!
மங்களங்கள் பொங்கிடவே மாண்புடனே வாழியவே!

செய் தொழில்கள் எதுவெனினும் சிறப்பாகக் கடன் வழங்கி
உய்ய வழிகாட்டும் உத்தமி நீயே அம்மா!
கை கொடுத்தே உதவிக் களிப்புறவே வைக்கும் உனை
தெய்வமாய்க் கண்டோமே - தேசத்தின் வங்கி அம்மா!

எல்லோரும் சேமித்து ஏற்ற முற வேண்டுமென்று
பல்வேறு திட்டங்களில் பரிசு, காப்புறுதியோடு
கல்வி கற்போர்க்கும் புலமைப் பரிசில்கள் வட்டி என்று
நல்லவை யாவும் நல்கும் நாயகி நீயே அம்மா!

போரினால் இடம் பெயர்ந்து போன சில காலத்திலும்
பாரிய சேவை செய்து பலருக்கும் உதவி நின்றாய்!
சீரிய வழியில் நின்று செயற்பட்ட காரணத்தால்,
வேறென இருந்து எம்மை வீழ விடாதே காத்தாய்!

கணினி முறையில் சேவை கருத்தோடு ஆரம்பித்து
பணிகளை விரைவில் செய்தாய்! பலரும் பாராட்டும் வண்ணம்
வணிக நல்வங்கியாக, வாடிக்கையாளர்கட்கு,
இனிதான சேவை செய்தே இதயங்கள் கொள்ளை கொண்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னியக்க எந்திரங்கள் தனியுமே பொருத்தி வைத்து
முன்னொரு போதும் இல்லா முறையிலே கொடுக்கல், வாங்கல்
எந்நேரமும் நாட்டில் எங்கெங்கும் செய்வதற்கு,
உன்னத வழி வகுத்தாய் உயர்தர சேவை செய்தாய்!

யாழ் நகர் புகையிரத நிலையத்தைப் புனரமைக்க,
பாழ் அடைந்து இருந்த அதனை பக்குவ நிலைக்குயர்த்த
நாளெல்லாம் பாடுபட்டு நற்சேவை செய்த உன்னை
வாழ்விலே மறப்பாருண்டோ? வாழ்த்திடார் இங்கு உண்டோ?

இன மத, பேத இன்றி இங்கு வாழ் மக்கட்கெல்லாம்
மனம் நிறைசேவைசெய்யும் மாண்பினை மறப்பாருண்டோ?
தினம் உந்தன் புகழோ இங்கு திக்கெட்டும் பரவுதம்மா!
தனம் தரும் தாயே! நீ இத் தரணியில் நீடு வாழி!

ஆண்டொன்று போனால் யார்க்கும் வயதொன்று போகும்! - பின்னர்
மாண்டவர் போவார்! இஃது வாழ்க்கையின் நியதி அன்றோ?
ஆண்டுகள் பலபோனாலும், அம்மா நீ இளமையோடு
வேண்டும் நற் சேவை செய்து வெற்றியில் நிதம் களிப்பாய்!

**கலாபூஷணம் கீழ்கரவை கி. குலசேகரன்**
ஒய்வுநிலை வங்கியாளர்,
இலங்கை வங்கி,
(இல 119/4, ஆதர் சிறிசேன மாவத்தை,

## எண்ணித் துணிய சில வரிகள்

*நேரம் பார்க்காதே. உழைக்கும் நேரத்தைவிட மற்ற நேரமெல்லாம் ராகுகாலம் தான்.*
*முடியுமா என்று யோசிப்பதே முதல் பலவீனம்தான்.*
*நேரமிருக்கிறதா? திட்டமிடு. பல செயல்கள் தோற்க திட்டமிடாததே காரணம்.*

*நெருப்பைவிடச் சூடானது பொறாமைக்காரனின் மனம்.*
*நிலவைவிடக் குளிர்ச்சியானது குழந்தையின் சிரிப்பு*
*வாளைவிடக் கூர்மையானது ஏழையின் கண்ணீர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வங்கியியலும் நடைமுறைகளும்

1. இலங்கை மத்திய வங்கி 1949ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது நாணயச் சட்டம் 58 of 1949

2. மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்
   அ) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்தல்
   ஆ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு இலங்கை நாணயத்தின் வெளி நாட்டுப் பெறுமதியை தளம்பல் அடையாது பாதுகாத்தல்

3. நாணயச் சபையின் உறுப்பினர்கள் 5 பேர்
   அ. மத்திய வங்கியின் ஆளுநர்
   ஆ. நிதி அமைச்சின் செயலாளர்
   இ. நிதி அமைச்சின் சிபார்சின் பேரிலும் அரசியலமைப்புச் சபையின் ஒருமைப் பாட்டுடனும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் 3 அங்கத்தவர்கள்.

4. மத்திய வங்கியின் வட்டி வீதங்கள் (30.09.2020)
   வங்கி வீதம் (BANK RATE) 8.5%
   துணைநில் வைப்பு வீதம் (STANDING DEPOSIT FACILITY RATE-S.D.F.R) 4.5%
   துணைநில் கடன் வழங்கும் வீதம் (STANDING LENDING FACILITY RATE-S.L.F.R) 2%
   மத்திய வங்கிக்கு ஒதுக்கு வீதம் (CENTERAL BANK RESERVE)5.5%

5. பண நிரம்பலின் (MONEY SUPPLY) உள்ளடக்கப்படுபவை M- பொது மக்களிடமும் வங்கியிலும் உள்ள தாள்குற்றி நாணயங்கள் (CURRENCY AND COINS) M1- M+ நடைமுறைக் கணக்கு மீதி

6. LIBOR- LONDON INTER BANK OFFERD RATE
   உலக வர்த்தக வங்கிகளுக்கிடையிலான நிதிச் சந்தையில் ஒரு வர்த்தக வங்கியில் இருந்து இன்னொரு வர்த்தக வங்கிக்கு கடனாக அன்னிய செலவாணியில் பணம் செலுத்தும் போது விதிக்கப்படும் வட்டி வீதமாகும். இவ் வட்டி வீதம் நாளாந்தம் BRITISH BANKERS ASSOCIATION ஆல் வெளிவிடப்படும்.

7. SLIBOR-SRILANKA INTER BANK OFFRED RATE
   இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகளுக்கிடையிலான நாளாந்த நிதிச் சந்தையில் இலங்கை ரூபாவில் கடனாக பணம் வழங்கும் போது விதிக்கப்படும் வட்டி வீதமாகும். இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) நாளாந்தம் வெளிவிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வங்கிகளில் கைவிடப்பட்ட ஆதனம் (ABANDONED PROPERTY)

வங்கியியல் கட்டளை சட்டம் 30 of 1988 பிரிவுகள் 72,73,74,75,76

**சட்டப்பிரிவு 72.**

i. பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் எவ்வித செயற்பாடுகளும் இன்றி வங்கியில் வைத்திருக்கும் வைப்புக் கள் மற்றும் ஏனைய பணங்கள்.

ii வாடகைக்குக் காலம் முடிவடைந்து விட்டதாக வங்கியினால் அறிவிக்கப் பட்டு மூன்று வருடங்களுக்குள் வாடிக்கையாளரினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலை யில் வங்கியின் பாதுகாப்பு பெட்ட கங்களில் (SAFE DEPASIT LOCKER) வைத்திருக்கும் பொருட்கள்.

**சட்டப்பிரிவு 73**

ஒரு விஷேட கணக்கிற்கு மாற்றுவது

**சட்டப்பிரிவு 74**

சொத்துக்கள் பற்றிய அறிவித்தலை இடுதல்

**சட்டப்பிரிவு 75**

மத்திய வங்கியினால் மீளச் செலுத் துவது தொடர்பானது

**சட்டப்பிரிவு 76**

கைவிடப்பட்ட சொத்துக்களின் அறிக் கையை வெளியிடத் தவறுதல் மற்றும் வழங்கத் தவறுவது குற்றமாகும்.

9. காசோலையில் உள்ளடக்கப்படும் நபர்கள்

அ) வரைபவர் (DRAWER)

ஆ) பெறுனி( PAYEE)

இ) வரையப்பட்ட வங்கி (DRAWEE BANK)

ஈ) மேலொப்பமிடுபவர்(ENDORSER)

உ) மேலொப்பமிட்டதை பெறுபவர் (ENDORSEE)

ஊ) வைத்திருப்பவர் (HOLDER)

10. நாணய மாற்றுண்டியலில் (BILL OFF EXCHANGE) உள்ளடக்கப்படும் பகுதி யினர் (PARTIES)

அ) வரைபவர் (DRAWER)

ஆ) வரையப்பட்டவர் (ACCEPTOR)

இ) வசதியளிக்கும் தரப்பு (ENDORSER)

ஈ) உண்டியலின் பெறுநர் (PAYEE)

ஊ) வைத்திருப்பவர் (HOLDER)

11. வங்கி உத்தரவாதத்தில் (BANK GUARANTEE) சம்பந்தப்பட்ட பகுதியினர்

I. உத்தரவாதி - உத்தரவாதத்தை வழங்கும் வங்கி

II. பிரதானமானவர் - வாடிக்கையாளர்

III. நன்மை பெறுபவர் - நன்மை பெறும் மூன்றாம் நபர்

12. காசோலையில் மறுத்தல் குறியீடுகள்

அ. கட்டளைக்காசோலையில் CASH என எழுதப்பட்டிருப்பின் முறையற்ற காசோலை (CHEQUE IRREGULARLY DARWIN)

ஆ. காசோலை செல்லுபடியாகும் காலம் 3 மாதம் என எழுதப்பட்டு மூன்று மாதம் முடிவடைந்தால் செல்லு படியாகும் காலம் முடிவடைந்து விட்டது - VALIDITY EXPIRED

இ. காசோலை எழுதப்பட்ட திகதியிலி ருந்து 6 மாதம் முடிவடைந்தால் காலாவதியான காசோலை - (STALE CHEQUE)

ஈ. காசோலை பிற் திகதி இடப்பட்டு அத்திகதிக்கு முன் காசோலை சமர்ப்பிக்கப்பட்டால் பிற்திகதி இடப் பட்ட காசோலை : (POST DATED CHEQUE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: 30ஆம் திகதி மாசி மாதம் 2020ஆம் ஆண்டு என திகதியிடப்பட்ட காசோலையை 29ஆம் திகதி மாசி மாதம் 2020 இல் கரும பீடத்தில் சமர்ப்பித்தால் கொடுப்பனவை மேற்கொள்ள முடியும் இங்கு வாடிக்கையாளரின் எண்ணம் (INTENTION) மாத முடிவில் கொடுப்பனவு செய்ய வேண்டும் என்பதாகும்.

13. காசோலைச் சுற்றோட்ட முறைமை

2005ஆம் ஆண்டு 28ஆம் இலக்கக் கொடுப்பனவுகளும் தீர்த்தல்களும் T+ 1 (T- இன்று +1 அடுத்த வேலை நாள்)

வாடிக்கையாளரினால் வைப்பிலிடும் காசோலைகளில் சேகரிக்கும் வங்கிக்குரிய காசோலைகள் தவிர்ந்த ஏனைய வங்கிகளின் காசோலைகள் அனைத்தும் பிரதிமைப்படுத்தி தலைமைக் காரியாலயத்தில் உள்ள INWORD CLARING UNIT க்கு அனுப்பும். தலைமைக் காரியாலயம் இலங்கை வங்கியின் (BOC) 18 வது மாடியில் இயங்கும் லங்கா கிளியர் தனியார் நிறுவனத்திற்கு (L.C.P.L) அனுப்பும். L.C.P.L விம்பங்களை ஒவ்வொரு வங்கியினதும் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பும். தலைமைக் கார்யாலயம் தங்களது கிளைகளுக்கு அனுப்பும். கொடுப்பனவு மற்றும் திரும்பல் பற்றிய விபரங்களை கிளைகள் விம்பத்தின் மூலம் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பும். தலைமைக் காரியாலயங்கள் CD மூலம் L.C.P.L க்கு பதிலை அனுப்பி வைக்கும்.

14. சேமிப்புக் கணக்கில் 3 ஆம் நபர் பணம் மீளப் பெறல்

i. ரூபா 2000/= வரை, கிளை முகாமையாளர் அங்கீகரிக்கலாம்.

ii. ரூபா 10,000/= வரை, வாடிக்கையாளர் நோய்வாய்ப்பட்டு வங்கிக்கு சமுகமளிக்காத நிலை ஏற்படின் வைத்தியரின் உறுதிப்பாட்டுடன் கிளை முகாமையாளர் அங்கீகரிக்கலாம்.

iii. ரூபா 10,000/=க்குமேல் கிளை முகாமையாளரின் சிபாரிசுடன் உதவிப் பொது முகாமையாளர் அங்கீகரிக்கலாம்.

15. 7 Days CALL DEPOSIT இல் இடப்படவேண்டிய சொற்தொடர்

'SUBJECT TO WITH OUT A PRIOR NOTICE" (2nd ADDENDUM OFFICE INSTRUCTIONS CIRCULAR NO: 47/96) இதன் மூலம் வட்டியில் மாற்றம் செய்யும் உரிமையை வங்கி தன்வசம் கொண்டிருக்கும்.

16. கரும பீடத்தில் காசாளருக்கு பணம் குறைந்தால் உறுதிப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடைமுறைகள்.

1. எல்லாப் பணத்தையும் பௌதீக ரீதியாக எண்ண வேண்டும். (PHYSICAL COUNTING)
2. ஏனைய காசாளருக்கு பணம் மேலதிகமாக இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
3. INTER-CASHIER கொடுக்கல் வாங்கல்களை சரிபார்க்க வேண்டும்.
4. காசாளரினால் மேற்கொள்ளப்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களையும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். (VALIDATION OF ALL TRANSACTIONS)

17. நிறைவேற்றுனர்: (EXECUTORS)

இறந்தவரின் இறுதி விருப்பாவணத்தின் மூலம் நியமிக்கப்படுபவர் (நிறைவேற்றுனர்). இவர்களின் நிர்வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் நீதிமன்றம் அவர்களை நியமிக்கும் போதே ஆரம்பமாகிறது. மரணச்சாதன நிறுவல் (PROBATE) மூலம் இவர்களது நியமனம் உறுதிப்படுத்தப்படும்.

18. நிர்வாகிகள் : (ADMINISTRATORS)
இறப்பவர்கள் மரணச்சாதனம் இன்றி இறக்கும் போது நீதி மன்றத்தால் நியமிக்கப்படுபவர் நிர்வாகிகள் ஆவார். இவர்களின் நிர்வாக அதிகாரம் நீதிமன்றம் அவர்களை நியமிக்கும் போதே ஆரம்பமாகிறது. இறந்த ஒருவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காகவே இவர்கள் நியமிக்கப்படுவர். இவர்களுக்கு அதிகாரபூர்வமான நிர்வாகக் கடிதம் (LETTERS OF ADMINISTRATION) வழங்கப்படும்.

19. நியமனம். (NOMINATION)
16 வயதிற்கு மேற்பட்ட எவரும் நடைமுறைக் கணக்குத் தவிர்ந்த ஏனைய வைப்புக்களுக்கும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரிமுறிகள், கம்பனி ஒன்றின் பங்குகள், ஆயுட்காப்புறுதிப்பத்திரம், (INSURANCE POLICY) பாதுகாப்புப் பெட்டகம் (SAFETY DEPOSIT LOCKER) போன்றவற்றிற்கு நியமனம் செய்ய முடியும். 1993ஆம் ஆண்டு 14ஆம் இலக்க குடியியல் நடைமுறைக்கோவை (திருத்தப்பட்ட) சட்டப்பிரிவு 544 (1) CIVIL PROCEDURE CODE (AMENDMENT) ACT NO 14 OF 1993 SECTION 544 (1)

20. முத்திரைத் தீர்வை (STAMPDUTY)
I) காணிக் கொள்வனவு (LAND PURCHASED)
ஒரு இலட்சம் வரைக்கும் - 3000/=
அடுத்து வரும் ஒவ்வொரு இலட்சத்திற்கும் - 4000/=
ii) சீதனம்/நன்கொடை (DOWRY/DONATION)
ஒரு இலட்சம் வரைக்கும் (2%+500/=) - 2500/= அடுத்து வரும் ஒவ்வொரு இலச்சத் திற்கும் - 2%

நொத்தாரிசினால் தயாரிக்கப்படும் மூன்று உறுதிகள்
i) மூலப்பிரதி (ORIGINAL) - உரிமையாளர்- (OWNER)
ii) பிரதி I (DUPLICATE) - காணிப்பதிவகம் (LAND REGISTRY)
iii) பிரதி II (PRO TOCOL) - பிரசித்த நொத்தரிஸ் (NOTARY PUBLIC)

21. ஆவணங்களைப் பதிவு செய்தல் (REGISTRATION OF DOCUMENTS)
அ. அற்றோனித் தத்துவம் (POWER OF ATTORNEY) பதிவாளர் நாயகம்/ காணிப்பதிவகம் (REGISTER GENERAL/ LAND REGISTRY)
ஆ. மரணசாசனம் (LAST WILL) மாவட்ட நீதிமன்றம் (DISTRICT COURTS)
இ. ஆயுள் காப்புறுதிப் பத்திரம் (LIFE POLICY CERTIFICATE) காணிப் பதிவகத்தில் அசையும் சொத்துப் பிரிவு
ஈ. இருப்புக்கள் ( STOCKS) \ காணிப்பதிவகத்தில் அசையும் சொத்துப் பிரிவு (ஈட்டு முறி MORTGAGE BOND) சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள் உட்பட 21 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும். இருப்புக்கள் ஒன்றிற்கு மேற்பட்ட மாவட்டங்களில் இருக்குமாயின் பதிவாளர் நாயகத்தில் (REGISTER GENERAL)பதிவு செய்ய வேண்டும்.
உ. மோட்டார் வாகனம் (VEHICLE) காணிப்பதிவகத்தில் அசையும் சொத்துப்பிரிவு மற்றும் வாகனப்பதிவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்திலும் (REGISTER OF MOTOR VEHICLE- (R.M.V) பதிவு செய்ய வேண்டும்.

வாகனம் இரவு நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்டவெவ்வேறு மாவட்டங்களில் தரித்து நிற்குமாயின் பதிவாளர் நாயகத்தில் (REGISTER GENERAL) பதிவு செய்ய வேண்டும். வாகனப் பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்வதாயின்

1. தேசிய அடையாள அட்டை(NIC)
2. காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப் பட்ட ஈட்டு முறியின் உறுதிப்படுத் தப்பட்ட போட்டோ பிரதியுடன்
3. வாகனப் பதிவுச் சான்றிதழ்,
4. FORM NO. M.T.A.3 (ABSOLUTE OWNER SHIP OF BANK)
5. வங்கிக் கட்டளை (PAY ORDER) போன்றவற்றை அனுப்பவேண்டும்.

ஊ. பங்குப் பத்திரம் (SHARES CERTIFICATE) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலுள்ள மத்திய வைப் பகத்தில் பதியப்படும். (CDS)

எ. அசையாச் சொத்து (IMMOVABLE PROPERTY) குறிப்பிட்ட காணிப்பதி வகத்தில் அசையாச்சொத்துப் பிரிவில் பதிய வேண்டும். (முதற் பதிவுக்கே முன்னுரிமை - MORTGAGE ACT 23 of 1927 SECTION 7(2) உரிமைப் பதிவுச் சட்டம் 21 of 1998) இச்சட்டத்தின்படி காணிப்பதிவகத் தில் பதிவு செய்யும் போது குறிப்பிட்ட காணியினுடைய சரியான எல்லைகள் (CORRECT BOUNDARIES) காண்பிக்கக் கூடிய வரைபடம் (PLAN) சமர்ப்பிக்க வேண்டும்.

ஏ. தொகுதிக்கடன் (DEBENTURE)

a. காணிக் கந்தோர் (LAND REGISTRY)

b. கம்பனிப் பதிவாளர் திணைக்களம் (REGISTR OF COMPANEY)

ஐ. அடகுக் கடன் (PLEDGE) ஈட்டு முறியை 21 நாட்களுக்குள் குறிப் பிட்ட காணிப் பதிவகத்தில் அசை யும் சொத்துப்பிரிவில் பதிவு செய்ய வேண்டும். (EXCLUDING PUBLIC HOLIDAYS)

22. கடன் கோட்பாடுகள் (LENDING PRINCIPLES)

01. நேர்மைத்தன்மை - INTEGRITY
02. நோக்கம் - PURPOSE
03. பாதுகாப்பு - SAFETY
04. பிணை - SECURITY
05. திரவத்தன்மை - LIQUIDITY
06. காலம் - PERIOD
07. உறுதிநிலை - STABILITY
08. பன்முகப்படுத்தல் - DIVERSITY
09. இலாபத்தன்மை - PROFITABILITY
10. வருவாய் அதிகரிப்பு - INCOME GENERATING
11. மக்கள் ஆர்வம் - PUBLIC INTEREST
12. மூலதனத்தின் போதுமான தன்மை - CAPITAL ADEQUACY
13. நேரம் - TIME

01. நேர்மைத்தன்மை:

கடந்த காலநிலை, கடனை செலுத் தும் விதம், திருப்பிச் செலுத்தும் திறன்

02. நோக்கம் :

வருமானம் பெறக் கூடிய கடனை வழங்க வேண்டும். வினைத்திறனாக இருக்க வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

03. பாதுகாப்பு :

கடன் வழங்கப்பட்ட பணத்திற்கான பாதுகாப்பை இது குறிக்கிறது. உரிய காலத்தில் உரிய தவணையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிச்செலுத்த வேண்டும். இது கடனாளியின் பண்பு. (CHARACTER) நிதி நிலைமை (FINANCIAL STANDING) மற்றும் பிணையின் தன்மை என்ப வற்றால் நிர்ணயிக்கப்படும்.

04. பிணை :
பிணை இல்லாமல் கடன் வழங்கி னால் வங்கிக்கு இடர் (RISK) ஏற்படும். உரிய பிணைகள் பெறப்பட வேண்டும்.

05. திரவத் தன்மை:
பொது மக்களின் வைப்புக்களை கட னாக வழங்குவதாலும் அவ் வைப்புப் பணங்கள் எந்நேரமும் திரும்பிப் பெறப்படலாம் என்பதாலும் குறுங் காலக் கடன்களையே வங்கிகள் விரும்புகின்றன. மேலும் கடனுக் காகப் பிணைகளும் இலகுவில் பண மாக்கத்தக்க திரவத்தன்மை வாய்ந் ததாக இருப்பது விரும்பத்தக்கது.

06. காலம் :
குறுங்காலமாக இருக்க வேண்டும் நீண்டகால பெரிய தொகையான கடன்களை வழங்கும் போது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும் சில சமயங்களில் முடங்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

07. உறுதிநிலை :
சிறந்த பிணை ஆவணங்களை பெற வேண்டும் நல்ல இலாபம் கிடைக் கக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்ய வேண்டும்.

08. பன்முகப்படுத்தல் :
ஒரு துறையை மட்டும் சார்ந்திராது பல துறைகளுக்கும் நாட்டின் பல பாகங்களுக்கும் பரந்து கடனை வழங்க வேண்டும்.

09. இலாபத்தன்மை:
கடன் வழங்கும் போது வங்கியின் நிதிச்செலவை (COST Of FUND) கவனத்தில் கொண்டு போதிய இலாபத்தை ஈட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அதே வேளை வாடிக்கையாளரும் இலாபம் பெற வேண்டும்.

10. வருவாய் அதிகரிப்பு :
கடனை மீளப் பெறுவது இலகுவான தாக இருக்க வேண்டும் மீளப்பெறும் பணத்தை சுழற்சி முறையில் (RE - CYCLE) கடனாக வழங்க வேண்டும்.

11. மக்கள் ஆர்வம் :
நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் துறைகளுக்கு வழங்க வேண்டும்.

12. மூலதனம் :
மூலதனம் போதுமானதாக இருக்க வேண்டும்.

13. நேரம் :
தேவை/காலம்/ நேரம் போன்றவற் றைக் கருத்தில் கொண்டு உரிய நேரத்தில் கடனை வழங்கவேண்டும். (உ+ம்) NCRCS LOAN (இல்லாவிடின் கடன் பெறுநருக்கு அது பயனற் றதாக போய்விடும்).

**P. பிரான்சிஸ்**
ஒய்வுநிலை முகாமையாளர்,
இலங்கை வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புரிந்துணர்வும் புத்துணர்ச்சியும் வங்கியாளனை அலங்கரிக்கும்

எந்தவொரு வியாபார நடவடிக்கைகளிற்கும் ஆதார பூர்வமாக உள்ள நபர்கள் வாடிக்கையாளர்களே பொருட்களை வாங்குபவர்களாக இருக்கலாம். சேவையை நுகர்பவர்களாக இருக்கலாம். அவர்கள் உணர்ந்து கொள்கின்ற திருப்தி நிலையே பொருட்கள் சேவைகளின் தொடர்ச்சி நிலைக்கு ஆணிவேராக அமையும். உணர்தல் அல்லது திருப்திப்படுத்தல் என்பது, ஒவ்வாரு தனிநபர்களிற்கும் வேறு வேறாக அமைந்தாலும் அதன் விளைவு என்பது பொருட்கள்/ சேவைகளை தொடர்ச்சியாக நுகர்வதா? இல்லையா? என்பதை குறித்து நிற்கும்.

இந்து சமய புராணமான பெரிய புராணத்தில் உலகெல்லாம் உணர்ந்து ஓதுதல் என்பது அரிதானதும் முடியாததும் என்பதை குறித்து நிற்பது போல் சேவை திருப்தியும் வடிவை அல்லது உணர்வை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. இருந்தாலும் சேவை வழங்குனர்கள் அல்லது விற்பனையாளர்கள் அனுபவங்களாலும் உள்ளுணர்வு அறிவுகளாலும் அறிந்து தெரிந்து அவர்களை திருப்திப்படுத்த முயல்வார்கள்.

ஒரு வங்கியின் பிரதான சேவையானது வைப்புக்களை ஏற்றலும் கடன்களை முறிகளை வழங்குதலும் ஆகும். இந்த அடிப்படைக் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்கின்ற போது ஆவணங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சேவைகளும் கட்புலனாகாதவையே. கட்புலனாகாத கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்ற போது அதன் விளைவும் கட்புலனாகாததாகவே அமையும். வங்கியில் வாடிக்கையாளர் சேவையென்பது மிக நுட்பமானதும் தொடர்ச்சியானதும் நம்பிக்கைக்குரியதும் நாணயத்தை வளர்ப்பதும் நன்மதிப்பை கூட்டுவதும் ஆகிய இணைந்த கூட்டுக் கட்புலனாகா சேவையின் ஊடாக வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

வங்கியில் கடமையாற்றுகின்ற போது ஒவ்வொரு வங்கியாளனும் வங்கியின் முகவர் என்ற உள்ளுணர்வுடனும் தன்னால் வரும் சாதக பாதக விளைவுகள் அனைத்தும் வங்கியின் நன்மதிப்பையே பாதிக்கும் என்ற உணர்வுடனும் கடமை புரிதல் வேண்டும். ஒரு மருத்துவன் எப்பொழுதும் ஒரு நோயாளியையே கையாள்வான். ஒரு ஆசிரியன் எப்பொழுதும் ஒரு மாணவனையே கையாள்வான். ஒரு வழக்கறிஞன் எப்பொழுதும் நீதி வேண்டி நிற்பவரையே கையாளுவான். ஒரு பொறியியலாளர் எப்பொழுதும் தான் சார்ந்த பொருள்களையே கையாள்வான். ஆனால் வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்கள், மருத்துவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், பொறியிய லாளர்கள், கணக்காளர்கள், துறைசார் வல்லுனர், போன்றோரையும் மிகக் கீழ் மட்டத்தில் உள்ளோர். உயர் வர்த்தகர்கள், என பல முரண்பாடான வர்க்கத்தினரை கையாள வேண்டிய பொறுப்பு அவர்களிடம் வந்து நிற்கின்றது.

வங்கி வாழ்க்கையில் நபர்களின் உண்மையையும் அவர்களின் ஏற்ற இறக்கங் களையும் எண்ணிலடங்கா சிந்தனை மாறுதல்களையும் அவர்கள் எதிர்பார்க்கின்ற சேவைத் தேவைகளையும் மிக இலாவக மாகக் கையாண்டு வங்கிச் சேவையினை வழங்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு வங்கியாளனுக்கும் உண்டு.

காலையில் வங்கி அலுவல்களை ஆரம்பிக்கின்ற போது முதலாவது சேவை பெறுநரை எவ்வாறு ஒரு வங்கியாளன் கையாண்டானோ அதே மனப்பாங்குடன் அதே சிந்தனை உணர்வுடனும் அதே புத்து ணர்ச்சியுடன் அன்றைய வங்கி நேரத்தில் வரும் வாடிக்கையாளர் அனைவரையும் கையாள வேண்டிய பொறுப்பும் நேர்முக மனப்பாங்கும் வங்கியாளருக்கு இருத்தல் வேண்டும்.

ஏனெனில் வங்கியாளரிடம் முதல் சேவை பெற்ற நபருக்கும் இறுதியாக சேவை பெற்ற நபருக்கும் சேவை பெறுதலில் திருப்தி என்பது உயர்ந்தளவில் எதிர் பார்க்கப்படும். அது யாதெனில் வங்கியா ளனுக்கே அவர் முதல் நபர், இறுதி நபர் என அமையும். ஆனால் ஒவ்வொரு வாடிக்கையா ளருக்கும் சேவை பெறுனருக்கும் தான் சந்திக்கும் வங்கியாளரே முதல் நபராவார்.

வங்கியாளன் இவ்வகையான பண்புகளை வங்கிக்குள் சேவை வழங்கும் போது மட்டுமன்றி அனைத்து நிலைகளிலும் இம் மனநிலையில் இயங்குதல் வேண்டும். அதாவது கடிதத் தொடர்புகள் கணினித் தொடர்புகள், தொலைபேசி தொடர்புகள், பொது இடங்களில் வாடிக்கையாளரைச் சந்தித்தல், அறவீடு தொடர்பாக வாடிக்கை யாளர் இடங்களிற்கு செல்லல், பொது அமைப்புக்களில் இயங்குகின்ற போதும் தன் நற்பெயரையும் வங்கியின் நற்பெயரையும் காக்கும் எண்ணமும் பொறுப்பும் கடமையும் இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணக் கிளையின் வங்கி யாளர்களான நாம், திருவள்ளுவரின் திருக்குறளில் கூறப்படும் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் வரும் பத்து குறள்களும் என்ன என்ன பண்புகளை கூறி நிற்கின்றனவோ அவற்றுக்கு உட்பட்டு கடமையை புரிதல் வேண்டும். ஈழத்து கவிஞன் ஒருவரின் கவிதை வரியான “வந்த விருந்தோம்பி வருவிருந்தை எதிர்பார்த்து சந்திவரை பாய் விரித்த நம்மவர்கள்” என்பதற்கிணங்க நாம் கடமை புரிய முற்படுகின்றோம். எண்ணத்தை கூர்மைப் படுத்துகின்ற பொழுது அதன் திண்மை யினால் எண்ணம் நிறைவேறும் என்பதற் கிணங்க எமது வங்கிக் கிளையும் இலங்கை நாடும் யாழ் மக்களும் எதிர் பார்க்கின்ற உலகத்தரமான வங்கிச் சேவையையும், வங்கி அறிவையும், வங்கிச் சூழலையும் எப்பொழுதும் வழங்கி நிற்போம் எனக் கூறுவதில் பெருமையடைகின்றோம்.

கிளையானது கடன் வழங்கல், காசுக் கருமபீடம், தங்கநகை அடகுச் சேவை, பாதுகாப்புப் பெட்டகம், வெளிநாட்டு பணப் பெறுகைகள், பிரத்தியேக வங்கிப் பிரிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக வெளியக தீர்வைகள் வாடிக்கையாளர் சேவை என பல்வேறு பிரிவுகளை கொண்டு இயங்கினாலும் ஒவ்வொரு பிரிவினரும் உன்னத பண்புடனும் சேவை மனப்பாங்குடனும் ஒவ்வொரு வாடிக்கையாளரையும் அணுகி கடமை புரிகின்றதென்றால் மிகையாகாது.

நிதிசார் நிறுவனமாகிய வங்கி தனது பிரதான விற்பனைப் பொருளாக பணத்தினையே பயன்படுத்துகின்றது. அது மட்டுமில்லாது ஒரு நிறுவனத்தில் பௌதீக வளங்களையும் நிதி வளங்களையும் பாதுகாக்க வேண்டிய கடமை அந்நிறுவனங்களுக்கே உரியதாகும். இருந்த போதும், பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் ஒரு வாடிக்கையாளர் வங்கி வளாகத்தில் நுழையும் போது வாடிக்கையாளர் சந்திக்கும் வங்கி தொடர்பான முதலாவது நபர் பாதுகாப்பு உத்தியோகத்தராகவே இருப்பார். அப்பாதுகாப்பு உத்தியோகத்தர் வாகனங்களை ஒழுங்கு படுத்தும் போது வாகன உரிமையாளராகிய வாடிக்கையாளருடன் மேற்கொள்கின்ற உரையாடல்களை அடிப்படையாக வைத்தே அவர் வங்கிக் கட்டிடத்தில் நுழையும் மனப்பாங்கில் தாக்கத்தை ஏற்படுத்தி நிற்கும். அதாவது கனிவானதும் இனிதானதுமான சொல்லாடல்களுடன் அவர்களின் உடல் மொழி முகபாவனை என்பனவும் வாடிக்கையாளரை கவர்ந்திழுப்பதாகவே இருத்தல் வேண்டும்.

வாடிக்கையாளர் சேவையென்பது ஒரு கலை சார்ந்த அனுபவ நுட்பமாகும். வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்ற எண்ணநோக்கங்களை அறிந்தும் அவர்களுடைய சுவை, அவர்களுடைய விருப்பம் என்பவற்றை தெரிந்தும் போட்டியாளர்களின் சேவைத்தரம், சேவை முறைமை என்பவற்றை ஆழமான அறிவுடனும் தெரிந்து அறிந்து புத்திசாலித்தனமான பொது அறிவுடன் இருக்கும் நபர்களே வாடிக்கையாளர்களை கவர வல்லவர்கள். வங்கியினுடைய விதிமுறைகளையும் சரியான முறையில் பின்பற்றுவதோடு நாட்டினதும் மத்திய வங்கியினதும் நடைமுறைகளையும் ஒழுங்கு விதிகளையும் பின்பற்ற வல்லவர்களே திறன் மிகு சேவை வழங்குனராக இருக்க முடியும். அது மட்டுமன்றி சகல நிலைகளிலும் சகல வேலைகளிலும் சகல வேளைகளிலும் சேவை வழங்குனர் நேர்த்தியான உடையணிந்து இன்முக பாவனையுடன் உடல் மொழியால் வாய்மொழியால் வாடிக்கையாளரை ஈர்க்க வல்ல வல்லமையுடனும் அவர் இருத்தல் வேண்டும்.

உலகப் பொருளாதாரம் தற்பொழுது புதிய சொல்லாடலான சந்தோசப் பொருளாதாரத்தை (Happiness Economy) நோக்கி நகர முயற்சித்த வண்ணம் உள்ளது. சேவையென்பது நேரடித் தொடர்புகளாலும் உரையாடல்களாலும் தொடர்ச்சியான தன்மையாலும் நம்பிக்கையாலும் திருப்திப்படுத்தல்களாலும் மட்டுமே வளர்ச்சியும் மீட்சியும் பெறும் என்பதில் ஐயமில்லை.

**திருமதி. சதீஸ் மீனலோஜினி**
செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியும்
# எண்ணியல் உற்பத்தியும்

என்ன இல்லை எம் அன்னையிடம்
எல்லாவற்றிலும் நவீனமயம்
பணம் மீளப் பெறுவதற்கு
பாதுகாப்பான பற்று அட்டை
இன்னல் நிறைந்த கொரோனா காலத்திலும்
இன்முகத்துடன் வரவேற்றது இலங்கை வங்கியின் "Smart zone"
பணத்தை மீளப் பெற மட்டுமல்ல
பண்டங்களை கொள்முதல் செய்யவும் உதவிடும்
பற்று அட்டை பயன்படுத்திய கணப் பொழுதில்
பறந்து வரும் குறுந்தகவல் செல்வழியே.

சேமிப்பு புத்தகத்தை உடனுக்குடன் பார்வையிட
"செல்லை" கையிலெடு "ஸ்மாட்" கையேடாக
மும் மொழியில் தந்திடும் கணக்குகளின்
மூன்றுமாத கால பற்று வரவுகள்

பசுமை வங்கியியலை பாங்குடனே வெளிப்படுத்தும்
கட்டணங்களற்ற கணக்குகளாக Smart Gen
கட்டிளம் பருவம் முதல் சிரம் தாழ்த்தி வணங்கப்படும்
சிரேஷ்ட பிரஜை வரை
வங்கிப் புத்தகம் உன் செல்வழியே
வங்கிக் கூற்றோ உனது மின் அஞ்சல் வழியே.

விரைவான நவீனயுகத்தில்
விரல் நுனியில் வங்கியியலாம் 'B APP"
பணப் பரிமாற்றங்கள், பட்டியல் கொடுப்பனவு
கடனட்டை கொடுப்பனவு, நிலுவை விசாரணை

108136(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான கட்டளை கொடுப்பனவு என
நீண்டிடும் சேவை "B" App இல்
பணமற்ற அட்டையற்ற கொடுப்பனவு முறை
பண்டங்களை கொள்முதல் செய்யும் போது
இணைந்திடுங்கள் எம் Smart Pay மூலம்
உங்களின்உள்ளங்கைகளில் தவழும்
செல்லுடன் விரலின் தொடுகையால்
உணர்ந்திடுவீர் இச்சேவைதனை.

பணம் இல்லாத நேரத்திலும் - தூரப்
பயணங்களின் போதும் உங்கள்
கைகளில் உற்ற தோழனாய்
கைகொடுக்கும் எம் கடனட்டை
இன்னும் இன்னும் இன்னோரன்ன சேவைகளால்
இமய மலையாய் எண்ணியலிலும் இலங்கை வங்கித் தாயவள்.

**செல்வி. கோ. சுபாஜினி**
நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

**சிந்தனைத் துளிகள்!**

- *வெளிச்சத்தை நோக்கிச் செல்! ஆனால் விட்டில் பூச்சி போல் ஆகி விடாதே.*
- *முயற்சிகள் தவறாகலாம். ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# An Epic Journey of Jaffna Super Grade I Branch recollecting from the past 75 years

The clock is ticking towards to mark the 75" Anniversary of Jaffna Supra Grade Branch in 2020.

At the time, Ceylon was under the British colony; Bank of Ceylon expanded its business to Jaffna on 2nd February, 1945 as fifth branch in the Island. This Branch was located at the "Bharani Hotel Building" which was in just opposite to OPD Unit of Jaffna Teaching Hospital. Since then Jaffna Branch has made a very long and challenging journey to maintain its pride as a biggest Branch in Northern region as because of the commitments, loyalty and integrity of its past Leaders and dedicated Employees along with valuable support of Stakeholders.

Mr. C. Loganathan was the first Manager who had become later as the first Ceylonese General Manager of Bank of Ceylon. Many distinguished personalities adorned the Manager's chair succeeding and rendered invaluable service for the betterment of the branch as well as the customers. Thus Jaffna Branch has been producing Leaders to the Banking industry and increase the wealth of the Northern Province.

Due to the rapid growth in the banking activities, the previous building was not sufficient space to conduct its service to customers, Since Branch had to find suitable accommodation for its successful business. As a result, the present two storied building was constructed as Bank's own and was ceremonially opened by Mr. C. Loganathan, General Manager on 20" November 1961.

Consequently in 1978, after the Government relaxation of Exchange Control Regulations and with introduction of open economy policies, International units extended in Kandy, Galle, Matara and Jaffna Branches.

Furthermore, the Branch had risen to mark great heights and significant growth in its business operations and as an outcome Jaffna branch was upgraded as Super Grade Branch in 1982.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Due to the riots held in 1983, Jaffna Branch's business operations had to be curtaited from time to time and service hours rendered as well services also restricted. Even so, our Jaffna Branch confronted all the threads and challenges and made them as opportunities for their forward move.

In 1979, Bank robberies were took place in Jaffna District since all the Banking activities was disturbed. Then after in June 1990, the problem became very critical with the credit restriction and limitation on movement of cash. Afterwards Our Northern region was completely ticked out from rest of the country and also globally due to the breakdown in communication, postal services, transport, electricity, scarcity of food, drugs, cash, etc. and as a result, people were forced to live an environ ment which they have never been imagined. Due to local Civil war Situation, drastic changes in the Social Economic environment we were unable to provide wide range of services which would have been offered under normal situation.

In 1995 January, a cease fire was agreed between both parties who were involved in Civil War. In the meantime Golden Jubilee Year of Jaffna Branch was celebrated in February 1995, under the leadership of the Chief Manager Mrs. K. Thurairajah.

Due to the mass exodus happened in October, 1995 the people were wanted to leave age – old City of Jaffna. Along with them Banks also moved from permanent location and Jaffna branch was functioned in the premises of Point Pedro branch. Then in 1996, internally displaced people started to return to their native places in Jaffna peninsula, banking operations also resumed to their permanent places.

After the millennium, in 2002, Advance Technology systems influenced in all fields and the Banking activities had been transformed to computerized operations (UNISYS) from manual operations. In the intervening time, the first Automated Teller Machine installed at Jaffna branch and that was the first, foremost ATM in Northern Province. A sound banking system is instrumental to the sustainable development and stable economic growth.

Thereafter in 2004, remarkable changes had seen in the banking industry. UNISYS system migrated to Integrated Comprehensive Banking System (ICBS). Jaffna SGB, Jaffna Second branch and Thirunelvely branch started to function under the ICBS system.

AfterA9 road opened for Public use, all the Industries were well developed; there was a change in Socio- Economic Political structure. People changed their life style. The normal situation in Jaffna had


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

given opportu nities to the financial organizations to establish their branches in massive scale. As such, there was great challenge to Jaffna branch to maintain its prominence.

Our Management has decided to expand the services all over the town to make it possible for the customers to do banking activities with ease access. Because of that, first Extension office was opened in front of the Jaffna Bus Stand on 01" March 2009 as it is one of busiest place to cover many customers. After that, an Offsite ATM installed within the premises of Jaffna Teaching Hospital on 06 May 2009 with a view of providing facilities for customers who visits the town for their routine works.

Furthermore, a Safety locker service was resumed in 23rd September 2009. Then again, another Extension Office was opened with an ATM at Jaffna Main Street on 19th October 2009 and that is also a well-populated area. The 3rd Extension office of Jaffna SGB was established on 01st November 2012 at Nallur, which is one of the famous sacred places for Tamil Hindu cultural people. After the reconstruction and rehabilitation of Jaffna Railway Station, the Branch has opened another offsite ATM within the premises of Jaffna Railway Station on 10th October 2014 and it is experienced as an important service to passengers. According to necessity arose another ATM had been opened at District Secretariat, Jaffna premises for banking activities of Officials of the District Secretariat, and the people in surrounding area on 20th June 2016.

Digital Era makes another opportunity to have a Smart Zone in the premises of Jaffna branch was declared opened on 08th of November 2016, which is presently consists of 2 ATMs & One CDM to do all deposits and withdrawal through automated machines without any delay.

There is no doubt that our pride, historical Jaffna Branch always marks its Image in every Hearts Of the natives. Making profit is an easy task for a short while but build a public confidence for a longer period is not easy. Jaffna Branch makes significant Image to Bank of Ceylon in Jaffna as well as in Northern soil.

**J.J. Regiman**
Executive Officer,
Bank of Ceylon,
Northern Province Office.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியும் தொழில்நுட்ப மாற்றங்களும்

இலங்கையில் வங்கி நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு நிறுவப்பட்ட காலம் 1840ம் ஆண்டு முற்பகுதியாகும். அக்காலம் தொடக்கம் இலங்கையில் வங்கி நடைமுறைகள் யாவும் ஒரு ஒழுங்கான கட்டமைப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தன. சூழல் மற்றும் காலநிலை மாற்றங்களிற் கேற்ப சில வங்கிகள் இல்லாமல் போய்விட பல வங்கிகள் புதிதாகத் தோன்றின. இலங்கை வங்கி என்ற நாமத்துடன் 1840களின் முற்பகுதியில் தொடங்கப்பட்டு கோப்பி பயிர்ச்செய்கையின் கடுமையான பொருளா தார வீழ்ச்சியில் இவ் வங்கியும் பாதிக்கப் பட்டு முறிவடைந்து போனது. ஆனால் 1930களின் முற்பகுதியில் இருந்து இலங்கை வங்கி என்ற நாமத்துடன் மீண்டும் மீண்டும் வங்கி தொடங்குவதற்கான ஆயத்தங்கள், கருத்தாடல்கள் இடம்பெறத் தொடங்கின. அதன் அடிப்படையில் இலங்கையில் தொடங்கப்பட்ட முதலாவது வங்கியாக 1939ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி எம் வங்கி உதயமாகியது. முதலாவது கிளை கொழும்பு நகரக்கிளையாகவும், இரண்டாவது கிளை கண்டி நகரக் கிளையா கவும் மூன்றாவது கிளையாக காலி நகரக் கிளையும், நான்காவது கிளை பெற்றாக் கிளையாகவும், ஐந்தாவது கிளையாக எமது யாழ்ப்பாணக் கிளையும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆதிகாலம் தொடக்கம் தற்காலம் வரையும் காலத்தாலும், இடத்தாலும், சிந்தனையிலும் மனித நடத்தைகளும், எண்ணங்களும் மாற்றமடைந்து வருகின் றன. ஒவ்வொரு தொழிலிலும் அதுசார்ந்த நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு அத் தொழிலின் உயர்வு நோக்கி சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல் வங்கி தொடங்கிய ஆரம்ப காலத்தில் வங்கி நடவடிக்கைகள் யாவும் கையால் எழுதும் நடைமுறைகளைக் கொண்டனவாகவே இருந்தன. பின்பு சிறிது சிறிதாக அந்தக் காலப் பகுதியில் அறிமுகப்படுத்தும் வங்கி சார்ந்த கருவிகளும், சாதனங்களும் எம் வங்கியினாலும் உள்வாங்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வந்தன. குறிப்பாக "அஸ்கொட்டா" மற்றும் "(f) பசிற்" இயந்திரம் என்பன வங்கியாளர்களால் பரவலாகவும், நீண்ட காலமாகவும் பயன்படுத்தப்பட்ட சாதனங்களாக அமைந்தன.

இலங்கை வங்கியினராகிய நாம் உலகளவில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு சாதனங்களையும் கருவிகளையும் இலங்கையில் அறிமுகப்படுத்திய மற்றும் அறிமுகப்படுத்துகின்ற முன்னோடி முதன்மை வங்கியாளராகத் திகழ்கின்றோம். அந்த வகையில் வங்கி நடவடிக்கைகளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் தலைமைக் காரியாலயத்தில் பொதுப் பேரேடுகள் முதலில் கணனி மயப்படுத்தப்பட்டன. பின்பு கிளையிலுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் கணனி மயப்படுத்தி வெளித் தொடர்பற்ற மூடிய கிளை அமைப்பில் அமைந்த முறைமையே பல கிளைகளில் நடைமுறைப்படுத்தப் பட்டன. இன்னும் சில படிகள் முன்னேறி "யுனிசிஸ்" போன்ற புதிய முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டு சில கிளைகளை மட்டும் online வங்கி முறைக்குள் கொண்டு சென்று நடைமுறைப்படுத்தப்பட்டன. 2003ம் ஆண்டு இலங்கை வங்கியானது "ICBS" எனும் புதிய கணனி முறைமைக்குள் அனைத்துக் கிளைகளையும் இணைத்து ஒரு வங்கி ஒரு கிளை என்ற புதிய கருத் தோன்றலில் தமது வங்கி நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அந்த வகையில் யாழ்ப்பாணக் கிளை 25.04.2005ம் அன்று புதிய online முறைமைக்குள் உள்வாங்கப்பட்டது. இக்கட்டுரை வரையும் நேரத்தில் இலங்கையிலுள்ள 645 வங்கிக் கிளைகளும் Online இல் இணைக்கப்பட்டு எமது வங்கிச் சேவையைத் தொடர்ந்து நிற்கின்றோம்.

இங்கிலாந்தில் 1969ல் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் இலங்கையில் 1980களின் பிற்பகுதியில் இலங்கை வங்கியினால் இலங்கை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோல் யாழ்ப்பாணக் கிளையில் 2002ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் யாழ் மாவட்ட மக்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இத னைத் தொடர்ந்து பல்வேறு இடங்களிலும் பல்வேறு காலத்தில் புதிய மெருகூட்டல்களுடன் தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்கள் எமது வங்கியால் நடை முறைக்கு கொண்டுவரப்பட்டன. குறிப்பாக 2015ம் ஆண்டு இலங்கை வங்கியானது இலங்கை நாட்டு மக்களுக்கு முதன் முதலாக பணம் வைப்பிலிடும் இயந்திரத்தை பயன்பாட்டுக்கு அறிமுகப்படுத்தியது. யாழ்ப்பாணக் கிளையில் "smart zone" எனும் புதிய கருத்திட்டத்தில் பண வைப்பு இயந்திரத்தை 2016ம் ஆண்டு அறிமுகப்படுத்தியிருந்தது. தற்போது இலங்கை வங்கியில் பணம் மீள்சுழற்சியிடும் இயந்திரமும் (CRM) மக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ளது.

1980களில் இலங்கை வங்கியினால் கணனிப் பயன்பாடு அறிமுகப்படுத்தப்பட்டு பல்வேறு காலத் தேவைகளுக்கேற்ப புதிய மெருகூட்டல்களைச் செய்து சர்வதேச தரம் வாய்ந்த சிறப்புமிகு முறைமைகளை உள் வாங்கி மக்களிற்கு சேவை செய்வதோடு தன் இருப்பு நிலையையும் சரியான முறையில் தக்கவைத்து பெரு விருட்சமாக வளர்ந்து கொண்டே வருகிறது.

அதுமட்டுமன்றி 1948ல் கணித வியலாளரும், தகவல் கொள்கையின் தந்தையுமான Claudeshannon என்பவரே டிஜிட்டல் உலகின் வருகைக்கு ஆரம்ப கர்த்தாவாக அமைந்தார். வங்கியியல் நடைமுறைகளிலும் இவ் டிஜிட்டல் முறை மைகள் காலத்திற்கு காலம் நடைமுறைப் படுத்தப்பட்டு மிக அண்மைய காலத்தில் "Lanka QR" எனும் புதிய முறைமை இலங்கையில் இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை வங்கியும் அவ்வப்போது பல்வேறு டிஜிட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப் படுத்தியது. அவையாவன,

- பற்று அட்டை
- கடன் அட்டை
- B. - App
- Smart Pass book
- ATM
- CDM
- BOC Smart Pay
- Multi Currency Travel card
- Digi Banking
- IPGW

என்பனவும் அமையும்.

கடதாசிப் பயன்பாட்டினையும், சூழல் பாதுகாப்பினையும் மிகத் திறனான வகையில் பயன்படுத்த வங்கிகள் எப்போதும் முனைகின்றன. தற்போதைய நிலையில் Paper less, face less, Place less எனும் முக்கோணச் சிந்தனைகளை நடைமுறைப் படுத்தி வருகின்றன. அதேபோல் சூழல் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக மின் சாரப் பயன்பாட்டிற்காக சூரியக் கலத்திலான மின்சார உற்பத்திகளை வங்கிக் கிளை களில் உருவாக்கி பயன்படுத்தி வருகின்றது. இதன் மூலம் இலங்கை வங்கியானது பசுமை வங்கிச் செயற்திட்டத்தில் முன்னிலை வகிக்கின்றது.

இலங்கையிலுள்ள 22 மில்லியன் மக்களில் 11 மில்லியன் வாடிக்கையாளரைக் கொண்ட மிகப்பெரும் வங்கியாளராகிய நாம் சமூக வலைத் தளங்களையும் உருவாக்கி அதனூடாகவும் வங்கிப் பயன் பாட்டினைப் பெறவும், தொடர்பு கொள்ளவும், கருத்துக் களைப் பரிமாற்றவும், பின்னூட்டல்களை இலகுவான முறையில் பெற்றுக் கொள்ளவும் பயன்படுத்தி வருகின்றோம். இலங்கையின் சனத் தொகையில் இன்றைய நிலையில் 30.6% மக்கள் முகப்புத்தகப் பாவனையைக் கொண்டவர்களாக உள்ளமை குறிப்பிடத் தக்கது.

இலங்கை வங்கியின் தொடக்கம் முதல் இன்றைய காலம் வரை பல்வேறு மாற்றங்களையும், மெருகூட்டல்களையும் தொழில்நுட்பங்களூடாகச் செய்து வருகின் றது. கடதாசி வங்கியியல், கருவிப் பயன்பாட்டு வங்கியியல், கணினி வங்கி யியல், டிஜிட்டல் வங்கியியல் எனப் புதிய புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கி தனது இருப்பு நிலையைத் தக்கவைத்து முதன்மை வங்கியாக திகழ்ந்து நாட்டுக்கும், நாட்டு மக்களிற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி திருப்தி மிகு சேவையினை வழங்கி வருகிறது.

**திருமதி பிரதீபா முகுந்தன்**
உதவி முகாமையாளர்.
இலங்கை வங்கி.
யாழ் அதிமேற்தரக்கிளை.

*நேற்று என்பது அனுபவம்,*
*இன்று என்பது நிகழ்வு ,*
*நாளை என்பது நம்பிக்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மாவட்டத்தில் இலங்கை வங்கியின் வளர்ச்சிப்பரிணாமம்

ஆசியாவின் ஆச்சரியமென ஆட்சியாளர்களினால் அலங்கரித்துக் கூறப்படும் முழுமையான வளங்களைக் கொண்ட சிறிய நாடு எம் இலங்கைத் திருநாடாகும். நாற்புறமும் கடலையும் நடுவிலே நின்ற தொரு மலைத்தொடரையும் களனிகளையும், களப்புக்களையும், காடுகளையும், குளங்களையும் குடாக்களையும் மற்றும் சமவெளிகளையும் ஒருங்கே கொண்டமைந்த இயற்கைச் செழிப்பு மிக்க நாடாகும். பல்லின மக்கள், பல்வகைச் சமயத்தைப் பேணி உயர் பண்புகள் கொண்டு வாழும் மகத்தான நாடு எம் நாடாகும். அதிக வறட்சியும் அதிக குளிர்ச்சியும் கொண்டதுடன் அதற்கு ஏற்புடைய வியத்தகு இயற்கை வளங்களைக் கொண்ட திருநாடாகும்.

இச்சிறப்புப் பெற்ற இலங்கைத் திருநாட்டின் மகுடத்தில் அமைந்திருப்பது யாழ் குடாநாடு ஆகும். வழுக்கியாறு வலிகாமத்தின் மேற்கை அலங்கரிக்க வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் தீவகம் ஆகிய பிரிவுகளையும் கொண்ட சிறிய நிலப்பரப்பு ஆகும்.

யாழ் குடாநாட்டில் 1945ம் ஆண்டு மாசி மாதம் 02ம் திகதி இலங்கை வங்கி யாழ்ப்பாணத்தில் 1வது கிளையை நிறுவி தனது சேவையை ஆரம்பித்தது. இக்கிளையானது இலங்கையின் 5வது இலங்கை வங்கிக் கிளையாக இன்றும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தியாவுடனான கப்பல் போக்குவரத்து மூலம் யாழ்குடா நாட்டின் முக்கிய துறைமுகங்களின் ஊடாக ஏற்பட்ட சர்வதேச மற்றும் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவும், பிரதேச மக்களின் தேவைகளுக்காகவும், வியாபார அமைப்புக்களின் பிரதேச மக்களின் தேவைகளுக்காகவும், வியாபார அமைப்புக்களின் ஆளுமையை வளர்க்கவும் வங்கிச் சேவையின் தேவை மேலோங்கிக் காணப்பட்டமையால் யாழ்ப்பாணத்தில் வங்கி சேவை வளர்ந்து கொண்டே சென்றது.

அதற்கமைய 1959ம் ஆண்டு வடமராட்சி பிரிவில் பருத்தித்துறை நகரில் யாழ்குடாநாட்டின் 2வது வங்கி கிளை யாகவும், இலங்கையில் 28வது இலங்கை வங்கிக் கிளையாகவும் நிறுவப்பட்டது. இக்கிளையானது 2009ம் ஆண்டு பொன்விழாவை சிறப்பாக கொண்டாடி விழாமலரையும் வெளியிட்டது.

தொடர்ச்சியாக சுன்னாகம் என்னும் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான நிதி வசதியினை நிவர்த்தி செய்யும் முகமாக 1969ம் ஆண்டு ஆடி மாதம் 02ம் திகதி யாழ்க்குடாநாட்டின் 3வது கிளை தடம் பதித்தது. இக்கிளையானது இலங்கை யின் 53வது இலங்கை வங்கிக் கிளையாக இன்றும் தனது சேவையினை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை வங்கியின் வளர்ச்சிப் பாதையின் அடுத்தகட்டமாக தீவகப் பகுதியில் ஊர்காவற்துறை எனும் நகரில் தனது சேவையினை வழங்க கால் பதித்தது. இக்கிளையானது யாழ்க்குடா நாட்டில் 4வது கிளையாக• நிறுவப்பட்டது. அன்றைய இலங்கைத்திருநாட்டின் புகழ்பூத்த நிதி அமைச்சரான கலாநிதி N.M பெரேரா அவர்களினால் 1971 மார்ச் 16ம் திகதி அன்று திறந்து வைக்கப்பட்ட சிறப்பிற்குரிய கிளை யாகும். இக்கிளையானது இலங்கையின் 63வது இலங்கை வங்கிக் கிளையாகும். அத்துடன் 2008ம் ஆண்டு இலங்கையில் 303 கிளைகள் காணப்பட்டது. இத்தருணம் ICBS எனும் புதிய கணினி வலையமைப்பு முறைமை இக்கிளையிலும் அறிமுகம் செய்யப்பட்ட போது ஊர்காவற்துறைக் கிளை 300வது கிளையாக அமைந்தது. அந் நேரத்தில் நாட்டின் மும்மொழிப் பத்திரிகை களில் **"வலையமைப்பும் 300வது கிளையும்"** என்ற தலைப்பில் விளம்பரங்கள் பிரசுரிக் கப்பட்ட பெருமைக்குரிய கிளையாகும்.

1970ம் ஆண்டு ஸ்ரீமாவோ அம்மையார் அவர்களின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் விவசாய உற்பத்திகளை அதிகரித்து தன்னிறைவுப் பொருளாதாரம் எனும் மூடிய பொருளாதாரத்தை ஏற்படுத்த விவசாயி களும் வங்கி சேவையை பெறவேண்டும் என்ற புதிய கருத்துருவாக்கத்தை உள் வாங்கி நாட்டில் உள்ள சகல கமநல சேவை நிலையங்களிலும் இலங்கை வங்கி தனது சேவையை விஸ்தரித்து வந்தது. அதற் கமைய யாழ்குடாநாட்டின் சகல பகுதிக ளிலும் சேவையை விஸ்தரித்து வந்தது. அதற்கமைய யாழ்குடா நாட்டின் சகல கமநல சேவைகளிலும் தனது அளப்பரிய சேவையினை வழங்கியது.

யாழ்ப்பாணத்தின் நாகரீகம் என வர்ணிக்கப்படும் மானிப்பாய் நகரில் இலங்கையின் 281வது கிளையாகவும் யாழ்குடாநாட்டின் 5வது கிளையாகவும் (கமநல சேவை கிளைகளை தவிர்த்து) 1974ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி உதயமானது. பிரதானமாக வைப்புக்களாலும் சேவை களாலும் வளர்ச்சி பெற்று 2008ம் ஆண்டு மேற்தரக்கிளை எனும் தரப்படுத்தலை பெறும் வண்ணம் வளர்ச்சி அடைந்தது. இருப்பினும் நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று பொருளாதாரம் புத்துயிர் பெற முனைந்த போது 2010ம் ஆண்டு முற்பகுதியில் குடா நாட்டில் பல கிளைகள் தோற்றம் பெற்றன. இருப்பினும் சனத்தொகை மாறாத நிலை யிலும் வருமானங்கள் மற்றும் வருமான மூலங்கள் மாறாத நிலையிலும் கிளைகள் பரவலடைய பிரதான கிளைகளுக்கான வியாபாரங்கள் அனைத்துக் கிளைகளுக்கும் பகிரப்பட்டன. இதன் காரணமாக 2017ம் ஆண்டின் முற்பகுதியில் மானிப்பாய் மற்றும் சுன்னாகம் கிளைகள் மீண்டும் A தர கிளையாக தரம் குறைக்கப்பட்டது.

1970ம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்நகரில் இலங்கை வங்கியின் 2வது கிளையின் சேவை அவசியமானது. அதற்க மைய 1977ம் ஆண்டு கார்த்திகை 11ம் திகதி அன்று ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய சொந்த கட்டிடத்திலும் அப்போதைய வாடகைக் கட்டிடத்திலும் யாழ்ப்பாணத்தின் 6வது கிளையாகவும் இலங்கையின் 500வது கிளையாகவும் தோற்றம் பெற்றது. அப்போதைய இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நா.யோகேஸ்வரன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அதே நேரத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தின் மையமான சாவகச்சேரி நகரிலும் யாழ் குடாநாட்டின் 7வது கிளையாகவும் இலங்கையில் இலங்கை வங்கியின் 501வது கிளையாகவும் சாவகச்சேரிக்கிளை ஆரம்பிக்கப்பட்டது. இவ் இரண்டு கிளைகளும் ஒரே தினத்தில் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பெருமையைப் பெற்றன. தற்போது சாவகச்சேரிக் கிளையானது A தரக்கிளையாக சிறப்பான சேவையினை ஆற்றி வருகின்றது.

1980ம் ஆண்டு இலங்கை வங்கியின் நிர்வாகக்கட்டமைப்பில் மாகாணங்களின் அடிப்படையில் பகிர்ந்து ஒவ்வொரு மாகாணங்களுக்கும் உதவிப் பொது முகாமையாளரின் கீழான நிர்வாகத்தில் உருவாகியது. மேல் மாகாணத்தில் மேல் மாகாணம் - தெற்கு மேல் மாகாணம் - வடக்கு என 2 மாகாணங்களாக உருவாக்கி இலங்கையில் மொத்தம் 10 மாகாணங்கள் என இலங்கை வங்கி நிர்வாகக்கட்டமைப்பில் உள்ளது. 2002ம் ஆண்டு வரை நாட்டிலுள்ள அசாதரண சூழ் நிலை காரணமாக வடமாகாண அலுவலகம் கொழும்பு ஜோர்ஜ் வீதியில் இயங்கியது. அதன் பின்னர் தற்பொழுது உள்ள வடமாகாண அலுவலகத்தில் அனைத்து நிர்வாக இயக்கங்களும் மாற்றப்பட்டன. கடந்த 18 ஆண்டுகளாக யாழ் மாவட்ட அலுவலகமும் ஒரே குடையின் கீழ் இயங்குகின்றது.

1981ம் ஆண்டு யாழ் குடாநாட்டின் கப்பல் துறைமுகமும், சீமெந்து தொழிற்சாலையும் அமைந்த காங்கேசந்துறையில் புதிய கிளை உருவாக்கப்பட்டது. இது யாழ்குடா நாட்டின் 8வது கிளையாகவும் இலங்கையின் 605வது கிளையாகவும் அமைந்தது. இக்கிளையானது பல இடப்பெயர்வுகளை சந்தித்து தற்போது மல்லாகம் சந்தியில் அமைந்து "B" தரக் கிளையாக சிறப்புற செயற்பட்டு வருகின்றது. வளர்ச்சிப் பாதையின் அடுத்த நகர்வாக, வடமராட்சிப் பிரிவில் நெல்லியடிப் பிரதேசத்தில் 1982ம் ஆண்டு மாசி மாதம் குடாநாட்டின் 9வது கிளையாகவும் இலங்கையின் 638வது கிளை யாகவும் புதிய கிளை நிறுவப்பட்டது. நெல்லி யடிப் பிரதேசம் சனத்தொகை மற்றும் வர்த்தகம் என்பவற்றில் அதி வேகமாக வளர்ச்சி அடைந்த காரணத்தால் இக் கிளையின் சேவை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சொந்த கட்டிடத்தில் சிறப்புற சேவையாற்றி வருகின்றது.

அதன் பின்னர் 1991ம் ஆண்டு இடப்பெயர்வுகளால் மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் எஞ்சியிருந்த தீவகப் பகுதியில் இருந்த 5000 இற்கும் அதிகமான மக்களின் வங்கித் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக காரைநகர் என்னும் பிரதேசத்தில் குடாநாட்டின் 10வது கிளையாகவும், இலங்கையின் 749வது குறியீடு உடைய கிளையாகவும் புதிய கிளை உதயமானது. தற்போது C1 தரத்தில் அளப்பரிய சேவையினை ஆற்றுகின்றது.

யாழ்ப்பாணத்தின் கல்விமையமாக விளங்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் குடாநாட்டின் 11வது கிளையாகவும், இலங்கைத் திருநாட்டின் 761வது குறியீடு உடைய கிளையாகவும் 2002ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பகுதியில் திருநெல்வேலி கிளை எனும் நாமத்துடன் புதியகிளை திறந்து வைக்கப் பட்டது. மிகக் குறுகிய காலத்தில் வேகமாக வளர்ச்சி அடைந்து "A" தர கிளையாக திகழ்கின்றது.

யாழ் நகரின் மையப்பகுதியான யாழ் பஸ்நிலையத்திற்கு முன்பாக மேலும் மக்களின் வங்கிச்சேவையினை இலகு படுத்தும் நோக்கோடு 2009ம் ஆண்டு பிற்பகுதியில் யாழ் மேற்தரக்கிளையின் விரிவாக்கக் கிளையாக யாழ் பஸ் நிலையக் கிளை எனும் நாமத்துடன் இயங்கப்பட்டது. 2019.03.05 அன்று தனிக்கிளையாக தரம் உயர்த்தப்பட்டு C11 தரத்தில் இயங்கி வருகிறது.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதியில் வங்கிக் கிளையின் அவசியத்தை உணர்ந்த முகாமைத்துவம் அப்பகுதியில் ஒரு விரிவாக் கற் கிளையினை 2009ஆம் ஆண்டு பிற் பகுதியில் யாழ் அதிமேற்தரக் கிளையின் சேய்க்கிளையாக திறந்து 2018ம் ஆண்டு நவம்பர் 16ம் திகதியன்று தனிக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டு C11 தரக்கிளையாக இயங்குகின்றது.

யாழ்ப்பாண மக்களின் கலாச்சார சின்னமாக விளங்கும் நல்லூர் கோவில் முன்றலில் யாழ்ப்பாண மேற்தரக் கிளையின் விரிவாக்கற் கிளையாகிய நல்லூர்க் கிளை யினை 2011இல் திறந்து மக்களின் வங்கித் தேவையை பூர்த்தி செய்தது. 2018 நவம்பர் மாதத்தில் தனிக் கிளையாக தரம் உயர்த் தப்பட்டு தற்போது c11 தரக் கிளையாக சிறப்பான சேவையினை ATM இயந்திரத் தினூடாகவும் வழங்கி வருகிறது.

2000ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் குடாநாட்டில் வங்கிச் சேவைக்கான கேள்வி அதிகரித்தமையினால் அச்சுவேலி கோப் பாய், சங்கானை, கொக்குவில், மருதங் கேணி, வல்வெட்டித்துறை, மந்திகை, கரண வாய், கொடிகாமம், பளை, கைதடி, கல்வி யங்காடு, உரும்பிராய், புன்னாலைக்கட்டு வன், இளவாலை, அளவெட்டி, கொக்குவில், சாவல்கட்டு, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, நயினாதீவு போன்ற இடங்களில் அவ் அவ் இடங்களின் தாய்க்கிளைகளை மையமாக வைத்து சேய்க்கிளைகளாக விரிவாக்கற் கிளை எனும் நாமத்துடன் பிரதேசக் கிளை கள் உருவாக்கப்பட்டன. அதுமட்டு மன்றி யாழ் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் ஒரு விரிவாக்கற்கிளை உருவாக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக அச்சுவேலி விரிவாக்கற்கிளை சுன்னாகத்தின் சேய் கிளையாக இருந்து குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்று குடாநாட்டின் 12வது கிளை யாகவும் இலங்கையின் 778வது கிளையாகவும் தனி கிளையாக திகழ்கின்றது. இது தற்போது Cl தரக் கிளையாக செயற்படுகின்றது.

தொடர்ச்சியாக திருநெல்வேலி கிளையின் விரிவாக்கற் கிளையான கோப் பாய்க்கிளை மிகக் குறுகிய காலத்தில் வள ர்ச்சி பெற்று 787 எனும் இலக்கத்துடன், குடா நாட்டின் 13வது கிளையாக வளர்ச்சி பெற்று C1 தரக்கிளையாக செயற்படுகின்றது.

2013ம் ஆண்டு ஆவணி மாதம் நாட்டில் உள்ள சகல விரிவாக்கற் கிளைக ளையும் முழுமை பெற்ற தனி கிளைகளாக மாற்ற வேண்டுமென்ற மத்திய வங்கியின் கட்டளைகளிற்கு இணங்க இலங்கை வங்கியின் கிளைகள் யாவற்றிற்கும் கிளைக் குறியீடுகள் வழங்கப்பட்டன. அதே போல் மாவட்டத்தில் உள்ள சகல விரிவாக்கற் கிளைகளிற்கும் கிளைக் குறியீடுகள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013ம் ஆண்டு ஆனி மாதம் 14ம் திகதி வட்டுக்கோட்டை மக்களின் வங்கித் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக ஒரு முழுமையான கிளை வேண்டுமென வட மாகாணம் தீர்மானித்ததற்கமைய யாழ் மாவட்டத்தின் 14வது கிளையாக 804 என்னும் குறியீட்டு இலக்கத்துடன் வட்டுக்கோட்டைக் கிளை ஸ்தாபிக்கப்பட்டது. இது தற்போது Cl என்னும் தரத்தில் புதிய இடத்தில் இயங்குகின்றது.

இவ்வாறாக, சுன்னாகக் கிளையின் விரிவாக்கற் கிளையாகிய உரும்பிராய்க் கிளை 2012ம் ஆண்டு கார்த்திகை 1ம் திகதி யாழ் மாவட்டத்தின் 15வது கிளையாகவும் 794 எனும் குறியீட்டு இலக்கத்துடன் புதிய கிளையாக பரிணாமித்து தற்போது C2 தரத்துடன் சேவையினை வழங்குகின்றது.

விவசாயக் கிராமமான புன்னாலைக் கட்டுவன் பிரதேசமக்களின் விவசாயத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கோடு சுன்னாகக் கிளையின் விரிவாக்கக் கிளை யாக புன்னாலைக்கட்டுவன் கிளை திறந்து வைக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டு பின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இவ்விரிவாக்கற் கிளையானது 2020ம் ஆண்டு பெப்ரவரி 26ம் திகதி தனிக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டு C11 எனும் தரத்தில் முழுமையாக கிளையாக இயங்குகிறது.

பருத்தித்துறை கிளையின் விரி வாக்க கிளையாக இயங்கிய வல்வெட்டித் துறை கிளை 2012ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தனிக்கிளையாக தரமுயர்த்தப் பட்டு யாழ் மாவட்டத்தின் 16வது கிளையாக 791 எனும் குறியீட்டு இலக்கத்துடன் புதுப் பொலிவு பெற்று C2 தரத்தில் செயற் படுகின்றது.

பருத்தித்துறைக்கிளையில் விரி வாக்க கிளையாக மந்திகையில் 2012ம் ஆண்டு ஆடி மாதம் 3ம் திகதி ஒரு விரிவாக் கக்கிளை திறந்து வைக்கப்பட்டது. 16.11.2018 அன்று தரம் உயர்த்தப்பட்டு தனிக் கிளை யாக செயற்பட்டு தற்போது CRM இயந்திரத் துடன் புதுப்பொலிவுடன் இயங்குகின்றது.

பருத்தித்துறைக் கிளையின் விரி வாக்கல் கிளையாக மருதங்கேணி எனும் இடத்தில் அவ்வூர் மக்களின் வங்கித் தேவையினை பூர்த்தி செய்து அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் நோக்கோடு 2011ஆம் ஆண்டு மருதங்கேணி கிளை திறந்து வைக்கப்பட்டது. பின்பு 2017ம் ஆண்டின் மார்ச் மாதத்தில் இக்கிளை தனிக்கிளையாக பரிணமித்து தற்போது C1 தரத்தில் இயங்குகின்றது.

2010 தொடக்கம் சாவகச்சேரி கிளை யின் விரிவாக்கற்கிளைகளாக செயற் பட்டுவந்த கைதடி, கொடிகாமம், மற்றும் பளை ஆகிய கிளைகள் 2015ம் ஆண்டின் முற்பகுதியில் தனித்தனி முகாமை பெற்ற கிளைகளாக விஸ்தரிக்கப்பட்டு Cll தரத் துடன், ATM இயந்திர வசதியுடன், மிக வேகமான வியாபார வளர்ச்சியுடனும் செயற்பட்டு வருகின்றன.

காங்கேசந்துறை கிளையின் விரி வாக்கற்கிளையான இளவாலைக்கிளை மற்றும் அளவெட்டிக்கிளை என்பன அவ்வவ் பிரதேசங்களில் காணப்பட்ட வியாபார குறைவு காரணமாக புதிய இடங்களில் இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக இளவாலைக் கிளை 2018.10.01 அன்று பண்டைத்தரிப்பு நகரிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு முழுமையான தனிக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக உதயமாகியது. C2 தரத்தில் தனது முழுமையான சேவையை ஆற்றி வருகின்றது.

அதேபோல் அளவெட்டிக்கிளை தெல்லிப்பளைக் கிளை எனும் புதிய நாமத் துடன் தெல்லிப்பளையில் C2 தரத்தில் இயங்கி வருகின்றது. மானிப்பாய் கிளையின் விரிவாக்கற் கிளையாகிய சங்கானை கிளை 2012 இல் தனிக் கிளையாக பரிணமித்து தற்போது ATM உட்பட்ட சேவையுயர் C1 தரத்தில் புதிய வளர்ச்சியுடன் இயங்கு கின்றது.

ஊர்காவற்துறை கிளையின் விரி வாக்கற் கிளை ஒன்று ஊர்காவற்துறையில் 2007ம் ஆண்டு முற்பகுதியில் திறக்கப் பட்டது. ஊர்காவற்துறை கிளை அப்போது வேலணையில் தற்காலிகமாக இயங்கியது. வேலணையில் தற்காலிகமாக இயங்கிய ஊர்காவற்துறை கிளை (063) தற்போது வேலணைக்கிளை எனும் நாமத்துடன் புதிய பொலிவுடன் வாடிக்கையாளர் சேவையினை வழங்கி வருகின்றது.

RLC 2015ம் ஆண்டு யூலை மாதம் இலங்கை வங்கியினால் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு துணை அலுவலகம். பிராந்திய கடன் வழங்கும் கிளைச் சந்தைப்படுத்தலை நோக்கி நகர்த்தி சொத்துக்களுக்கு எதிரான அனைத்து கடன்களையும் வழங்கும் காலத்தை விரைவுபடுத்தும் நோக்கோடு பிரத்தியேகமாக மாகாணங்கள் தோறும் உருவாக்கப்பட்ட அலுவலகம் ஆகும். இந்த வடமாகாண பிராந்திய கடன் அலுவலகம் stanly வீதியில் உள்ள இலங்கைவங்கி கட்டடத்தின் 1ம் மாடியில் அமைந்துள்ளது.

அதேவேளை ஊர்காவற்துறை விரிவாக்கற்கிளை புதிய சொந்தக் கட்டிடத் தில் 373 எனும் புதிய குறியீட்டு இலக்கத் துடன் 2015ம் ஆண்டின் நடுப் பகுதியில் இருந்து C2 தரத்தில் தனிக் கிளையாக செயற்படுகின்றது.

வேலணை எனும் கிராமத்தில் ஊர்காவற்துறை கிளை எனும் நாமத்துடன் இயங்கிய கிளையின் சேய் கிளைகளாக 2009ம் ஆண்டு நெடுந்தீவு கிளை ஆரம்பிக் கப்பட்டது. அதேபோல் 2011ம் ஆண்டு நடுப்பகுதியில் அப்போதைய இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரம சிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கிளையானது நயினாதீவுக் கிளையாகும். தற்போது நெடுந்தீவு மற்றும் நயினாதீவுக் கிளைகள் வேலணைக் கிளையின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் விரிவாக்கற் கிளைகளாகும்.

கிராமத்திற்குரியதும் நகரத்திற்குரிய துமான பண்புகளையும் நெருக்கமான குடிசனப் பரம்பலைக் கொண்ட கொக்குவில் பகுதியில் 2009ம் ஆண்டு பிற்பகுதியில் (02.09.2009) அன்று யாழ்ப்பாணம் 2ம் மேற்தரக் கிளையின் விரிவாக்க கிளையாக திறந்து வைக்கப்பட்டது. 2015ம் ஆண்டு மார்ச் மாதத் தில் இக்கிளை தனிக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது C1கிளையாக சிறப்பான சேவையினை செய்து வருகின்றது.

மேலும் திருநெல்வேலிக் கிளையின் விரிவாக்கற் கிளையாக இயங்கிய கல்வியங் காட்டுக்கிளை, அச்சுவேலிக்கிளையின் விரிவாக்கற் கிளையாக இயங்கிய சிறுப்பிட் டிக்கிளை, நெல்லியடிக்கிளையின் விரிவாக் கற் கிளையாக கரணவாய்க்கிளை என்பன 2020ம் ஆண்டு தை மாதம் 06ம் திகதி தனிக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கு கின்றன. அவ்வாறாக மானிப்பாய் கிளையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாக்கற் கிளைகளாக இயங்கிய சாவற் கட்டுக் கிளை 2020ம் ஆண்டு மாசி மாதத்தில் தனிக்கிளையாக தரம் உயர்த்தப்பட்டு C11 தரத்தில் சேவைகளை வழங்கிவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மேற்தரக் கிளைகள் தவிர்ந்த ஏனைய கிளைகள் யாவும் யாழ் மாவட்ட முகாமையாளர் நிர்வா கத்தில் 2018ம் ஆண்டு வரை தொழிற்பட்டது. பின்னர் 2018ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள கிளைகளை யாழ் மேற்கு, யாழ் கிழக்கு எனும் இரண்டு மாவட்ட முகாமை யின் கீழ் பிரிக்கப்பட்டு மேற்கில் 23 கிளை களும் கிழக்கில் 17 கிளைகளும் என 40 கிளைகள் தற்போது உன்னதமான சேவை யினை வழங்கி வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் இலங்கை வங்கியானது 40 கிளைகளுடன் தனது சந்தைப் பங்கை முதன்மையாளனாக வைத்து மக்களின் பொருளாதார நிதி மேம்பாட்டிற்கு உயரிய பங்களிப்பை வழங்கி இலங்கையின் "முதல் தர வங்கி" எனும் நாமத்துடன் ஓங்கி நிற்கின்றது. வியாபார முனைப்புக்கள் மட்டுமன்றி சமூகம் சார் பங்களிப்பினையும் தேவையான சந்தர்ப் பங்களில் வழங்கி சமூகம் சார் பங்களிப் பினையும் பொறுப்பினையும் வழங்கி வருகின்றது.

இவ்வாறாக யாழ்குடாநாட்டில் தனது அளப்பரிய சேவையினை ஆற்றி வருகின்ற இலங்கை வங்கி மேன்மேலும் தனது சேவைகளை விஸ்தரித்து மக்களின் வங்கித் தேவையை உயர்தரத்தில் பேணி சேவை யாற்றிக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**ச. கிருஷ்ணா**
வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்,
இலங்கை வங்கி,

*எவருடைய குறைகளை எண்ணி விட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்.*

*மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட ஒரு கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்.*

Public Library
Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் தோற்றமும் வரலாறும் ஒரு பார்வை - நாணயக் குத்திகள்

முதலாவது ஞாபகார்த்த நாணய குத்தி 1957 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் 5 ரூபா மற்றும் 1 ரூபா பெறுமதியான 02 நாணய குத்திகள் வெளியிடப்பட்டன. இவை இங்கிலாந்தின் ரோயல் வார்ப்புச் சாலையில் தயாரிக் கப்பட்டன.

❊ கௌதம புத்தரின் 2500 ஆண்டு மறைந்த நினைவு நாணயம் - வெள்ளியினாலான 5 ரூபா - 1957ம்ஆண்டு



❊ கௌதம புத்தரின் 2500 ஆண்டு மறைந்த நினைவு நாணயம் - செப்பு/நிக்கலாலான 1 ரூபா - 1957ம்ஆண்டு



உத்தியோக பூர்வ முதல் நாணயக் குத்தித் தொடர்கள் 1963இல் அறிமுகப்படுத்தப் பட்டன. இவை அலுமினியம், செம்பு மற்றும் நிக்கல் உலேகங்களாலான இந்நாணயக் குத்திகளின் தொடரில் இலங்கையின் சின்னம் அதன் முகப்புப் பக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. நாணயக் குத்திகளின் வகைகளாவன.


❊ ஒரு சதம் - அலுமினியத்தாலானது – 0.7g நிறை கொண்டது.



❊ இரண்டு சதம் - அலுமினியத்தாலானது – 0.78g நிறை கொண்டது.



❊ ஐந்து சதம் - நிக்கல் மற்றும் பித்தளை யிலானது – 3.24g நிறை கொண்டது.



❊ பத்து சதம் - நிக்கல் மற்றும் பித்தளை யிலானது –4.21g நிறை கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


❋ இருபத்தைந்து சதம் - நிக்கல் மற்றும் செம்பினாலானது – 3.24g நிறை கொண்டது.



❋ ஐம்பது சதம் - நிக்கல் மற்றும் செம்பினாலானது – 5.51g நிறை கொண்டது.



❋ ஒரு ரூபா - நிக்கல் மற்றும் செம்பினாலானது – 7.13g நிறை கொண்டது.



1972ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசின் இலச்சனை நாணயக்குத்திகளின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்டன. பின்பக்கத்தில் குறிக்கப்பட்டு வந்த “லங்கா” இவ்வெளியீட்டின் போது “ஶ்ரீ லங்கா” “இலங்கை” என மாற்றமடைந்தது.


1984இல் 2 ரூபா மற்றும் 5ரூபா நாணயத் தாள்களிற்கு பதிலாக 2 ரூபா மற்றும் 5 ரூபா நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டன.

2005ஆம் ஆண்டு உலோக வகையிலும் நிறத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2010 ஆம் ஆண்டு முதல் தடவையாக 10 ரூபா பெறுமதியான பதினொரு பக்க வடிவத்தினைக் கொண்ட நாணயம் சுற்றோட்டத்தில் விடப்பட்டது. நாணயத்தில் 2009 என குறிக்கப்பட்டுள்ளது.

❋ ஒரு சதம் - அலுமினியத்தாலானது – 0.7g நிறை கொண்டது – 1975 - 1991 காலப்பகுதி.



❋ இரண்டு சதம் - அலுமினியத்தாலானது – 0.78g நிறை கொண்டது 1975 - 1978 காலப்பகுதி.



❋ ஐந்து சதம் - நிக்கல் மற்றும் பித்தளையாலானது – 3.24g நிறை கொண்டது 1975 காலப்பகுதி.



❋ ஐந்து சதம் - அலுமினியத்தாலானது –1.00g நிறை கொண்டது 1978 - 1991 காலப்பகுதி.



❋ பத்து சதம் - நிக்கல் மற்றும் பித்தளையாலானது –4.21g நிறை கொண்டது 1975 காலப்பகுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❉ பத்து சதம் - அலுமினியத்தாலானது – 1.30g நிறை கொண்டது 1978 - 1991 காலப்பகுதி.



❉ இருபத்தைந்து சதம் - நிக்கல் மற்றும் செம்பினாலானது – 3.24g நிறை கொண்டது 1975 - 1994 காலப்பகுதி.



❉ இருபத்தைந்து சதம் - இரும்பிற்கு நிக்கல் முலாமிடப்பட்டது – 3.24g நிறை கொண்டது 1996 - 2004 காலப்பகுதி.



❉ இருபத்தைந்து சதம் - இரும்பிற்கு செப்பு முலாமிடப்பட்டது – 1.68g நிறை கொண்ட சிறிய நாணயம் 2005 - 2009 காலப்பகுதி.



❉ ஐம்பது சதம் - நிக்கல் மற்றும் செம்பினாலானது – 5.51g நிறை கொண்டது 1972 - 1994 காலப்பகுதி.



❉ ஐம்பது சதம் - இரும்பிற்கு நிக்கல் முலாமிடப்பட்டது – 5.51g நிறை கொண்டது 1996 - 2004 காலப்பகுதி.



❉ ஐம்பது சதம் - இரும்பிற்கு செப்பு முலாமிடப்பட்டது -2.5g நிறை கொண்ட சிறிய நாணயம் 2005 - 2009 காலப்பகுதி.



❉ ஒரு ரூபா - நிக்கல் மற்றும் செம்பினாலானது - 7.13g நிறை கொண்டது 1972 - 1994 காலப்பகுதி.



❉ ஒரு ரூபா - இரும்பிற்கு நிக்கல் முலாமிடப்பட்டது - 7.13g நிறை கொண்டது 1996 - 2004 காலப்பகுதி.



❉ ஒரு ரூபா - இரும்பிற்கு பித்தளை முலாமிடப்பட்டது - 3.65g நிறை கொண்ட சிறிய நாணயம் 2005 - 2013 காலப்பகுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ ஒரு ரூபா - இரும்பிற்கு பித்தளை முலாமிடப்பட்டது - 3.65g நிறை கொண்ட நாணயம் பின்லாந்து நாட்டில் வார்க்கப்பட்டது 2013 காலப்பகுதி.



❊ ஒரு ரூபா - துருப்பிடிக்காத இரும்பினாலானது - 3.93g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமான "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2016 காலப்பகுதி.



❊ இரண்டு ரூபா - நிக்கல் மற்றும் செம்பினாலானது - 8.30g நிறை கொண்ட நாணயம் 1984- 2004 காலப்பகுதி.



❊ இரண்டு ரூபா - இரும்பிற்கு நிக்கல் முலாமிடப்பட்டது-7.0g நிறை கொண்ட நாணயம் 2005 - 2011 காலப்பகுதி.




❊ இரண்டு ரூபா - துருப்பிடிக்காத இரும்பினாலானது -7.0g நிறை கொண்ட நாணயம் 2013 காலப்பகுதி.



❊ இரண்டு ரூபா - துருப்பிடிக்காத இரும்பினாலானது -7.0g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமாக "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2016 காலப்பகுதி.



❊ ஐந்து ரூபா - நிக்கல் மற்றும் பித்தளையிலானது -9.5g நிறை கொண்ட நாணயம் 1984 - 2004 காலப்பகுதி.



❊ ஐந்து ரூபா - இரும்பிற்கு பித்தளை முலாமிடப்பட்டது - 7.7g நிறை கொண்ட நாணயம் இங்கிலாந்தின் ரோயல் வார்ப்புச் சாலையில் வார்க்கப்பட்டது 2005 - 2013 காலப்பகுதி.



❊ ஐந்து ரூபா - துருப்பிடிக்காத இரும்பினாலானது -7.5g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமான "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2016 காலப்பகுதி.



❊ பத்து ரூபா - இரும்பிற்கு நிக்கல் முலாமிடப்பட்டது - 8.36g நிறை கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயம் இங்கிலாந்தின் ரோயல் வார்ப்புச் சாலையில் வார்க்கப்பட்டது 2009 - 2011 காலப்பகுதி.




❊ பத்து ரூபா - துருப்பிடிக்காத இரும்பி னாலானது - 8.36g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமான "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2013 - 2016 காலப்பகுதி.



❊ ஒரு ரூபா - துருப்பிடிக்காத இரும்பினா லானது -3.75g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமான "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2017 காலப்பகுதி.



❊ இரண்டு ரூபா - துருப்பிடிக்காத இரும்பி னாலானது - 4.5g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமாக "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2017 காலப்பகுதி.



❊ ஐந்து ரூபா - துருப்பிடிக்காத இரும்பி னாலானது - 5.24g நிறை கொண்ட நாணயம ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமாக "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2017 காலப்பகுதி.



❊ பத்து ரூபா - துருப்பிடிக்காத இரும்பி னாலானது - 5.24g நிறை கொண்ட நாணயம் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவனமாக "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது 2017 காலப்பகுதி.



❊ பத்து ரூபா - துருப்பிடிக்காத இரும்பி னாலானது - 8.36g நிறை கொண்ட நாணயம்.

2014ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் இலங்கையின் 25 நிருவாக மாவட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் புதிய நாணயத் தொகுதியொன்று வெளியிடப்பட்டது. இங்கு இலங்கையின் ஒவ்வொரு நிருவாக மாவட்டங்களுக்கே உரித்தான சிறப்பியல்புகள் மற்றும் அந்தந்த மாவட்டங்களின் பிரசித்தி பெற்ற இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாணயக் குற்றிகள் ஸ்லோவாக்கியாவிலுள்ள அச்சு நிறுவன மாக "கிரமினிகா" வில் வார்க்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணம்

### யாழ்ப்பாண மாவட்ட நாணயம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர்க் கோவில்.



### முல்லைத்தீவு மாவட்ட நாணயம்

கடற்தொழிலும் றோலர் இயந்திரமும்.



### மன்னார் மாவட்ட நாணயம்

பிரசித்தி மிக்க வணக்க ஸ்தலம் மடு தேவாலயம்.



### கிளிநொச்சி மாவட்ட நாணயம்

பிரசித்தியான கோம்பராய் என்ற பெயரினால் அழைக்கப்படும் நெல் களஞ்சிய கூடம்



### வவுனியா மாவட்ட நாணயம்

வயல்வெளியும் மரக்கறியும்.



## வடமத்திய மாகாணம்

### அனுராதபுரம் மாவட்ட நாணயம்

ஜயமகா போதியும் புராதன அனுராதபுர இராஜதானியின் தொல்பொருள்களும்.



### பொலனறுவை மாவட்ட நாணயம்

பராக்கிரமபாகு மன்னனின் சிலையும் பின்னால் பராக்கிரம சமுத்திரமும்.



## வடமேல் மாகாணம்

### புத்தளம் மாவட்ட நாணயம்

சிறுத்தை மற்றும் டொல்பின் மீன்.



### குருநாகல் மாவட்ட நாணயம்

அத்துகல மற்றும் நகர கடிகாரக் கோபுரம்.



## கிழக்கு மாகாணம்

### திருகோணமலை மாவட்ட நாணயம்

வணக்கஸ்தலமான கோணேஸ்வரம் கோவிலும் சேருவில இராஜ மகா விகாரையும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு மாவட்ட நாணயம்**

பாசிக்குடா சுற்றுலா வலயமும் பாடும் மீன்களும்.



**அம்பாறை மாவட்ட நாணயம்**

கல்ஓயா செயற்றிட்டத்தின் கீழ் கட்டப்பட்ட சேனநாயக்க சமுத்திரமும் அதனை நிருமாணித்த மதிப்புக்குரிய டீ.எஸ் சேனாநாயக்க அவர்களின் உருவச்சிலையும்.



## மத்திய மாகாணம்

**மாத்தளை மாவட்ட நாணயம்**

சீகிரியா சுவர் ஓவியமும் பின்னால் சீகிரியா குன்றும்.



**கண்டி மாவட்ட நாணயம்**

புனித ஸ்தலமான ஸ்ரீ தலதா மாளிகை.



**நுவரேலியா மாவட்ட நாணயம்**

மலைநாட்டின் தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண்.



## ஊவா மாகாணம்


**பதுளை மாவட்ட நாணயம்**

உல்லாச பயணிகளைக் கவருகின்ற துன் ஹிந்த நீர்வீழ்ச்சி.



**மொனராகலை மாவட்ட நாணயம்**

கிரிவெஹாரயும் கதிர்காமம் ஆலயம் மற்றும் அழகு மயில்.



## சப்பிரகமுவா மாகாணம்

**கேகாலை மாவட்ட நாணயம்**

பின்னவளை யானைகள் சரணாலயம்



**இரத்தினபுரி மாவட்ட நாணயம்**

சிவனொளிபாத மலையும் இரத்தினக்கற்களும்.



## தென் மாகாணம்

**அம்பாந்தோட்டை மாவட்ட நாணயம்**

மாத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**மாத்தறை மாவட்ட நாணயம்**

தெவுந்தர முனையிலுள்ள வெளிச்ச வீடு.



**காலி மாவட்ட நாணயம்**

லன்தேசி கோட்டை, காலி சர்வதேச கிரிக்கட் மைதானமும் மற்றும் காலி மத்திய பேருந்து தரிப்பிடமும்.



## மேல் மாகாணம்

**கம்பஹா மாவட்ட நாணயம்**

களனி விகாரை.




**கொழும்பு மாவட்ட நாணயம்**

உலக வர்த்தக மையமும் இலங்கை வங்கியின் தலைமையகமும் தாமரைத் தடாகத்தின் நாடக அரங்கு மற்றும் கொழும்புத் துறைமுகமும்.



**களுத்துறை மாவட்ட நாணயம்**

களுத்துறைக்கே பிரசித்திபெற்ற பழமான மங்குஸ்தான் மற்றும் மரக்கறி வகைகள்



❊ 1968 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இரண்டாவது உலக உணவு மாநாடு - பெறுமதி 2 ரூபா - உலோகம் செப்பு/ நிக்கலாலானது.



❊ 1976 ஆம் ஆண்டு - கருப்பொருள்: அணிசேரா நாடுகளின் ஐந்தாவது மாநாடு - கொழும்பு பெறுமதி 5 ரூபா மற்றும் 2 ரூபா - உலோகம் நிக்கலாலானது.




❊ 1978 ஆம் ஆண்டு - கருப்பொருள்: முதலாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அவர்களின் பதவியேற்பு பெறுமதி ஒரு ரூபா உலோகம் செப்பு.:. நிக்கலாலானது மற்றும் ஒரு ரூபா - உலோகம் தங்கத்திலாலானது (கரட் 22) (முடக்கப்பட்டுள்ளது)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ 1981 ஆம் ஆண்டு - கருப்பொருள்: சர்வசன வாக்குரிமையின் 50வது ஆண்டு நினைவு தினம் பெறுமதி 5 ரூபா - உலோகம் செப்பு / நிக்கலாலானது.



❊ 1978 ஆம் ஆண்டு - கருப்பொருள்: மகாவலி அபிவிருத்தித் திட்டம் பெறுமதி 2 ரூபா - உலோகம் செப்பு / நிக்கலாலானது.



❊ 1987 ஆம் ஆண்டு - கருப்பொருள்: சர்வதேச வீடமைப்பு ஆண்டு பெறுமதி 10 ரூபா - உலோகம் செப்பு / நிக்கலாலானது. மற்றையது 10 ரூபா பெறுமதி உடைய உலோகம் செப்பு / நிக்கலாலானது (முடக் கப்பட்டுள்ளது)



❊ 1990 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை மத்திய வங்கியின் 40வது ஆண்டு நிறைவு பெறுமதி 500 ரூபா - உலோகம் வெள்ளியிலானது. மற்றையது 500 ரூபா பெறுமதி உடைய உலோகம் வெள்ளியிலா லானது (முடக்கப்பட்டுள்ளது)



❊ 1991 ஆம் ஆண்டு - கருப்பொருள்: 5வது தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுக்கள் பெறுமதி 500 ரூபா (முடக்கப்பட்டுள்ளது) மற்றும் 100 ரூபா - உலோகம் தங்கத்தி லானது (கரட் 12)



❊ 1992 ஆம் ஆண்டு - கருப்பொருள்: நிறை வேற்றதிகாரம் கொண்ட சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களின் பதவியேற்பின் மூன் றாவது ஆண்டு நினைவு தினம் பெறுமதி ஒரு ரூபா - உலோகம் செப்பு/ நிக்கலாலானது இதன் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் (முடக்கப்பட்டுள்ளன)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ 1993 ஆம் ஆண்டு - கருப்பொருள்: 2300 அனுபுது மிஹிந்து ஜயந்தி பெறுதி 500 ரூபா - உலோகம் வெள்ளியிலானது (முடக்கப்பட் டுள்ளது)



❊ 1995 ஆம் ஆண்டு - கருப்பொருள்: ஐக்கிய நாடுகள் சபையின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி 5 ரூபா-உலோகம் நிக்கல்/ பித்தளையிலானது.



❊ 1995 ஆம் ஆண்டு - கருப்பொருள்: உணவு விவசாய அமைப்பின 50வது ஆண்டு நிறைவு பெறுமதி 2 ரூபா - உலோகம் செப்பு / நிக்கலாலானது



❊ 1996 ஆம் ஆண்டு - கருப்பொருள்: ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியதின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி ஒரு ரூபா - உலோகம் செப்பு/ செப்பு/ நிக்கலாலானது



❊ 1998 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கையின் 50வது சுதந்திர தின நிறைவு பெறுமதி 10 ரூபா - உலோகம் இரு வகை உலோகம் (வெளிப்பக்கம் செப்பு - நிக்கல் உட்பக்கம் நிக்கல் பித்தளை) தங்கம் (22 கரட்) மற்றும் வெள்ளி நாணயங்கள் முடக்கப்பட்டுள்ளன.



❊ 1999 ஆம் ஆண்டு - கருப்பொருள்: 1996 கிரிக்கெட் உலகக் கிண்ண வெற்றி பெறுமதி 1000 ரூபா - உலோகம் வெள்ளியிலானது (முடக்கப்பட்டுள்ளது) மற்றும் பெறுமதி 5 ரூபா - உலோகம் நிக்கல் பித்தளையினா லானது




❊ 1999 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை தரைப்படையின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி ஒரு ரூபா - உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பிலாலானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ 2000 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை மத்திய வங்கியின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி 1000 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது (முடக்கப்பட்டுள்ளது).




❋ 2000 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை கடற்படையின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி ஒரு ரூபா - உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பிலாலானது. மற்றையது ஒரு ரூபா பெறுமதி - உலோகம் செப்பு/ நிக்கலாலானது (முடக்கப்பட்டுள்ளது).



❋ 2001 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை விமானப் படையின் 50வது ஆண்டு பெறுமதி ஒரு ரூபா - உலோகம் செப்பு/ நிக்கலாலானது (முடக்கப்பட்டுள்ளது)



❋ 2001 ஆம் ஆண்டு - கருப்பொருள்: கொழும்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி 2 ரூபா - உலோகம் செப்பு/ நிக்கலாலானது.



❋ 2003 ஆம் ஆண்டு - கருப்பொருள்: சியாமோபசம்பதாவவின் 250வது ஆண்டு நிறைவு (பிரவர உபாலி நாயக்க தேரர்) பெறுமதி 5 ரூபா - உலோகம் நிக்கல் / பித்தளையிலாலானது



❋ 2006 ஆம் ஆண்டு - கருப்பொருள்: புத்தர் பரிநிர்வாணத்தின் 2550வது ஆண்டு நினைவு தினம் பெறுமதி 5 ரூபா - உலோகம் பித்தளை முலாம் பூசப்பட்ட இரும்பிலாலானது. மற்றும் 2000 ரூபா பெறுமதி உடைய வெள்ளியும் (ஒரு பகுதி தங்க முலாம் பூசப்பட்டது) 1500 ரூபா பெறுமதி உடைய வெள்ளியும் முடக்கப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❊ 2007 ஆம் ஆண்டு - கருப்பொருள்: கிரிக்கெட் உலகக் கிண்ணம் (இரண்டாம் இடம்) பெறுமதி 1000 ரூபா - உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பு மற்றும் 5 ரூபா பெறுமதி உடைய உலோகம் பித்தளை முலாம் பூசப்பட்ட இரும்பினாலானது



❊ 2008 ஆம் ஆண்டு - கருப்பொருள்: ஊழியர் சேம நிதியத்தின் 50வது ஆண்டு நிறைவு பெறுமதி 1000 ரூபா - உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பினாலானது (முடக்கப்பட்டுள்ளது) 1000 ரூபா மற்றும் 2 ரூபா பெறுமதி உடைய உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பிலாலானது.



❊ 2009 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை சுங்க அதிகார சபையின் இருநூறாவது ஆண்டு நிறைவு பெறுமதி 200 ரூபா - உலோகம் வெள்ளியினாலானது (முடக்கப்பட்டுள்ளது)



❊ 2009ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை தரைப் படையின் 60வது ஆண்டு நிறைவு பெறுமதி 1000 ரூபா - உலோகம் வெள்ளியினாலானதும் மற்றும் செப்பு /நிக்கலினாலானது.



❊ 2010 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டு நிறைவு பெறுமதி 5000 ரூபா - உலோகம் வெள்ளியினாலானது (முடக்கப்பட்டுள்ளது)



❊ 2011 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை விமானப் படையின் 60வது ஆண்டு நிறைவு பெறுமதி 2 ரூபா- உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பிலாலானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❊ 2011 ஆம் ஆண்டு - கருப்பொருள்: 2600 சம்புத்தத்வ ஜயந்தி பெறுமதி 10 ரூபா - உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பிலானது மற்றும் 1000 ரூபா பெறுமதியானது உலோகம் வெள்ளி (முடக்கப்பட்டுள்ளது)





❊ 2011ஆம் ஆண்டு - கருப்பொருள்: மக்கள் வங்கியின 50வது ஆண்டு நிறைவு பெறுமதி 1000 ரூபா - உலோகம் ஒரு பகுதி தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி யிலாலானது. (முடக்கப்பட்டுள்ளது)



❊ 2011 ஆம் ஆண்டு - கருப்பொருள்: கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவு பெறுமதி 2000 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது. (முடக்கப்பட்டுள்ளது)



❊ 2012 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை சாரணிய இயக்கத்தின் நூறாவது ஆண்டு நிறைவு பெறுமதி 2 ரூபா - உலோகம் நிக்கல் முலாம் பூசப்பட்ட இரும்பினாலானது.



❊ 2012 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை யப்பான் அரசாங்க நட்புறவு இராஜதந்திர 60வது ஆண்டு நிறைவு பெறுமதி 1000 ரூபா - உலோகம் வெள்ளியினாலானது. (முடக்கப்பட்டுள்ளது)



❊ 2014 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை வங்கியின் 75வது ஆண்டு நிறைவு பெறுமதி 5 ரூபா - உலோகம் பித்தளை முலாம் பூசப்பட்ட இரும்பினாலானது.



❊ 2014 ஆம் ஆண்டு - கருப்பொருள்: சிறிமத் அநகாரிக தர்மபால அவர்களின் 150 ஆண்டு நிறைவு பெறுமதி 500 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது. (முடக்கப்பட்டுள்ளது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ 2015 ஆம் ஆண்டு - கருப்பொருள்: பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் வருகையை முன்னிட்டு பெறுமதி 500 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது. (முடக்கப்பட்டுள்ளது)




❊ 2015 ஆம் ஆண்டு - கருப்பொருள்: கொழும்பு மாநகர சபையின் 150வது நிறைவு பெறுமதி 500 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது (முடக்கப்பட்டுள்ளது)





❊ 2017 ஆம் ஆண்டு - கருப்பொருள்: கொழும்பு விசாகா வித்தியாலயத்தின் 100வது நிறைவு பெறுமதி 2000 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது. (முடக்கப்பட்டுள்ளது)




❊ 2017 - Ceylon Tea 150th Anniversary - Rs 10 coin.
2017ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கைத் தேயிலையின் 150வது நிறைவு பெறமதி 10 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது (முடக்கப்பட்டுள்ளது)



❊ 2018 - Sri Lanka Signal Corp. 75th Anniversary - Rs 10 coin.
2018 ஆம் ஆண்டு - கருப்பொருள்: இலங்கை சிக்னல் கூட்டுத்தாபனத்தின் 75வது நிறைவு பெறுமதி 10 ரூபா - உலோகம் வெள்ளியிலாலானது (முடக்கப்பட்டுள்ளது)





**உசாத்துணை நூல்கள்/ இணையத் தளங்கள்**

1. From Purana to the Rupee - இலங்கை மத்திய வங்கி.
2. வைப்பகம் சஞ்சிகைகள் - இலங்கை மத்திய வங்கி.
3. நாணய அருங்காட்சியக வெளியீடுகள் - இலங்கை மத்திய வங்கி.
4. நாணய அருங்காட்சியக வெளியீடுகள் - இலங்கை வங்கி
5. இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள் - பரமு.புஷ்பரட்ணம்.
6. இலங்கை தொல்பொருளியல் திணைக்களம் - சுவடிகள் மற்றும் நாணயவியல் பிரிவு இணையத்தளம்- http://www.archaeology.gov.lk/
7. இலங்கை மத்திய வங்கி இணையத்தளம் - https://www.cbsl.gov.lk
8. www.banknotes.com
9. https://en.wikipedia.org/wiki/Sri Lankan rupee
10. https://en.wikipedia.org/wiki/Banknotes of the Sri Lankan rupee



**நா. ஜங்கரேசன்**
(BIT, AIB, PgDISM(Col), PgDEBM(IBSL))
நிறைவேற்று உத்தியோகத்தர்,
உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வியாபாரச் செயன்முறைகள் மீளமைத்தல் பிரிவு.
இலங்கை வங்கி, தலைமையகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரஸ்வதி பூஜையும் யாழ்ப்பாண இலங்கை வங்கியும்

அன்றைய மாலைப்பொழுது, செங் கதிரோன் குளிர் தளிர்ந்து நிற்கும் அந்த வேளையில் இனிய தென்றல் வருடி வர காதிற்குள் பக்தி மயமாய் பாடல்கள் புகுந்து இனித்தன. வழமையான வாடிக்கையாளர் சேவைகளில் நடைபெறும் ஆரவாரங்கள் இன்றி அமைதியாய் யாழ்ப்பாணக் கிளையும் இருந்தது. கிளையின் கட்டிடத்தின் முன் வாயிலில் மங்கல பூரண கும்பங்கள் வரவேற்று தோரணங்களால் அலங்கரித்து நிற்க விழாவுக்கான ஆயத்தங்களை கட்டியம் கூறி நின்றது. அது மட்டுமின்றி கட்டிடத்தின் முன்பகுதி மேடையுடன் கூடிய கொட்ட கையாய் திரளான விருந்தினரை கவர்ந்தி ழுக்கும் வண்ணமாய் இருந்தது.

வங்கிக் கிளைகளில் நடைபெறும் பொதுவான விழாக்களில் சரஸ்வதி பூஜை என்னும் நவராத்திரி விழா முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இருப்பது வழமை. அதே போல் அன்றும் பிரதான முகாமையாளர் உள்ளிட்ட ஆண்கள் யாவரும் வேட்டி அணிந்து கலாச்சார பின்னணியுடன் தங்கள் காரியங்களை ஆற்றி நின்றனர். அன்றைய 10ம் நாள் நிகழ்வான விஜயதசமி அன்று இந்துக் குருக்களின் முறையுடன் சமய சம்பிரதாயங்கள் நிறைவுபெற்று ஆயுத பூசையும் நிறைவு பெற்று விருந்தினரிடை யேயும் தம்மிடையேயும் அன்றைய பிரசாதங்களை பகிர்ந்துண்டனர். மாலை 4.30 மணியளவில் ஈழத்து புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான்கள், தவில் வித்து வான்கள் கூடி அலங்கரிக்கப்பட்ட மேடையில் மங்கள இசையை தொடங்கினர்

மேடையில் இருந்த தவில், நாதஸ்வர வித்துவான்களை பொன்னாடை போர்த்தி பிரதான முகாமையாளர் கௌர வித்து நின்றார். மங்கள இசையில் தமக்கே உரித்தான ஆலோபனைகளுடன் பக்திப் பாடல்கள், சினிமா பாடல்கள் என்பவற்றை இசைத்து அரங்கத்தை இசையால் மகிழ் வித்தனர். சாதாரணமாக தவில், நாதஸ்வர வித்துவான்களை கச்சேரிக்கு அழைப்பது என்றால் மிகப் பெரும் தொகை அவர்களின் சேவைப் பணமாக அமையும். ஆனால் அவர்களுடன் எம்மவர்கள் கொண்ட இறுக்கமான நட்பும், பிணைப்பும் வங்கி யாளர்களையும் வாடிக்கையாளரையும் மகிழ்விக்க இசைந்து வந்து இசைத்து நின்றனர். வீதியால் சென்றவர், விருப்பம் உள்ளவர், விருந்தாய் வந்தவர்கள் காதிற்கு விருந்தாய் இரசித்தவர் யாவரும் மகிழ்ந்து இரசித்து நின்றது இப்பொழுதும் எம் கண்முன் நிழலாடுகின்றது. அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Saraswathy Pooja Festival



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி தரும் ஒருமணிநேர கச்சேரி நிறைவடைய வங்கியாளர்களின் சங்கீத ஆலாபனைகளும், அவர்தம் பிள்ளைகளது நாட்டிய வேள்விகள், மிருதங்க கச்சேரிகள், பேச்சரங்கங்கள் என பல்வேறு நிகழ்வுகள் அதனை மெருகூட்டி நின்றன. இறுதியாக யாழ்ப்பாணத்தின் தமிழ்பேசும் நல்லுலகின் புகழ்பூத்த பேச்சாளர்கள் பலர் எமது கிளையில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மகிழ்ந்தனர்.

யாழ்ப்பாணக் கிளையின் ஊழியர் நலன்புரி விளையாட்டுக் கழகத்தின் பங்களிப்போடு கிளையிலுள்ள ஒவ்வொரு பகுதியினரும் இணைந்து பகிர்ந்து பத்து நாட்களையும் பக்திமயமாய் பிரசாதங்கள் படைத்து பகிர்ந்து உண்டு தமது தொழில் பக்தியை தெய்வ பக்தியாய் மாற்றி தெய்வ அனுக்கிரகம் வேண்டி பிரார்த்தனை செய்து மகிழ்வார்கள். கும்பம் வைத்தல் , நவதானியம் விதைத்தல் போன்ற சகல கைங்கரியங்களும் கிளையில் நிகழ்ந்ததை எம்மால் என்றும் மறக்க முடியாததாகும்.

*நாம் அனைவருக்கும் ஒரே*
*மாதிரி திறமை இல்லாமல்*
*இருக்கலாம் ஆனால்*
*அனைவருக்கும் திறமையை*
*வளர்த்துக்கொள்ள ஒரே மாதிரி*
*வாய்ப்புக்கள் உள்ளன.*

*– டாக்கடர் அப்துல்கலாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிவிழாவும் மார்கழி மாதமும்

மார்கழி மாதத்தின் பனியில், மானிட மகனாகப் பிறந்த இயேசு பாலனின் பிறப்பை உலக மக்களே பெருவிழாவாக கொண்டாட ஆரம்பிப்பார்கள். எவ்வித மத வேறுபாடுகளுமின்றி ஒளியின் மைந்தனை வரவேற்கும் மார்கழி மாதத்தின் முதல் நாள் தொடக்கம் தை மாதத்தின் ஆரம்பம் வரை சிறப்பிக் கப்படுகிறது.

இதற்கு எமது யாழ்ப்பாண அதி மேற்தரக் கிளையும் விதிவிலக்கல்ல. ஏழ்மையைத் தேர்ந்தெடுத்து பெத்தலகேம் என்னும் சிற்றூரில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த பாலகனை வரவேற்க கிறிஸ்மஸ் மரம் அமைத்து, அதில் குடில் அமைத்து, அம் மரத்தின் கீழ் பரிசுப் பொருள்கள் வைத்து, வங்கியின் வெளிப்புறமும், உட்புறமும் வண்ணமயமான ஒளியில் மின் விளக்குகள் அலங்கரிக்கப்பட்டு மிகவும் பிரமாண்டமாக காட்சியளிக்கும். இவ் அலங்காரங்களை சிறுவர், பெரியவர்கள் என இரசிக்கும் காட்சியானது மனதிற்கு ஒரு வித மகிழ் வினை ஏற்படுத்துகின்றது.

பாலன் பிறப்பு தினத்திற்கும் வருட ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எமது கிளையில் ஒளிவிழா நிகழ்வானது நடைபெறும். எமது கிளைக்கு அண்மையில் உள்ள ஆலய பாடகர் குழாமும் அதன் அங்கத்தவர்களும், எமது கிளையின் ஊழியர்களும் இணைந்து இன்னிசை கருவிகளை இசைத்து கரோல் கீதங்களை பாடி மகிழ்வார்கள். கரோல் கீதமான Oh holy night என்ற பிரபல கிறிஸ்மஸ் பாடலும் பாடப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். அத்தோடு வங்கியாளர்களுக்கு இறை யாசியும் வாழ்த்துக்களும் வழங்குவார்கள். அன்றைய தினம் எம்மால் அதிகம் எதிர்பார்க் கப்படுபவர் கிறிஸ்மஸ் தாத்தா பானை போல வயிறும், பஞ்சுபோல வெண்மையான தாடியும், சிவப்புநிற ஆடையும், முதுகில் பையில் பரிசுப் பொருட்களையும், இனிப்புப் பண்டங்களையும் சுமந்து கொண்டு பாடல் களுக்கு நடனமாடி வரும் போது நாமும் குதூகலித்து கைதட்டி மகிழும் அந்நேரத்தை வர்ணிக்க முடியவில்லை.

இது மட்டுமல்லாது வாடிக்கை யாளர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துமடல் அனுப்பப்பட்டு அவர்களை மகிழ்வித்து வருகிறோம்.

இவ் நிகழ்வினை எமது யாழ்ப்பாண அதிமேற்தரக் கிளையின் ஊழியர் நலன்புரி விளையாட்டு கழகத்தின் ஒத்துழைப்பில் கிளையிலுள்ள ஒவ்வொருவரினதும் பங்க ளிப்பும் எமது பாலகனின் பிறப்பினை கொண்டாட, அவரை வரவேற்க, எமது மனதில் ஏற்படுகின்ற மகிழ்வினையும் என்றுமே எமது மனதை விட்டு நீங்காத நினைவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைத் தொற்று நோயும் இலங்கை வங்கிக் கடமையும்

"மாற்றமாம் வையகத்தில் வெவ் வேறே வந்தறிவார்" எனும் மணிவாசகரின் கூற்றுக்கிணங்க உலகின் மாறுதல்கள் சகல இடங்களிலும் இடம் பெறும். காலநிலையில், தொழில்நுட்பத்தில், அரசியலில் , பொருளா தார வளர்ச்சியில், நாகரிக நீட்சியில் பொருள் சேவைகளின் புதிய பரிணாம போக்குகளில் சகலதும் மாறும் பண்பு கொண்டவையே ஆகும். மாறும் உலக ஒழுங்கினையும் சுகாதார தொழில்சார் வல்லுநர்களின் எதிர்வு கூறல்களையும் மீறி 2020ம் ஆண்டில் உலகத்தில் தாண்டவ மாடும் கொரோனா வைரஸ் என்னும் கொடிய தாக்கத்தினால் வரும் பொருளாதார போக்குவரத்து சம்பந்தமான தாக்கங்களை யும் அறிந்து தெரிந்து சேவை வழங்கும் கடப் பாட்டிற்குள் வங்கியாளர்கள் உள்ளார்கள்.

சீனா நாட்டின் வுஹான் நகரில் உருவான " கொவிட் 19" என்னும் ஒருவகை மனிதர்களுக்கு இடையே தொற்றும் தீவிர நோய் உலகெங்கும் பரவி உலகிலுள்ள 200 நாடுகளையும் ஆக்கிரமித்து அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, ரஷ்யா போன்ற உலக வல்லரசுகளிலும் பல இலட்சக் கணக்கான உயிர்களை காவு கொண்டு நிற்கிறது. இலங்கையில் 2020 மார்ச் மாத நடுப்பகுதியில் இருந்து நகரங்களை முடக்கி ஊர்களை அடக்கி ஊரடங்கு எனும் பெயரில் தொடர்ந்து 52 நாட்களுக்கும் அதிகமாக மக்கள் முடக்கப்பட்டு சகல தொழில்களும் ஸ்தம்பிதம் அடைந்தன.

பாடசாலைகள், பல்கலைக்கழகங் கள், போக்குவரத்துக்கள், மங்கள, அமங்கல நிகழ்வுகள், அனைத்தும் இரத்துச் செய்யப் பட்டு மக்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டனர். மரண நிகழ்வுகளில் கூட மிக மிகக் குறைந்த நெருங்கிய உறவுகளுடன் கொரோனா நோய் ஏற்பட்டு விடுமோ என்ற பீதியில் இலங்கையில் மட்டுமல்ல உலகிலும் மக்கள் வாழ்ந்தனர், வாழ்கின்றனர். இலங்கைத் திரு நாட்டில் தற்போது வரை (09.11.2020ந் திகதி வரை) 14000 பேர் கொரோனா தொற்றாளர் களாக இருந்தபோதும் இறந்தவர்கள் 36 பேர் மட்டுமே. இருந்தாலும் கொரோனா தொற்றால் இறந்தவர்களின் கிரியைகள், சம்பிரதாயங்கள் எவற்றிற்கும் இடமளியாமல் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுச் சுகாதார அதிகாரியின் அறிவுறுத்தலின் கீழ் அரசு உடல்களை தகனம் செய்தது.

2019 ம் ஆண்டு டிசெம்பரில் தொடங் கிய கொரோனா தொற்று தொடர்பான விளக்கங்களும், பொய்களும், புரிதல்களும், விமர்சனங்களும் தங்கள் தங்கள் வலைப் பக்கங்களில் தங்கள் எண்ணப்படி எந்தவித தார்மீக பொறுப்பும் கடமையும் இன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை வெளியிட்டு மக்களை மிகக் கொடும் பீதியில் வைத்தனர் வைக்க முயன் றனர் எனச் சொல்லுவதில் பெரிதுபடுத்தப்பட்ட செய்தியாக இல்லை என நினைக்கின்றோம்.

இலங்கை நாட்டில் திறன் மிகு அரசு மக்களை முடக்கி வீடுகளில் அடக்கி மாவட்டம் மற்றும் மாகாணங்களுக்கு இடை யேயான பயணங்கள், விமானப் போக்கு வரத்து பலவற்றையும் நிறுத்தி தொற்றாளர் களையும் தொற்று ஏற்பட வாய்ப்புள்ள வர்களையும் கிராமங்களையும் 14 நாட்கள் தனிமைப்படுத்தி முப்படைகளையும் அவர் களது முகாம்களையும் இதற்கென பயன் படுத்தி இலங்கை மக்கள் நிம்மதியாகவும் தொற்றற்றும் வாழ்வதற்கும் வழியமைத்துக் கொடுத்தது.

அது மட்டுமன்றி , இலங்கை வாழ் மக்கள் ஒவ்வொருவரும் அடிக்கடி கைகளை கழுவுதல், வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிதல் 3 அடி சமூக இடைவெளி பேணல் வேண்டுமென நடை முறைகளை அரசு , தனியார் நிறுவனங்கள் மட்டுமன்றி பொதுப் போக்குவரத்து வியாபார நிலையங்கள் போன்றவற்றில் இறுக்கமான சட்டங்களில் அல்லது நேர்த்தி யான நிர்வாகம் ஊடாக இதனை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்தனர்

ஊர் முடக்கம், மாவட்ட முடக்கம், மாகாணப் போக்குவரத்து முடக்கம் என்ப வற்றுக்கிடையே வங்கி நடவடிக்கைகளை அத்தியாவசியமான சேவையென பிரகடனப் படுத்தி ஊரடங்கு வேளையிலும் வங்கியா ளரை கடமைக்கு அழைத்து மக்களுக்கு வங்கி சேவையை வழங்கி வைத்தனர். இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையும் தன் சேவையை மிக உன்னதமான முறையில்/மிக நேர்த்தியான முறையில் வழங்கி நின்றது. இலங்கை வங்கியானது ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஒவ்வொரு கிளையை ஊரடங்கு வேளையில் திறந்து மக்களுக்கு சேவையாற்றி வந்தது. அப்போதைய சூழ்நிலையிலும் தொற்றி னால் உயிர்விடும் நோய் என கருதி அச்சத் துடன் வாழ்ந்த மக்கள் மத்தியில் கடமையை உயிரிலும் மேலானதாக நினைத்து கடமை புரிந்த எம்மவரை இவ்விடத்தில் நினைவு கூறுதல் சாலப் பொருத்தமானதாகும்.

அடிப்படை உணவுகள், மரக் கறிகள், மீன்கள் போன்ற நாளாந்த உணவு தேவைகளைக் கூட பெறுவதில் நாளாந்த கூலி வேலை செய்வோர் பெரும் சிரமத்திற்கு உள்ளானர். மருந்தகங்களுக்கு விசேட சலுகை அடிப்படையில் ஊரடங்கு வேளையில் திறக்க அனுமதி அளித்தனர். இருந்த போதும் , அங்கு மிக நீண்ட வரிசையில் நின்றே மருந்துகளை பெற வேண்டியிருந்தது. இவ்வாறே சகல விற்பனை நிலையங்களிலும் இருந்தது. இந் நிலையிலும் வங்கியாளர் தன் கடமையை புரிந்து வங்கித்தாய்க்கு பெருமை சேர்த்து நிற்கின்றனர். அதுமட்டுமின்றி எமது கிளை ஊழியர்களும் அத்தகு சேவை வழங்கி உயர்ந்து நிற்கின்றனர்.

கொரோனா தொற்றை விலத்தி சமூகமான பொருளாதார ஸ்திரத்தன் மையை பேணிக் கொள்ள அரசாங்கமும் மக்களும் “கொரோனாவுடன் வாழ்தல்” என்ற நிலையில் 2020ஆம் ஆண்டினை கழித்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கை வங்கியி னராகிய நாமும் எம் சேவையினை உன்ன தமான முறையில் வழங்கி வருவதில் பெருமகிழ்வடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கா நினைவலையில் இருந்து சில வரிகள்...

வாழ்வும் வரலாறும் ஒரு வழிப்பாதை.

வரலாறு என்றும் நமக்காகக் காத்திருக்காது.

வரலாற்றைப் படைப்பவர்கள் நாமாகத்தான் இருக்க வேண்டும்.

வாழ்க்கைப் பயணமும் அவ்வாறுதான். அதற்கும் முயற்சியும் பயிற்சியும் வேண்டும்.

அதனால் முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார் என்றானது.

என்றும் முயற்சியும் பயிற்சியும் உயர்ச் சியைத் தரும்.

அது புகழ், மற்றும் வருமானம் ஆதாயம் ஊதியம் என்பவற்றை அதிகரிக்க உதவும்.

வருமானம் ஊதியம், ஆதாயம் அதிகரித் தால் வாழ்வு மேம்படும்.

தனிநபர் வருமானம் அதிகரித்தால் நாடு சுபீட்ச பாதையில் செல்லும்.

ஒரு நாட்டின் தனிநபர் கடனாளியாகவோ அல்லது உச்ச வருமானம் உடையவரா கவோ இருப்பதிலேயே அந்நாட்டின் பொரு ளாதாரம் கணிக்கப்படும்.

பொருளாதார மேம்பாட்டுக்கு வங்கிகளின் பங்களிப்பு இன்றியமையாதது.

இதற்காக இலங்கை மத்திய வங்கியும் ஏனைய வங்கிகளும் நம் நாட்டு மக்களுக்கு உதவுகின்றன.

வரலாற்றில் முதல் முறையாக 2001ல் வரவு செலவுப் பிரச்சனைகள் உலகப் பொருளா தார மந்த நிலை மற்றும் உள் நாட்டுக் குழப்பங்களால் இலங்கை ஒரு பொருளா தார ஒடுக்கத்தை காண நேர்ந்தது.

கொழும்பு பங்குச் சந்தை 2003ல் ஆசியாவி லேயே ஆகக் கூடிய வளர்ச்சியைப் பெற்றி ருப்பதாக அறிவித்தது.

அதனால் தெற்காசியாவில் அதிக தனிநபர் வருமானத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்கியது.

ஆயினும் இந்த வருட ஆரம்பத்தில் உலகை அச்சுறுத்தி பரவிய கொரோனா தொற்று நோய் (Covid -19) காரணமாக பொருளா தாரம் மீண்டும் சரிவுப் பாதையை நோக்கிச் சென்றது.

இந்த வேளையிலும் எமது இலங்கை வங்கி அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய வட்டி வீதங்களைக் குறைத்து பொது மக் களுக்கு கடன் வழங்குவதில் முன்னேற்றம் கண்டுள்ளது.

எனவே, என்றும் இலங்கை வங்கி முதற்தர வங்கியாக "தேசத்தின் வங்கியாளன்" என்ற மகுட வாசகத்தை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் எமது நாட்டில் மக்களின் சேவையில் வலைப் பின்னல் அமைப்புடன் 645 கிளைகளும் 689 (ATM) தானியங்கி இயந்திரங்களும் 123 (CDM) பணப்பரி மாற்ற இயந்திரங்களும் பொருத்தப்பட்ட கிளை களைக் கொண்டு மக்களுக்கு தன்னிகரற்ற சேவை வழங்கி வருகின்றது.

இவ் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை நாட்டின் ஐந்தாவது கிளையாக 02.02.1945ல் ஆரம்பிக் கப்பட்டது.

யாழ்ப்பாணக் கிளையின் பூரண கட்டுப் பாட்டில் இயங்கும் யாழ். கச்சேரிக் கிளை (1970ஆம் ஆண்டு) (இன்றைய மாவட்ட செய லகம் அன்று கச்சேரி என்றே அழைக்கப் பட்டது) இதன் ஒரு பிரிவாக இயங்கி வந்தது.

கச்சேரியில் பணிபுரியும் ஊழியர்களின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கு இக் கிளை உறுதுணையாக என்றும் விளங்குகின்றது.

இக் கிளையில் நிகழ்ந்த மாற்றத்தின் வரலாறு இது.

அந்நாட்களில் யாழ் மேற் தரக்கிளையின் சிரேஸ்ட முகாமையாளராக திரு.R. விஜய சிங்கம் அவர்களும் வடமாகாண செயற் பாட்டு முகாமையாளராக திரு. N. சிவரட்ணம் அவர்களும் வட மாகாண, உதவிப் பொது முகாமையாளராக திரு. B.A அருமைநாயகம் அவர்களும் கடமையாற்றிய காலமது.

கச்சேரிக் கிளை அதிகாரியாக கடமை யாற்றும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

யாழ் கிளையில் தங்கநகை அடகுச் சேவைப் பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொ ழுது இந்த இடமாற்றம் எனக்கு கிடைத்தது.

கச்சேரிக் கிளையில் அந்நாட்களில் தங்க நகை அடகுச் சேவை இடம் பெறுவதில்லை. இக் கிளையில் கடமை புரிகின்ற பொழுது சேவை மனப்பான்மையுடன் நான் பணி புரிந்தமையால் கச்சேரியில் பணிபுரியும் அனேகரது நட்பும் எனக்கு கிடைத்தது.

அந்தவகையில், அரச, அதிபர் ம. கணேஸ் (01.01.2005 - 13.07.2010) கச்சேரி பிரதம கணக்காளர் திரு. எஸ் சண்முகரட்ணம் ஆகி யோருடன் நெருக்கமான நட்பை பேணி வந்தேன்.

அதன் பயனால் அரச அதிபரிடம் ஒரு நாள் "சேர் கச்சேரியில் பணிபுரியும் ஊழியர்கள் பலர் தங்க நகை அடகுச் சேவைக்காக மதிய நேரம் உணவு வேளையில் யாழ் மேற்தரக் கிளைக்கு வருகிறார்கள். இங்கு கச்சேரிக் கிளையில் அந்த சேவையை வழங்கினால் அவர்களது நேர விரயத்தைத் தவிர்க்கலாம்" என்றேன்.

அவரும் அதனை சாதகமாக ஏற்றுக் கொண்டு சம்மதம் தெரிவிக்கவே இவ் உரை யாடலை யாழ் முகாமையாளர், செயற்பாட்டு முகாமையாளர் உதவிப் பொது முகாமை யாளர் ஆகியோர்களின் கவனத்திற்கு தெரியப்படுத்தினேன்.

விடயம் அனைவரின் சாதகமான முடிவுக்குள் வந்தது.

கச்சேரிக் கிளை வங்கியின் செலவில் புதுப் பொலிவு பெற்று, தரைக்கு மாபிள் பதித்து, தங்க நகை அடகுப் பிரிவு தனி அறை உருவாக்கம் கணணி வசதிகள் என்பன கிளையை அலங்கரித்தன. புதிதாக தொலை பேசித் தொடர்பும் கிடைத்தது.

கச்சேரிக் கிளையின் அயல் கிராமங்களான கைதடி, நாவற்குழி, நல்லூர், கல்வியங்காடு, சுண்டிக்குளி, குருநகர் அரியாலை, கொழும் புத்துறை போன்ற இடங்களில் எமது வங்கிக் கிளைகளோ அல்லது இதர வங்கிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைகளோ அப்போது இருக்கவில்லை. இதனால் நாளடைவில் அப்பகுதியல் உள்ள மக்களும் தங்க நகை அடகுச் சேவைக்கு கச்சேரிக் கிளையை நாடினார்கள்.

இவ்வாறான நடவடிக்கைக்கும் அரச அதிபர் திரு.K. கணேஸ் அவர்கள் சாதகமான முடிவினைத் தந்தார்.

நாட்கள் பல நகர்ந்தன. வங்கி நேரம் தவிர்ந்த இதர நேரங்களில் ஊழியர்கள் வங்கிச் சேவையைப் பெரிதும் பெறுவதற்காக பிரதம கணக்காளர் மூலமாக தானியங்கி இயந்திரம் (ATM) ஒன்றை கச்சேரி வாயிலில் அமைப் பதற்கு விண்ணப்பித்தார்கள்.

இதனை முகாமையாளர் ஊடாக உதவிப் பொது முகாமையாளர் மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் ஆகியோர்களிடம் தெரியப் படுத்தினேன்.

காலம் கனிந்து வரும் அதுவரை கச்சேரிக் கிளையின் கொடுக்கல் வாங்கல் (Number of Voucher) பத்திரங்களை அதிகரிக்கும் நடவ டிக்கையை எடுக்கும் வண்ணம் அறிவுறுத் தப்பட்டேன்.

ஆண்டு 2016ல் எனது எண்ணம் பூர்த்தி யாகியது. கச்சேரி வாயிலின் அருகில் எமது இயந்திரம் (ATM) சேவைக்காக அலங் கரித்து நிற்கின்றது.

அதாவது நான் ஓய்வு பெற்ற பின்னர் அது கை கூடியது.

இதன் உள்ளக சேவை முழுக்க கச்சேரிக் கிளையினாலேயே நடைபெறுகின்றது.

வரலாற்றுப் பதிவு வழி விட்டு மகிழ்விக் கின்றது.

இங்கு என் மனத்திரையில் நிழலாடும் மற்றுமொரு சம்பவத்தை பதிவிட விரும்பு கின்றேன்.

எனது கிராமம் கொக்குவில் இங்குள்ள மக்கள் தங்கள் வங்கி நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் அல்லது சுன்னாகம் திரு நெல்வேலி போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

எமது இலங்கை வங்கி யாழ் குடா நாட்டில் தனது கிளைகளை விரிவாக்கம் செய்து கொண்டிருந்த காலம் அது.

அத்துடன் கணினிகளின் மூலம் வங்கிகள் வலைப்பின்னல் அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டு விரிவாக்கம் நடைபெற்றுக் கொண்டும் இருந்தது.

இந்நிலையில் கொக்குவில் கிராமத்தில் ஒரு கிளை ஆரம்பிப்பது என உயர் அதிகாரி களால் தீர்மானிக்கப்பட்டது.

கச்சேரிக் கிளையில் இருந்து தற்காலிக இடமாற்றம் பெற்று கொக்குவில் கிளையின் ஆரம்ப நிகழ்விற்காக ஒதுக்கப்பட்ட இடத் திற்கு செல்ல பணிக்கப்பட்டேன்.

சகல நடவடிக்கைகளையும் உதவிப் பொது முகாமையாளர் திரு. என். சிவரட்ணம் அவர்கள் நெறிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டேன்.

எனக்கு வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய கச்சிதமாக சகல நடவடிக்கைகளையும் செய்து முடித்தேன்.

நல்ல நாளும் வேளையும் குறிக்கப்பட்டது. அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன.

அந்த நாள் எனது வாழ்வில் மறக்க முடியா நிகழ்வைத் தந்த நாள்.

02.09.2009ம் ஆண்டு புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இக்கிளை கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எமது கிராமத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

முதன்மை விருந்தினராக திரு.R. ஜெயேந்திரா யாழ் மாவட்ட செயற்பாட்டு முகாமையாளர் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக திரு. அ.பஞ்சலிங்கம் (முன்னாள் அதிபர் யாழ் இந்துக் கல்லூரி) அவர்களும் திரு. அ. அகிலதாஸ் அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

விசேட விருந்தினராக திரு.வி.சி.சிவநாதன் இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

இன்று புதிய பொலிவுடன் திகழும் இக் கிளையின் அருகில் உள்ள, அயல் கிராமங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பெரிதும் நன்மை அடைகின்றார்கள்.

கொக்குவில் கிளையின் அபரீதமான வளர்ச்சி கண்டு என் மனம் பெருமிதம் கொள்கின்றது.

இன்றும் நம் கிராம மக்களில் சிலர் என்னைக் காணும் பொழுது "நீங்கள் திறந்து வைத்த கொக்குவில் கிளை நன்றாக வளர்ந்து வருகிறது" என்பார்கள்.

வங்கியின் வரலாற்று வரிகளுக்குள் என்னையும் இயக்கிய வங்கித் தாயின் மலர்ப் பாதங்களை வணங்கி எனது வங்கிச் சேவையின் ஓய்வுக் காலம் இனிதே பயணிக்கின்றது.

**எஸ். நடராஜா**
ஓய்வுநிலை வங்கி அதிகாரி,
இலங்கை வங்கி.

*கடவுள் நீ கேட்டதை தரவில்லை என்று*
*கவலைப்படாமல் கெட்டதை தரவில்லை என்று*
*மகிழ்ச்சி கொள்... வாழ்க்கை நிறைவாக இருக்கும்..!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கால டிஜிட்டல் உற்பத்திகளும் எதிர்கால வர்த்தகமும்

தற்போது மாற்றமடைந்து வரும் இவ் விஞ்ஞான தொழில் நுட்ப காலப் பகுதியில் வர்த்தகம் என்பது இன்றியமையாத ஒன்றாகவே திகழ்கின்றது. ஆரம்ப காலத்தில் வர்த்தகமானது பண்டமாற்று மூலம் ஆரம்பித்து தற்போது இணையவர்த்தகம் வரை வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத ஒரு கருத்தாகும். இவ்வர்த்தகமானது எதிர் காலத்தில் எவ்வகையான பரிமாணத்தை அடையும் என்பதை எவராலும் இலகுவாக எதிர்வு கூற முடியாது. ஆனாலும் நிச்சயமாக தற்போது காணப்படுகின்ற வர்த்தகத்தை விட விசேட சிறப்பம்சங்களுடன் பலமடங்கு வேகத்திலும், செம்மையிலும் வளர்ச்சியடைந்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

எதிர்காலத்தில் உருவாக்க எண்ணியிருக்கும் செயற்கை தொழில்நுட்பம் பல புதிய யுக்திகளையும், நுட்பமுறைகளையும் வர்த்தகத்தில் கொண்டிருக்கும். இணைய வர்த்தக முறையில் "Bitcoin", "Forex", "Penny Stocks" ஆகியன பிரசித்தம் பெற்று கொண்டு வரும் இவ்வேளையில் எதிர் காலத்தில் இதனது பங்களிப்பு இன்றியமையாததாகவே காணப்படும். வர்த்தகம் என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் நேரில் சந்தித்து பொருட்கள் அல்லது சேவைகளை பரிமாற்றிக் கொள்வதாகும். ஆனால் மேற்குறிப்பிட்ட இணைய வர்த்தகத்தின் ஊடாக வீட்டில் இருந்தவாறே உலக ரீதியாக வர்த்தகத்தில் ஈடுபடலாம். பங்குப் பரிமாற்றங்களில் ஏற்படும் மாற்றங்களின் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. அம் மாற்றங்களிற்கேற்ப முதலீடுகளை வினைத்திறனாக மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அவ்வாறாயினும் சில அச்சுறுத்தல்களையும் இச்சந்தர்ப் பத்தில் சந்திக்க நேரிடலாம். இணைய ஊடுருவிகள் (Internet hackers) ஒருவரது தனிப்பட்ட தகவல்களை களவாடுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. தற்காலத்தில் ஒருவர் தனது முழு ரகசியத் தகவல்களையும் இணைய அஞ்சலில் சேமித்து வைப்பது வழமையாக காணப்படும் சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் இன்னும் இலகுவாவதற்கும் வாய்ப்புக்கள் காணப்படலாம். அப்படிப்பட்ட இலகுவாதல் தன்மையானது இணைய ஊடுருவிகளுக்கு இன்னும் சாதகமாகவும் அமையலாம்.

டிஜிட்டல் உற்பத்திகளைப் பற்றி கவனம் செலுத்துவோமானால், பௌதீக ரீதியாக உணரமுடியாத இணையத்தினூடாக விற்பனை மற்றும் கொள்வனவு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் பொருட்களையே டிஜிட்டல் உற்பத்திகள் என்று கூறலாம். உதாரணமாக, இணைய மூல வகுப்புக்கள், இணைய புத்தகம், இணைய புகைப்படம் எடுத்தல், இணைய ஒலித் தொகுப்புக்கள் செயலிகள், இணைய சமையல் கலைகள், இணைய வங்கித் தொழிற்பாடுகள் போன்ற பலவற்றைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் மொபைல் வங்கி என்பது ஒரு வங்கி / பிறநிதி நிறுவனங்களால் வழங்கப்படும் ஒரு சேவையாகும். இது Smart phone அல்லது Lap top போன்ற மொபைல் சாதனத்தைப் பயன்படுத்தி தொலை தூரத்தில் நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வாடிக்கையாளர்களை அனுமதிக்கின்றது, இச் சேவையானது 24 மணிநேர அடிப்படையில் கிடைக்கின்றது.

இணையத்தளவங்கி (Internet Banking) மூலம் தற்காலத்தில் அதிக பயன் பெறும் அளவிற்கு அதன் அம்சங்கள் விரிவடைந்துள்ளன. அவையாவன: சொந்த வங்கிக் கணக்குகளுக்கு இடையேயான பணப் பரிமாற்றல்களையும், கட்டணங்களையும் விரைவாகவும் திட்டமிட்டபடியும் செலுத்தலாம், கடனட்டை விபரங்களை அறியவும், கட்டுப்படுத்தவும் முடியும், கடன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலையான விபரங்களைப் பார்வையிடலாம். தகவல்களை பதிவிறக்கம் (download) செய்யலாம், பாதுகாப்பான ஒரு தடவையிலான கடவுச் சொல் (password) வசதியுடன் User ID ஐ சுயமாக unlock செய்யலாம், வங்கி நிலையான கட்டளைக்கு விண்ணப்பிக்கலாம், User IDஐ வேண்டிய நேரம் மாற்றிக் கொள்ளலாம், காசோலை புத்தகங்களுக்கு விண்ணபிக்கலாம் மற்றும் காசோலை கொடுப்பனவுகளை நிறுத்தலாம், இணையத்தள வங்கிச் சேவை மூலம் மேலதிக சேவைகளுக்கு விண்ணப்பிக்கலாம், வங்கிக் கூற்றை பதிவிறக்கம் செய்யலாம், அருகிலுள்ள வங்கிக்கிளை, தன்னியக்க ரெலர் இயந்திரம் (Automated Teller Machine (ATM)) மற்றும் காசுவைப்பு இயந்திரம் (Cash Deposit Machine (CDM)) உள்ள இடங்களை அறிந்து கொள்ளலாம் மற்றும் பல சிறப்பம்சங்களை கொண்டு இவ் இணையத்தள வங்கிச் சேவையானது தற்காலத்தில் விரிவடைந்து செல்கின்றது.

வங்கித் தொழிலில் ஏற்பட்ட போட்டியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் போது, இச் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க வங்கிகள் பலவித புதியபொருட்களையும், சேவைகளையும் அளிக்க முன் வந்துள்ளன. இன்று வங்கிகள் பலதரப்பட்ட சேவைப் பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. மிகக் குறுகிய இடைவெளியில் வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட சேவைக் கடன் அட்டைகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவற்றை வியாபாரிகளும், வங்கிகளும் ஏற்றுக் கொண்டு பணத்திற்குச் சமமாகக் கருதி தங்கள் பொருட்களை விற்பனை செய்யவும் முடிகிறது.

தொழில் நுட்ப துரித வளர்ச்சி காரணமாக டிஜிட்டல் உற்பத்திகள் வங்கியியல் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் வங்கிச் செயற்பாடுகளில் புரட்சியை உண்டு பண்ணியுள்ளது. ATM இயந்திரம் இலத்திரனியல் பழக்க வழக்கங்களைப் பெருமளவில் மாற்றியுள்ளது. வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்குச் செல்லாமலே தங்களின் நேர வசதிக்கேற்ப 24 மணிநேரமும் இந்த ATM இயந்திரம் மூலம் பணத்தைப் பெறக் கூடியதாக உள்ளது. தற்போது வங்கிக் கிளைகளில் கொடுப்பனவு செய்யும் காப்புறுதிக் கட்டணங்கள், தொலைபேசிக் கட்டணங்கள், மின்சார மற்றும் ஏனைய கட்டணங்கள் யாவும் இந்த புதிய தன்னியக்க மாற்று முறையினால் செயற்படுத்தமுடியும்.

இதனைத் தொடர்ந்து தற்போது CDM இயந்திரம் மூலம் பணம் வைப்பு செய்வதற்காக 24 மணி நேர சேவையை பயன்படுத்திக் கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அதுமட்டுமல்லாது Cash Recycle Machine (CRM) மூலம் பணத்தை வைப்புத் தொகையாக ஏற்று பணத்தை உள்ளமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட பாதுகாப்பில் சேமிக்கிறது பின்னர் பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது. மற்றும் Smart Pass Book இன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களது வைப்பு மற்றும் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்ட தொகையை சரியாக இனங்காணவும் முடிகிறது. அதனைத் தொடர்ந்து எல்லா வங்கிகளும் இன்று ஏதோ ஒரு விதத்தில் பயணத் தொழிலில் இணைந்துள்ளன. மற்றைய சேவைகள் போன்று பிரயாணி களுக்கு பிரயாணச்சீட்டு பதிவு செய்து கொடுத்தல், பிரயாணக் காசோலைகள், சர்வதேச் கடன் அட்டைகளைக் வழங்குதல், செல்லும் நாடுகளில் தங்குவதற்கு ஹோட்டல் வசதிகள் செய்து கொடுத்தலென ஒரே முறையில் சகல சேவைகளையும் பிரயாணிகளுக்கு அளித்து வருகிறார்கள். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பிரயாண வசதிகளை இலகுவாகப் பெறுவதுடன் வங்கிகளும் வருமானத்தை பெறுகிறது. அத்துடன் வெளிநாடுகளி லிருந்து உறவினர்களுக்கு அனுப்பும் பணத்தினை பெற்றுக் கொள்வதற்கு வங்கிகள் பின்வரும் வர்த்தக மூலங்களை செயற்படுத்தி வருகின்றன. அவையாவன, Ria, Moneygram, Ez Remit, Xpress money, World remit, Sigue, Cash express, Shift, Western union போன்றவைகளாகும்.

10213(ℓ)

**"B" App**

இலகுவாக வங்கியானது தனது இணையத்தளவங்கிச் சேவைக்கும் கையடக் கத் தொலைபேசி சேவைக்குமென புதிய தொரு தீர்வினை (Solution) வாடிக்கை யாளருக்கு வழங்கியுள்ளது. "B"app ஆனது வங்கியின் வாடிக்கையாளர்கள் தமது விரல் நுனியில் அனைத்து பரிமாற்றங்களையும் சேவைக் கட்டண செலுத்தல்களையும், கணக்குக் கூற்றுக்களையும் பார்க்கக் கூடிய வகையில் மிகப் பாதுகாப்பாக உருவாக் கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் "B" app களை Play Store மூலம் எந்தவொரு Android phone இலும் App Store மூலம் எந்தவொரு Apple phone இலும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். இதனை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் எளிதாக நாளாந்த பரிவர்த்தனைகளை நிர்வகிக்க முடியும்.

**E Statement** (இலத்திரனியல் கணக்குக் கூற்று)

பசுமை வங்கியியலை ஊக்கு விக்கும் முகமாக இலத்திரனியல் வங்கிக் கூற்று நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இவ் இலத்திரனியல் கூற்று சேமிப்பு நடைமுறைக் கணக்குகளிற்கு அடுத்த மாதத் தின் முதல் வேலைநாளின் (1st working day) போது வாடிக்கையாளர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

**Smart Pass Book** (சிமாட்கையேடு)

Smart Mobile கருவிகளினூடாக வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை அதேநேரத்தில் (Real Time) பார்வையிடவும் மற்றும் தேவையான நேரத்தில் கணக்கு நிலுவைகளையும் சிமாட் கையேட்டின் மூலம் அறிந்து கொள்ளவும் முடியும். சிமாட் கையேடானது Google Store இல் இலவசமாக பதிவிறக்கம் செய்யக்கூடிய வழமையான சேமிப்புக் கையேடு, நடைமுறைக் கணக்கு கூற்று ஆகியவற்றின் ஓர் இலத்திரனியல் பிரதியாகும்.

**Smart Fixed Deposit**

இலங்கை வங்கி தனது பசுமை வங்கியியலை ஊக்கப்படுத்த அதிவ சதியான நிலையான வைப்புக் கணக் கொன்றை அறிமுகம் செய்துள்ளது. இக் கணக்கினை ஆரம்பிக்க அல்லது மீளப் பெற அல்லது இரத்துச் செய்ய வாடிக்கை யாளர்கள் எந்தவொரு வங்கிக் கிளை களையும் நாட வேண்டிய தேவையில்லை. விண்ணப்பத்தை நேரடியாகவோ, மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னஞ்சல் மூலமாகவோ, தொலைநகல் மூலமாகவோ, தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும். வாடிக்கையாளர்களின் நடைமுறை, சேமிப்பு கணக்கிலிருந்து பற்று வைப்பதன் மூலம் நிலையான வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்படும். சான்றிதழ் பௌதீக ரீதியில் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுவதில்லை. உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்படும். அதே வேளை வழங்கிய தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவல் (SMS) அனுப்பி வைக்கப்படும். அதே போன்று வைப்புக்கள் முதிர்வின் போது எந்தவொரு இலங்கை வங்கிக் கிளைகளிலும் சாதாரணமாக எழுத்து மூல விண்ணப்பங்களை வழங்குவதன் மூலம் எளிதாக பெற்றுக் கொள்ள முடியும்.

**BOC Smart pay**

இலங்கை வங்கியானது BOC Smart pay எனும் கொடுக்கல் வாங்கல் முறைமையை 2019ம் ஆண்டு தனது 80வது வயது பூர்த்தியின் போது அறிமுகம் செய்துள்ளது. இக் கொடுப்பனவு முறையானது QR (Quick Response) அடிப்படையிலான கொடுப்பனவு முறையாகும். இது ஒரு பணமற்ற (Cashless) இலத்திரனியல் அட்டையற்ற (Cardless) பசுமை வங்கியியல் முறையாகும். இது இலங்கையின் Eco System க்கு ஆதரவு வழங்குகின்ற ஒரு பணப் பரிமாற்றல் முறையெனலாம்.

இந்த 'BOC' Smart Pay App களை வாடிக்கையாளர்கள் தாமாகவே சுயமாக தமது சிமாட் மொபைல் (Smart Mobile) Phone இல் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். வர்த்தக வாடிக்கையாளர்கள் (Merchants) இந்த App களை அருகிலுள்ள வங்கிக் கிளையில் தொடர்பு கொண்டு செயற்படுத்த முடியும். இதன் மூலம், இருபகுதியினரும் நியாயமான கொடுக்கல் வாங்கல் முறையினை அனுபவிக்க முடியும். எந்தவொரு பொருளை கொள்வனவு செய்யும் போதும் பணமோ இலத்திரனியல் அட்டையோ காவிச் செல்ல வேண்டிய தேவையில்லை. அத்துடன் மேலதிகமாக பின்வரும் சேவைகளை இவ் App இல் பெற்றுக் கொள்ள முடியும்.

1. நிலுவை விசாரணை (Balance Inquiry)
2. குறகிய வங்கிக் கூற்று (Mini Bank Statement)
3. கொடுக்கல் வாங்கலுக்கான குறுந்தகவல் (SMS)

இவ்வாறு டிஜிட்டல் உற்பத்திகள் மூலம் பல நன்மைகளை பெறக் கூடியதாக உள்ளது. சுருக்கமாக பார்த்தால் இவற்றால் பொருட்கள் மிகை அல்லது பற்றாக்குறை நிகழும் என்ற அச்சத்தை தவிர்க்கலாம். பொருட்களை சேமித்து வைப்பதற்கு இடம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. நுகர்வோர் தமது கட்டளைகளை விரைவாக பெறக் கூடியதாக இருக்கும். இவ்வாறு நன்மைகள் காணப்பட்டாலும், டிஜிட்டல் உற்பத்தியில் அல்லது டிஜிட்டல் உற்பத்தி விற்பனையில் சில சவால்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. அவற்றுள் சில, பௌதீக ரீதியாக பரீசிலிக்க முடியாமையினால் அதன் உண்மைப் பெறுமதியை அளவிட இயலாமல் போகலாம், பொருளின் உற்பத்தி அபிவிருத்தி தொடர்பில் நிறுவனமானது பாரியளவிலான ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடுவது அவசியமாகக் கருதப்படும் மற்றும் இணைய வர்த்தகத்திலிருக்கும் இலகுதன்மையில் போட்டியாளர்கள் அதிகம் காணப்படலாம். இவ்வாறு பல இருக்கும் சந்தர்ப்பங்களிலும் டிஜிட்டல் உற்பத்தியானது எதிர் கால வர்த்தகத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகவே கருதப்படுகின்றது.

**S.Shanmugathasan**
(B.A.F (Hons), B.A (Jaf), Dip Mgt. Acct. (U.K), MAAT (SL), MLISc. (COL), MBA (RJT))
Senior Asst. Librarian, Vavuniya Campus, University of Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் தோற்றமும் வரலாறும் ஒரு பார்வை

எமது இலங்கை திருநாட்டின் வரலாறு பல்லாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. எமது முன்னோர்கள் சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்டங்களைப் பரிமாறிக் கொண்டதற்கான சான்றுகள் பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. பண்டங்களை பரிமாறிய காலம் முதல் பல்வேறு பரிமாற்ற ஊடகங்களினூடாக இன்றைய பண பரிமாற்ற வடிவமான பௌதீக ரீதியில் புலனாகாத பணப்பரிமாற்றம் வரைக்கும் வளர்ச்சி அடைந்திருக்கின்றோம். இதன் பிரதான ஏதுவான காரணியாக கிழக்கு முதல் மேற்கு வரை வியாபித்திருக்கும் சமுத்திரத்தின் மத்தியில் முத்தாக இலங்கை அமைந்துள்ளதால் பண்டைய காலம் தொட்டு இன்று வரை வான்வழி மற்றும் கடல்வழி ஊடாக வர்த்தகம் செய்வதற்கும் ஏதுவான நாடாக கானப்படுகின்றமையும் நவீன தொழில்நுட்ப வளர்சசியுமேயாகும். அந்தவகையில் இலங்கையின் வெவ்வேறு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் வடிவம் அதன் தோற்றம் மற்றும் வரலாற்றினை சாராம்சபடுத்து வோமாயின்,

1. அனுராதபுர காலம்
2. பொலநறுவை தொடக்கம் கோட்டை வரையான காலம்
3. கண்டிய காலம்
4. காலணித்துவ காலம்
5. இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதி லிருந்தான காலம்

என ஐந்து பிரிவுகளில் வகைப்படுத்த முடியும்.

**1. அனுராதபுர காலத்தில் பயன்படுத்தப் பட்ட நாணயக் குத்திகளாவன:**

- துளையிடப்பட்ட நாணயங்கள் கஹபான
- சுவஸ்திகா நாணயங்கள் யானையும் சுவஸ்திகாவும் கொண்ட நாணயங்கள் மரமும் சுவஸ்திகாவும் கொண்ட நாணயங்கள். சிங்கமும் சுவஸ்திகாவும் கொண்ட நாணயங்கள்
- பிடரிமயிர் இல்லாத சிங்க நாணயங்கள்
- ரிஷப நாணயங்கள்
- லக்ஷ்மி நாணயங்கள்
- கஹவானு அல்லது லங்கேஸ்வரர் நாணயங்கள்
- வெளிநாட்டு நாணயங்கள்
  - உரோம நாணயங்கள்
  - சீன நாணயங்கள்
  - அரேபிய நாணயங்கள்

**2. பொலநறுவை தொடக்கம் கோட்டை வரையான காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகளாவன:**

- மேசா குத்திகள்
- தம்பதெனிய இராச்சியக் குத்திகள்/ மத்திய கால நாணயங்கள்
- சிங்க நாணயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ சேது நாணயங்கள்
❊ மஸ்ஸ நாணயங்கள்

**3. கண்டிய காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகளாவன:**

❊ பணம நாணயங்கள்
❊ அங்குட்டு மஸ்ஸ/ கொக்கு நாணயங்கள்/ லாரின்
❊ தம்பதெனி காசி
❊ சல்லி
❊ இந்தியன் வறகம
❊ துட்டு
❊ பனாமா
❊ தங்கம்

**4. காலணித்துவ காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகளாவன**

**4.1. போத்துக்கேயர் காலம்**

❊ புனித வகை நாணயங்கள்
❊ மலாக்கா - வெள்ளி
❊ பனாமா - வெள்ளி / தங்கம்
❊ தங்க பகோடி
❊ தங்க பணம்
❊ வெள்ளி பணம்
❊ குருசாடோ
❊ சக்ரம்
❊ பணம்
❊ லாரின்ஸ

**4.2. ஒல்லாந்தர் காலம்**

❊ தொய்த்துகள்
❊ ரிக்ஸ் டொலர்
❊ டியூற்ஸ்
❊ சீலாண்டியா
❊ கொலண்டியா
❊ யுற்றெச
❊ மேற்கு பிறிஸ்லாண்ட்
❊ கில்ட்டலாண்ட்
❊ ரூவ்வர்ஸ்

❊ ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் முதலாவது நாணயத் தாள் தொகுதி 1785 மே மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது.




**4.3. பிரித்தானியர் காலம்:**

❊ தாரகைப் பகோடி
❊ பிரித்தானிய ஸ்ருய்வர்
❊ றிக்ஸ் டொலர்
❊ பானம்ஸ்
❊ பார்திங்

ரூபா (இந்திய ரூபா), அரை ரூபா, கால் ரூபா ஒரு சதம், இரண்டு சதம், ஐந்து சதம், பத்து சதம், இருபத்தைந்து சதம் மற்றும் ஐம்பது சதம் தொய்த்துக்கள்

பிரித்தானியர் காலத்தில் மூன்று தாள் நாணயங்கள் வெளியிடப்பட்டன. அவை யாவன;

1. பொது திறைசேரியினால் வெளியிடப்பட்ட தாள்கள் (1827 - 1855) ஒரு பவுண், இரண்டு பவுண்,ஐந்து பவுண்
2. தனியார் வங்கிகளினால் வெளியிடப்பட்ட தாள்கள் (1844 - 1884) பவுண் தாள்கள், ரூபாய்த் தாள்கள்
3. நாணய ஆணையாளர்கள் சபையினால் வெளியிடப்பட்ட தாள்கள் (1884 - 1950) மேலும் பிரித்தானியர் காலத்தில் துணை நாணயத் தாள்கள் வெளியிடப்பட்டன. (1939, 1940)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதிலிருந்தான காலம்;**

1949இன் 58ஆம் இலக்க நாணயச் சட்ட விதியின் பிரகாரம் 1950 ஒகஸ்ட் 28ம் திகதி இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப் பட்டது. நாணயச் சட்ட விதி, நாணயச் சபையினை நிறுவுவதற்கும் நாணயத் தாள்கள், நாணயக் குத்திகள் உள்ளிட்ட நாணயத்தினை வெளியிடுவதற்கும், மற்றும் இதனை நிர்வகிப்பதற்கும் அதிகாரமளிக்கின்றது.

இலங்கையின் உத்தியோகபூர்வ நாணய அலகு - இலங்கை ரூபாய் (Sri Lanka Rupee) ?

இலங்கை ரூபாயின் குறியீடு - தமிழில் - ரூ சிங்களத்தில் - රු, ஆங்கிலத்தில் - Rs.

இலங்கை ரூபாயின் அனைத்துலக நிறுவனக் குறியீடு - LKR

இதுவரை இலங்கை மத்திய வங்கியினால் 1950 இல் இருந்து பதினொரு நாணயத்தாள் தொடர்கள் வெளியிடப் பட்டுள்ளன.

பிரித்தானியர்களால் பயன்டுத்தப்பட்ட நாணயத்தாள்கள் இலங்கையில் 1951 வரையும் நாணயக் குத்திகள் 1963 வரையும் சுழற்சியிலிருந்தது. இக்காலத்தினுள் 1951 மற்றும் 1955 ஆம் ஆண்டுளில் முன்னைய தொடர்கள் மீள வெளியிடப்பட்டன.

**5.1. முதலாவது நாணய தாள் தொடர்** "VIவது ஜோஜ் மன்னர் தொடர்கள்" 1951 ஆம் ஆண்டு - 1ரூபா மற்றும் 10 ரூபா பெறுமதியான 02 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

இத்தொடரின் நாணய தாள்களின் முன் பக்கத்தில் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.

❊ ஒரு ரூபாய் : முன்பக்கத்தில் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் உருவம் பின்பக்கத்தில் அநுராதபுர சந்திரவட்ட கல்லும் படிக்கட்டொன்றின் உருவப்படம்







❊ பத்து ரூபாய் : முன்பக்கத்தில் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் உருவம் பின் பக்கத்தில் அநுராதபுர காவற் கல்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.2. இரண்டாவது நாணய தாள் தொடர் "II ஆவது எலிசபெத் அரசியின் தொடர்கள்"** 1952 ஆம் ஆண்டு - 1, 2, 5, 10, 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான 06 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

இத்தொடரின் எல்லா நாணய தாள்களின் முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவமும் பின்பக்கத்தில் வர லாற்று புகழ்மிக்க இடங்களின் உருவப்படங் களும் பொறிக்கப்பட்டிருந்தன.

❊ ஒரு ரூபாய்: முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவம் பின்பக்கத்தில் அநுராதபுர சந்திரவட்ட கல்லும் படிக்கட்டொன்றும்







❊ இரண்டு ரூபாய்: முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவம் பின்பக்கத்தில் மெதிரிகிரிய வட்டதாது.







❊ ஐந்து ரூபாய்: முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவம் பின்பக்கத்தில் மகா பராக்கிரமபாகு மன்னனின் உருவப்படம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ பத்து ரூபாய்: முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவம் பின்பக்கத்தில் அநுராதபுர காவற்கல்







❊ ஐம்பது ரூபாய்: முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவம் பின்பக்கத்தில் அநுராதபுர சந்திர வட்டகல்







❊ நூறு ரூபாய்: முன்பக்கத்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் உருவம் பின்பக்கத்தில் சிகிரியா சுவர் ஓவியம்







5.3. மூன்றாவது நாணய தாள் தொடர் "இலங்கையின் படைக்கலச் சின்னத்தின் தொடர்கள்" 1956 ஆம் ஆண்டு - 1, 2, 5, 10, 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான 06 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

முதல் வெளியிடப்பட்ட திகதி - 30.07.1956

நிதி அமைச்சர் - திரு. ஸ்டான்லி டி சொய்சா

மத்திய வங்கி ஆளுனர் - திரு. எ. ஜி. ரணசிங்க

இத்தொடரின் எல்லா நாணய தாள்களின் முன்பக்கத்தில் இலங்கையின் அரச சின்னம் பொறிக்கப்பட்டதுடன் பின்பக்கத்தில் முன்னைய அதே வரலாற்று புகழ் மிக்க இடங்களின் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

மூன்று மொழிகளிலும் இலங்கை மத்திய வங்கியின் பெயர் (Central Bank of Ceylon) காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**5.4 நான்காவது நாணய தாள் தொடர்** "எஸ். டபிள்யூ ஆர் டீ பண்டாரநாயக்காவின் உருவப்படத் தொடர்கள்" 1962 ஆம் ஆண்டு - 2, 5, 10, 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான 05 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

இலங்கை பிரதமரின் உருவப்படத்தைக் கொண்ட நாணயத்தாள் முதன் முதல் வெளியிடப்பட்டது.

- 2 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ். டபிள்யூ. ஆர்.டீ.பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
  பின்பக்கத்தில் மெதிரிகிரிய வட்டதாது





- 5 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
  பின்பக்கத்தில் மகா பராக்கிரமபாகு மன்னனின் உருவப்படம்





- 10 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
  பின்பக்கத்தில் அநுராதபுர காவற்கல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ 50 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
பின்பக்கத்தில் அநுராதபுர சந்திர வட்டக்கல்





❊ 100 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
பின்பக்கத்தில் பொலன்னறுவை வட்ட தாது





❊ 50 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
பின்பக்கத்தில் விகாரமாதேவியின் உருவப்படம் மற்றும் ஆலமரம்






❊ 100 ரூபாய் - முன்பக்கத்தில் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களின் உருவப்படம்
பின்பக்கத்தில் மேளகாரர் ஒருவரும் 03 கண்டிய நடனக் கலைஞர்களும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**5.5ஐந்தாவது நாணய தாள் தொடர் "பராக்கிரமபாகு மன்னனின் தொடர்கள்"** 1965 ஆம் ஆண்டு - 2, 5, 10, 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான 05 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

இத்தொடரின் எல்லா நாணய தாள்களின் முன்பக்கத்தில் பராக்கிரமபாகு மன்னனின் உருவப்படம் பொறிக்கப்பட்டதுடன் பின்பக் கத்தில் வரலாற்று புகழ்மிக்க இடங்களின் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

1970ஆம் ஆண்டு 26ஆம் இலக்க வரி ஏய்ப்புச் சட்டத்தின்கீழ் 1970 ஒக்டோபர் 26ஆம் திகதி வரை வெளியிடப்பட்டிருந்த 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான அனைத்து நாணயத்தாள்களும் 1970 நவம்பர் 03ஆம் திகதியின் பின்னர் செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டது.

1970 ஒக்டோபர் 26ஆம் திகதி புதிய நாணயத்தாளில் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவப்படம் பொறிக்கப்பட்டு வெளியிடப் பட்டது. இதில் 4வது தெடரில் காணப்பட்ட முன்னாள் பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டீ பண்டாரநாயக்காவின் உருவப்படத்தினை கையை உயர்த்தி இருக்கும் வகையில் உருவப்படம் பதிலீடு செய்யப்பட்டிருந்நது.

❊ 2 ரூபாய் - முன்பக்கத்தில் பராக்கிரமபாகு மன்னனின் உருவப்படம்
பின்பக்கத்தில் மெதிரிகிரிய வட்டதாது







❊ 5 ரூபாய் - முன்பக்கத்தில் பராக்கிரம பாகு மன்னனின் உருவப்படம்
பின்பக்கத்தில் பொலன்னறுவையில் அமைந்துள்ள நிஸங்க மன்னன் கால சிம்மாசனத்திற்கு துணையாக கல்லினால் செதுக்கப்பட்ட சிங்கத்தின் உருவம்







❊ 10 ரூபாய் - முன்பக்கத்தில் பராக்கிரம பாகு மன்னனின் உருவப்படம்
பின்பக்கத்தில் அநுராதபுர காவற்கல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❊ 50 ரூபாய் - முன்பக்கம்: பராக்கிரமபாகு மன்னனின் உருவப்படம்
பின்பக்கத்தில் அநுராதபுர சந்திரவட்டகல்





❊ 100 ரூபாய் - முன்பக்கம்: பராக்கிரமபாகு மன்னனின் உருவப்படம்
பின்பக்கம்: சிகிரியா சுவர் ஓவியம்





**5.6. ஆறாவது நாணய தாள் தொடர்** “இலங்கையின் படைக்கலச் சின்னத்தின் தொடர்கள்” 1975 ஆம் ஆண்டு - 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான 02 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

இலங்கை முழுமையாக பிரித்தானிய முடியிலிருந்து 1972ம் ஆண்டு மே 22ம் திகதி இலங்கை குடியரசு உருவாகியதன் பின்னர் வெளியிடப்பட்ட நாணய தாள்கள் ஆகும்.

இத்தொடரின் நாணய தாள்களின் முன் பக்கத்தில் அரச சின்னம் பொறிக்கப்பட் டதுடன் பின்பக்கத்தில்

❊ 50 ரூபாய் - சிவனொளிபாத மலைப் பின்னணியில் தேயிலைத்தோட்டம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ 100 ரூபாய் - மெதிரிகிரிய வட்டதாது என்பன பொறிக்கப்பட்டன.





5.7. ஏழாவது நாணய தாள் தொடர் "தேசத்தின் மிருக, தாவரத் தொடர்கள்" 1979 ஆம் ஆண்டு - 2, 5, 10, 20, 50 மற்றும் 100 ரூபா பெறுமதியான 06 நாணய தாள் கள் வெளியிடப்பட்டன.

இலங்கை ஓவியர் லக்கி சேனனாயக் கவினால் வரையப்பட்ட விலங்கு மற்றும் தாவரங்களைப் பிரதிபலிக்கின்ற ஓவியங் களைக் கொண்ட கவர்ச்சியான நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

புதிதாக 20 ரூபாய் நாணய தாள்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்பக்கம் முதன்முறையாக நிலைக் குத்தாக வடிவமைக்கப்பட்டது இக்கலத் திலாகும்.

❊ 2 ரூபாய் - முன்பக்கம் : சென்னிற கெண்டை மீன்
பின்பக்கம் : பல்லி மற்றும் வளவளப்பான பல்லி இனம்





❊ 5 ரூபாய் - முன்பக்கம் : பல்லி மற்றும் வண்ணாத்துப் பூச்சி
பின்பக்கம்: ஆசனிப்பலா மரத்திலிருந்து பறக்கும் அணில் மற்றும் வெள்ளைத் தலை மைனா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ 10 ரூபாய் - முன்பக்கம்: புளியமர உச்சியில் நீண்ட அலகுடைய குருவி
பின்பக்கம் : ஓர்கிட் மலா, மாரத்மல் மலர்ச்செண்டு, மஞ்சள் செவிக் கொண் டைக் குருவி மற்றும் மரத் தவளை





❊ 20 ரூபாய் - முன்பக்கம்: பெரிய குரங்கு மற்றும் தம்பமர உச்சியில் உள்ள மரப் புறா
பின்பக்கம்: கின்கெட்ட மரத்தின் உச்சி யிலிருந்து பறக்கும் புளு தெக்பி பறவை மற்றும் மரத்தின் பக்கத்தில் உள்ள ஓணான் மற்றும் பாம்பு





❊ 50 ரூபாய் - முன்பக்கம்: மரத்தின் மீதுள்ள சிவப்பு கொண்டைக் கொக்கு மற்றும் வண்ணாத்துப்பூச்சி
பின்பக்கம் : ஒரு சோடி காட்டுக் கோழி கள் வெசாக் மலர்ச்செண்டு தியான மரம் மற்றும் ஓணான் இனம் ஒன்று





❊ 100 ரூபாய் - முன்பக்கம்: ஒரு சோடி இலங்கைப் பூக்கள் மாமரத்தின் உச்சி யிலுள்ள மர நாய், பனை மரம், விரியன் பாம்பு
பின்பக்கம்: பாலை மரத்திலுள்ள இரண்டு இலங்கை மரங்கொத்திகள் மற்றும் லெநட தெரிமரத்திற்கு பக்கத்தி லுள்ள வண்ணத்துப் பூச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**5.8. எட்டாவது நாணய தாள் தொடர் "வரலாற்று, தொல் பொருள் தொடர்கள்"** 1981 ஆம் ஆண்டு - 2, 5, 10, 50, 100, 500 மற்றும் 1000 ரூபா பெறுமதியான 07 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.


இந்நாணயத்தாள்களில் தொல்பொருளியல் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டன. புதிதாக 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நாணய தாள்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

❊ 5 ரூபாய் - முன்பக்கம்: பொலன்னறுவை வட்டதாது
பின்பக்கம்: அநுராதபுர காவற்கல்







❊ 10 ரூபாய் - முன்பக்கம்: கண்டி தலதாமாளிகையின் ராஜ உப்பரிகை
பின்பக்கம்: வரலாற்றிற்கு முற்பட்ட களனி ராஜமகா விகாரையின் தாது கோபுரம்





❊ 20 ரூபாய் - முன்பக்கம்: அநுராதபுர சந்திரவட்டகல் மற்றும் காவல் கல்லின் மதில் கல் புனித இடங்களுக்கான நுழை வாயிலில் காணப்பட்ட பெரிய கட்டடம்.
பின்பக்கம்: அநுராதபுர தூபராம தாது கோபுரம் மற்றும் ஓர்கிட் மலர்






❊ 50 ரூபாய் - முன்பக்கம்: வரலாற்றிற்கு முற்பட்ட களனி ராஜமகா விகாரை
பின்பக்கம்: வரலாற்றிற்கு முற்பட்ட பொலன்னறுவை லங்காதிலக விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





❊ 100 ரூபாய் - முன்பக்கம்: அநுராதபுர வேலைப்பாடுகளுடன் கூடிய காவல் கல்லின் மதில் கல்

பின்பக்கம்: ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை புதிய பாரளுமன்ற கட்டிடம்





❊ 500 ரூபாய் - முன்பக்கம்: ஸ்ரீ தலதா மாளிகையில் உள்ள கல்லில் செதுக்கப்பட்ட யானையின் உருவம்

பின்பக்கம்: அநுராதபுர அபயகிரி தாது கோபுரம் மற்றும் கீழே மலர்ச்செண்டின் மீது ஓய்வெடுக்கும் குருவியும் வண்ணாத்துப்பூச்சியும்




❊ 1000 ரூபாய் - முன்பக்கம்: மகாவலி நீர்த்தேக்கத்திற்குரிய அணைக்கட்டின் ஓவியம்

பின்பக்கம்: கந்தளாய்க் குளம் மற்றும் மயிலின் படம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.9. ஒன்பதாவது நாணய தாள் தொடர்**
"வரலாற்று, அபிவிருத்தி தொடர்கள்"
1987 ஆம் ஆண்டு - 500 மற்றும் 1000 ரூபா பெறுமதியான 02 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

Central Bank of Ceylon என்பதிலிருந்து Central Bank of Sri Lanka என மாற்ற மடைந்தது.
மேம்படுத்தப்பட்ட பாதுகாப்புக் குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

❊ 500 ரூபாய் - முன்பக்கம்: ஸ்ரீ தலதா மாளிகையில் உள்ள கல்லில் செதுக்கப்பட்ட யானையின் உருவம்
பின்பக்கம்: அநுராதபுர அபயகிரி தாது கோபுரம் மற்றும் கீழே மலர்ச்செண்டின் மீது ஒய்வெடுக்கும் குருவியும் வண்ணாத்துப்பூச்சியும்





❊ 1000 ரூபாய் - முன்பக்கம்: மலைநாட்டின் காட்சியினை பின்னணியில் கொண்ட விக்டோரியா அணைக்கட்டு
பின்பக்கம்: றுகுணு பல்கலைக்கழகம் மற்றும் மயிலின் படம்





**5.10. பத்தாவது நாணய தாள் தொடர்**
"வரலாற்று, தொல் பொருள் தொடர்கள்"
1991 ஆம் ஆண்டு - 10, 20, 50, 100, 500 மற்றும் 1000 ரூபா பெறுமதியான 06 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

அத்துடன் 2006 ஆம் ஆண்டு - 2000 ரூபா பெறுமதியான நாணய தாள் வெளியிடப் பட்டது.

இலங்கையில் அதிக காலம் சுற்றோட்டத்திலிருந்த நாணய தாள் தொகுதி இதுவாகும்.

❊ 10 ரூபாய் - முன்பக்கம்: வேலைப்பாட்டுடன் கூடிய கல்லிலாலான சிங்கத்தின் உருவம் மற்றும் நாணயத்தாளின் மத்தியில் சந்திரவட்டக்கல்
பின்பக்கம்: பழைய பாரளுமன்றக் கட்டடம் (இன்றைய ஜனாதிபதி செயலகம்) மற்றும் மலர்ச்செண்டு. நாணயத் தாளின் மேல் பகுதியில் லதுவாகியா எனும் கொக்கு இனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❊ 20 ரூபாய் - முன்பக்கம்: பாரம்பரிய சிங்கள முக மூடி மற்றும் கீழே பக்கத்தில் பண்டைய படர்கொடியொன்றின் வடிவம் பின்பக்கம்: கம்பத்தில் நின்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற இரண்டு கடற் றொழிலாளர்கள். நாணயத் தாளின் மேல் மூலையில் மீன்களின் உருவப்படம். கீழே சுண்ணாம்பு கற்பாறை மீதுள்ள தாவரம்.





❊ 50 ரூபாய் - முன்பக்கம்: வேடம் தரித்த ஒரு பாரம்பரிய சிங்கள நடனக்கலைஞர். வலது பக்கத்தின் மத்தியில் காவற்கல். மத்தியில் சந்திரவட்டக்கல்.

பின்பக்கம்: வேலைப்பாடுகளுடன் கூடிய வாளொன்றின் கைப்பிடி, வண்ண வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு தாம் பாளம் மற்றும் அநுராதபுர துாபராம தாது கோபுரம் மற்றும் பின்னணியில் ஜேதவன ராம தாதுகோபுரம்





❊ 100 ரூபாய் - முன்பக்கம்: பண்டைய கால அலங்காரத் தாம்பாளம் மற்றும் சந்திர வட்டக்கல்.

பின்பக்கம்: இரண்டு பச்சைக்கிளிகள் மற்றும் மலைநாட்டுப் பின்னணியில் கொழுந்து பறிக்கும் இரண்டு பெண்கள்.





❊ 500 ரூபாய் - முன்பக்கம்: இரண்டு மேள காரர்கள் மற்றும் கண்டிய நடனக் கலைஞர் ஒருவர், சந்திரவட்டக்கல் மற்றும் ஸ்ரீ மகா போதியின் படம்.

பின்பக்கம்: அநுராதபுரம் ருவன்வெலி மகாசாயா, ஓக்கிட் மலர், மீன்கொத்திப் பறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






❊ 1000 ரூபாய் - முன்பக்கம்: வலது பக்கத்தில் அலங்கரிக்கப்பட்ட யானையும் யானைப்பாகனும்.

இடதுபக்கத்தில் மத்தியில் தலதா பேழையைத்தாங்கி நிற்கின்ற யானை மற்றும் சந்திரவட்டக்கல். அதற்கு கீழால் பின்னிய அன்னப் பறவை வடிவமைப்பு. கீழே சிங்க வேலைப்பாடு

பின்பக்கம்: ஸ்ரீ தலதா மாளிகையின் பத்திரிப்பு. பின்னணியில் இரண்டு மயில்கள் மற்றும் தாமரை மலர்கள்






❊ 2000 ரூபாய் - முன்பக்கம்: சிகிரிய கற்பாறை மற்றும் ஆலவட்டம்

பின்பக்கம்: சிகிரிய பெண்களின் ஓவியம்






❊ முதலாவது ஞாபகார்த்த நாணயத்தாள் 1998 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் 200 ரூபா பெறுமதியான பொலிமர் நாணயத்தாள் இலங்கையின் 50வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ இரண்டாவது ஞாபகார்த்த நாணயத் தாள் 2009 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் 1000 ரூபா பெறுமதியான நாணயத்தாள் இலங்கையில் சமாதானமும் சுபீட்சமும் உருவானதை முன்னிட்டு வெளி யிடப்பட்டது.







**5.11. பதினோராவது நாணய தாள் தொடர்** "அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக் கலைஞர்கள்" 2011 ஆம் ஆண்டு - 20, 50, 100, 500, மற்றும் 1000 பெறுமதியான 05 நாணய தாள்கள் வெளியிடப்பட்டன.

2011 ஆம் ஆண்டு - 5000 ரூபா பெறுமதியான நாணய தாள் வெளியிடப்பட்டது. கடுமை யான பாதுகாப்புப் பண்புகள் அறிமுகப் படுத்தப்பட்டன.



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஞாபகார்த்த நாணயத் தாள் 2013 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் 500 ரூபா பெறுமதியான நாணயத்தாள் பொது நலவாய அரசுத் தலைவர்களின் மாநாடு 2013 (CHOGM Sri Lanka) முன்னிட்டு வெளியிடப் பட்டது.




ஞாபகார்த்த நாணயத் தாள் 2018 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியினால் 1000 ரூபா பெறுமதியான நாணயத்தாள் இலங் கையின் 70வது சுதந்திரதினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டது.




**நா.ஐங்கரேசன்**
(BIT, AIB, PgDISM(Col), PgDEBM(IBSL))
நிறைவேற்று உத்தியோகத்தர்,
உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வியாபாரச் செயன்முறைகள் மீளமைத்தல் பிரிவு,
இலங்கை வங்கி, தலைமையகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார் புகழும் பண்பமைந்த வங்கியதன் பவளவிழா

பற்றும் வரவும் மட்டுமின்றி
பக்குவமாய் பல வாழ்க்கைத் தத்துவங்கள் சொல்லித்தரும்
எம் வங்கித் தாய்க்கு முதல் வணக்கங்கள்.

தேடித் தமிழ் எடுத்து தேன் தமிழைச் சொல்லாக்கி
வனப்புறவே வானுயர்ந்து நிற்கின்ற எம் வங்கித் தாய்க்கு
கவிபாடும் தகுதி எனக்கில்லை என்றாலும்
கண்டதாலும் கலந்து பேசியதாலும்
எழுந்த சில வார்த்தை கொண்டு
எழிலாய் நிற்கும் உனக்கு
என் இனிய சொற் தொகுப்பு.

படித்தவரும் பாமரரும் பல்கலையில் கற்றவரும்
படியேறி உனை நாடி பல சேவை வேண்டி நிற்பர்.
இன்முகமும் இன்சொல்லும்
எல்லோரும் ஏற்கின்ற உரையாடல் பக்குவமும்
வருகின்ற மக்களது உளங்கவரும்.

எழுபத்தைந்தாண்டு என்னும் நீண்ட பெரும் தசாப்தத்தில்
எழுந்துயர்ந்த அத்தனையும் விடியலுடன் உனைத்தேடி வந்துவிடும்.
கடின உழைப்புச் சொந்தக்காரர் வங்கியதன்
பந்தமுள்ள பாசமுள்ள எண்ணத்தின் உயர்வன்றி வேறில்லை

கடதாசி வங்கிமுதல் கணனியால் உலகாளும் எண்ணியல் வங்கிவரை
எல்லா முயற்சியிலும் முதன்மை பெறும் வங்கியதன் புதல்வர் நாம்
பொய்யுமில்லை புனைந்தெழுதும் முடிவுமில்லை
கையிலே உள்ள போனில் அனைத்து வகைக் கணக்குகளும்
உள்ளடங்கும் எண்ணியல் வங்கியாளர் நாம்

வாகன ஒழுங்குபடுத்தலுடன் தொடங்கும்
வாடிக்கையாளர் சேவை வாண்மைமிகு இன்முகத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி பெற்று நிற்க
வரிசையில் நின்றாலும் வார்த்தைகளால் வரவழைத்து
உடல் மொழிகளால் பல பகன்று
சினம் கொள்ளா சிந்தனையை உருவாக்கி வந்து நின்று
சேவை பெற்று மீண்டும் செல்லும் சேவையினை வழங்கி நிற்பர்

காசினைப் பெற இனிக் கவுண்டரும் தேவையில்லை என
பக்குவமாய் சில வார்த்தை சொல்லி நின்று
பற்று அட்டை பெறவைத்து வங்கிப்
படலையிலே நிற்கின்ற பணம் வழங்கும் இயந்திரத்தில்
பணம் பெறும் வண்ணம் சொல்லி நிற்பர்.

காசு பெறுதலா? இல்லை.. இல்லை....
காசு வைப்பிடுதலும் அங்கே செய்வர்.
காலை முதல் மாலை வரை களிப்புடனும்
கனிவுடனும் கண்ணியமாய் வழிநடத்தும் முகாமையுடன்
முழுதாய் பங்களித்து வானுயர உயர்ந்து நிற்கும்
வங்கியதன் புதல்வராய், வந்த விருந்தோம்பி
வரு விருந்தை எதிர்பார்த்து
சொந்த உறவோடு சொல்லாடல் பகிர்ந்து நின்று
எந்த நிலையிலும் எரிச்சலுறா சேவையினை
கொடுத்து நிற்பர், கொடுத்தே .... நிற்பர்.

ஊரடங்கு, உள்ளூர் யுத்தம் முதல்
கொரோனா எனும் கொடுநோய்கள் வரை
வங்கித்தாயின் பெருமை காத்து நின்ற உத்தமர்கள் எம்மவர்கள்
உயிர் பறிக்கும் ஆயுதங்கள்
உயிர் குடிக்கும் நோய்க் கிருமி
எதுவாக இருந்தாலும் உயிர் நமக்கு வங்கியென
உயர்ந்த பணியாற்றியவர் நம்மவர்கள்

கட்டளைகள் அத்தனையும் கலக்கமின்றி ஏற்று
கடமைதனைக் கண்ணியமாய்
புரிந்த நின்ற புண்ணியர்கள் எம்மவர்கள்

மரக்கறிகள் இல்லை மலிவான பொருட்கள் இல்லை
மருந்துக்கும் தட்டுப்பாடு அத்தனைக்கும் கட்டுப்பாடு
எத்தனை தான் துன்பம் வந்தாலும்
வங்கியின் வசை அகற்றி
வாழ்ந்து நின்ற கண்ணியர்கள் எம்மவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வு, குடிநகர்வு செல்லிடமெல்லாம்
வாழ்விடமாய் சென்று வாழ்ந்த போதினிலும்
எம் தாயே வங்கியென்று எப்போதும்
காத்து நின்ற மூத்தவர்கள் எம்மவர்கள்.

அலையெனவே வந்தாலும் வேலை மலையெனவே நின்றாலும்
காலையிலே சென்றாலும் மாலையிலே வந்தாலும்
மன மகிழ்வே முதன்மையெனச் சிந்தித்துத் தம் கடமை
தலையெனவே எண்ணும் நம்மவர்கள் என்றும் முன்னவர்கள்!

பசியென்ன தூக்கமென்ன என்ன Busy யாக இருந்தாலும்
வாடிக்கையாளர்களை வரவேற்கும் வாடிக்கை கொண்டவர்கள்
இது வேடிக்கையல்ல, விண்ணுயர உயர்ந்து நிற்கும்
புனிதப்பணி கொண்டவர்கள் நம்மவர்கள்!

படித்தவர்க்கும் உண்டு தொழில் பார்ப்பவர்க்கும் உண்டு
மழலைக்கும் உண்டு விடலைக்கும் உண்டு
மாதர்க்கும் உண்டு மணமானவர்க்கும் உண்டு
மூத்தவர்க்கும் உண்டு முதிர்ந்தவர்க்கும் உண்டு
பரிசுகளும் உண்டு உயிர்க்காப்புறுதியும் உண்டு
எத்தனை எத்தனை கணக்குகள் இருப்பினும்
அத்தனைக்கும் தனிப்பண்பமைத்திட்ட வங்கியாளர் நாம்.

புத்தகமும் உண்டு புத்தகம் இல்லாத மின்னஞ்சல் கணக்குமுண்டு
குறும்செய்தி வசதியுடன்
உள்ளங்கையில் உலகை வைக்கும் இணைய வங்கியுமுண்டு
எவ்வேளை என்றாலும் அவ்வேளை அழைத்தால்
அலைபேசியில் வரும் வங்கி வசதிகளும் உண்டு

பார்ப்பவருக்கு ஈர்ப்பு தரும்
பார் புகழும் பண்பமைந்த வங்கியதன்
ஊர் கூடி விழா நடத்தும் -பவள
மலரதனின் வாழ்த்துக் கூறும்
கவிதையிது வாழ்க வாழ்க
புவியதனின் இருப்பு வரை வாழ்க
புவியாளும் இறைவனின் ஆசியுடன்...

**கு.சிவஞானசுந்தரம்**
பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ். அதி மேற்தரக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75th Anniversary Celebrations' Executive Committee - 2020



Seated From L to R : Mrs. M. Sathees, Mr. S. Gobynath, Mr. K. Sivagnanasundaram (Chief Manager), Mr. S. Krishnaa, Mrs. P. Mugunthan.

Standing From L to R : Ms. G. Subajini, Mr. R. Kirushanthan, Mr. T. Kajatheepan, Mrs. S. Karthiga

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

இலங்கை வங்கி யாழ் அதிமேற்தரக் கிளையின் பவள விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதற்கும், பவளவிழா மலரினை சிறப்பாக வெளியீடு செய்வதற்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களிற்கும் குறிப்பாக பின்வருவோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பவள விழாவுக்கு சமூகமளித்து சிறப்பித்த இலங்கை வங்கி பணிப்பாளர் சபைத் தலைவர், மற்றும் சமூகமளித்தும் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பொதுமுகாமையாளர், பிரதிப்பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள், வங்கி உயர் முகாமைத்துவ அங்கத்தவர்கள் ஆகியோருக்கும்,

பவளவிழாவுக்கு சமூகமளித்து ஆசியுரை வழங்கிய மதகுருமார்களுக்கும்,

இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்கிய பிரதம செயலாளர்-வடமாகாணசபை, மாவட்டச் செயலர் - யாழ்ப்பாணம், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர், யாழ் மாநகர சபை முதல்வர், யாழ் வணிகர்கழகத் தலைவர், ஓய்வுநிலை வங்கி உயர் அதிகாரிகள், கடந்தகால முகாமையாளர்கள் ஆகியோருக்கும்,

பவளவிழா மலருக்கு கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய வங்கியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பவளவிழா நிகழ்வின் போது மேடை அலங்காரம், ஒலி அமைப்பு வழங்கியவர்களுக்கும், புகைப்படக் கலைஞர்களுக்கும்,

இம் மலரினை சிறப்புற வடிவமைத்து அச்சிட்டுத் தந்த குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும்,

பவளவிழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு சகலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய எமது கிளையின் பிரதான முகாமையாளர், வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகளுக்கும் மற்றும்,

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளை உவகையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**75ம் ஆண்டு நிறைவு விழாக்குழு,**
**இலங்கை வங்கி,**
**அதிமேற்தரக்கிளை,**
**யாழ்ப்பாணம்,**
*12.12.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

Guru PRINTERS
021 222 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org